ரிஜிஸ்டர் நெ. 2041.　　　　தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1--12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
தொடர்ந்து அடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8.　　ஈரோடு, ஆங்கிரஸ-ஹு வைகாசி-மீ 30-உ (12—6—1932)　　மலர் 7.

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம், சாமி

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

டப்பி 1க்கு ரூ. 2.　　தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி; ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான சற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி. S. I.

தாது புஷ்டிக்கு

"கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம்.　　விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

"குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக் கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

"ரிவோல்ட்."

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. பகுத்தறிவேவிடுதலே அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... 0—6—0
5. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
6. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
7. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
8. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

"சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
2:30-30வது வீதி ரெங்கூன்.

LEPROSY, LEUCODERMA PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc:

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

Read.

The 'Citizen'

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

கோஷாயி பாதுஷா மாத்திரை.

விபசாரத்தினால் ஜெனித்த சர்வரோக சங்காரணி.

Dr. T. K. V. Chalam.

ஆண், பெண் அனுபவிக்க அனுபவத்தில் முதன்மை பெற்றது. 7 நாள் 14 மாத்திரை உபயோகிப்பவர்களுக்கு, விபசார நடத்தையில் ஜெனித்த சர்வ ரோகங்களையும் சங்கரித்து திடதைரிய தேஜஸ்ரூபியாய் திகழச்செய்யும் அன்பு தொண்டன்.

கோஷாயி பாதுஷா மாத்திரை 14 கொண்ட சீசா 1க்கு ரூ. 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு. உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

உதவி டாக்டர், T. K. V. Chalam. } டாக்டர் B. A. எதிராஜ். (காலரா பைரி)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)
பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

கூட்டு.

கோவிலால் சன்மார்க்கம் வரவேண்டியவர்கட்கே வரவில்லை.

3-ம் பாகம்.

[கைவல்யம்]

என் அன்பான தம்பி! சன்மார்க்கமும், ஒழுக்கமும் உண்டாகி தெய்வபக்திமிகுந்து அதனால்மேலும் தெய்வத்தை வழிபட்டு மோக்ஷமடையவே கோவில்கள் ஏற்படுத்தினர்கள். இப்பொழுது கோவில்களில் அருட்சோதி விளங்காமலில்லை. சில நாளுக்குமுன் திருச்செந்தூருக்குச் சர்ப்பக்காவடிகள் போனதாக நீ பத்திரிகையில் படித்திருப்பாயே? ஒரு ஊரிலிருப்பவனுக்கு இன்னொரு ஊரில் இன்ன மரத்தில் பாம்பிருப்பதாகசொர்ப்பனமாவதும், சொர்ப்பனம் கண்டமனிதன் அந்த மரத்தடிக்கு வருவதும், வந்தவுடன் பாம்பு தானகவருவதும் அதைக்காவடிகட்டி கோவிலுக்குக் கொண்டு வந்து அவிழ்த்துவிட்டால் கோவிலுக்குள் போய்விடுவதும் முருகன் அருளல்லவா? அதை எத்தனையோ ஜனங்கள் பார்த்தும் ஆச்சரியப் பட்டுமிருக்கிறார்களே?

என்னருமையண்ணா! தாங்கள் சொல்லுகிறபடியே கோவில்களேற்பட்டிருக்கலாம். கோவில்கள் இப்பொழுது எப்படி நடக்கின்றன? அதனல் சன்மார்க்கம் எப்படிக்கற்பிக்கப்படுகிறது? சன்மார்க்கமும், ஒழுக்கமும் கோவிலையடைந்தவர்களை எவ்வளவு தூரம்உயர்த்தியிருக்கிறது? அதனல் சனசமூகம் அடைந்த நன்மைகளென்ன? நன்மை ஏற்பட்டாலும் தீமையாகவேயிருப்பதால் உபயோகமென்ன? நீங்கள் சொல்லும் நன்மையோ தொலை தூரத்தில் கண்ணிற்கும் மனதிற்கும் எட்டாத நன்மையாகவிருக்கிறது. நான் சொல்லும் தீமையோ கண்ணிற்கும் மனதிற்கும் எட்டி சனசமூகத்தில் பகை, கொடுமை, விபகாரம், விபசாரம் வீண் பொருள் செலவுமுதலியவைகளுக்கு மூலகாரணமாகவிருக்கிறது.

கோவிலால் சன்மார்க்க ஒழுக்கம் வந்தே தீரவேண்டிய முதல்பாத்தியதையுடையவர்களான குருக்கள், அர்ச்சகர்கள், குடி விபச்சாரம் முதலியவைகளுக்கு இருப்பிடமாகவிருக்கிறார்கள். கோவிலைக்கொண்டு சன்மார்க்க ஒழுக்கங்களை ஜனங்களுக்குக்கற்றுக்கொடுக்க கடமைப்பட்டவர்களான மகந்து, மடாதிபதிகளோ விபகாரம், விபசாரம் கொலை முதலியவைகளில் ஆணவமுடையவர்களாகவிருக்கிறார்கள். கோவிலை சன்மார்க்க ஒழுக்கத்தில் நடத்த ஏற்பட்ட தர்மகர்த்தா, டிரஸ்டி முதலியவர்களுக்கு கோவில் சொத்துக்கள் சூதில் ஜெயித்த பொருளாகத்தோன்றுகின்றன. கோவில்கட்டி கும்பாபிஷேகம் செய்கிறவர்களோ குடித்தனக்காரர்களை வட்டிமேல் வட்டியாக வாட்டிப்பிழிகிறார்கள். கோவிலுக்கு மேலதிகாரியாய் கைங்கிரியம் செய்துவரும் ஜமீன், மிட்டா,மிராஸ், பண்ணை முதலிய எஜமான்கள் தங்கள் ஆடம்பரச் செலவிற்கும் எல்லாக்கைங்கிரியச் செலவிற்கும் தங்கள் குடிகளை வாட்டி, கசக்கி வடிகட்டிவிடுகிறார்கள். கோவில் பிராமணன் தக்ஷிணை வாங்கிக்கொள்ளுவதில் அவன் முழுக்கருத்தும் செல்லுகிற தேயல்லாமல் சன்மார்க்க ஒழுக்கம் கற்றுக்கொடுப்பதை விட்டு விட்டான். கோவிலால் ஏற்பட்ட ஜாதிக்கட்டின் விதிகளும், அதனல் ஏற்படும் தகராறுகளும் பொறுக்க முடியாதபடி பாரமாய்விட்டன. கோவிலால் ஏற்பட்டிருக்கும் கிரியைச்சடங்குகளோ வீண் செலவுமிருந்தும் சிநேகவழி குறைந்தும் வேஷபாத்திரமான. கோவில் பக்தியில் ஈடுபடும் பக்தர்களிடம் குருக்கள் கொள்ளையோ தீவிரமாகவிருக்கிறது. கோவிலால் மேற்குலத்தார் என நினைக்கப்படுகிறவர்கள் பொது ஜனத்தின் மதிப்பை வேண்டி நிற்கிறார்களேயல்லாமல் கைமாறுகக்காய்ப்பில்லை. கோவிலில் பிராமணனுக்குப்பொருள் தானமும், அன்னதானமும் கொடுத்தால் மோக்ஷவழி திறக்கப்படுமென்று சொல்லப்படுவது போலவே கோவில் தெருசனைக்கு வரும் பிரபுக்களால் பொருள் பெற்று வயறு நிறைத்து பணக்காரன் போவதற்கு மோக்ஷவழியைத்திறந்து விடுவதற்குக்கோவிலில் கூடியிருக்கும் பார்ப்பார்கள் ஒன்றரைவயறு உண்டு அதையும் குற்றம் சொல்லி தக்ஷிணை வாங்கித்திண்ணையில் சீட்டாடி ஜெயித்தவன் தேவடியாள் வீடுபோய் தோற்றவன் வம்பிழுத்து வாயாடி வழக்குறைத்து பொய் சாட்சிக்குப்பொழுதைப்பார்த்திருக்கும் பக்குவம்தானே புண்ணியலோகப் பொருப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்களுக்குக்கோவிலால் வந்த சன்மார்க்க ஒழுக்கமாகவிருக்கிறது. கோவிலுக்குள்ளேயே குருக்கள்களால் இரண்டிடங்களில் இரண்டு கொலைகள் செய்யப்பட்டு தண்டனை அடைந்ததாக நீங்கள் பத்திரிகையில் படித்ததில்லையோ? இவர்களுக்கெல்லாம் வரமுடியாத சன்மார்க்க ஒழுக்கங்களை கோவில்கள் நமக்கென்ன கற்பித்துவிடப்போகின்றன. உண்மையைச்சொல்லுவதானல் கோவிலும் அதனல் ஏற்பட்ட நம்பிக்கையும் அதனல் பணம் செலவு செய்கிறவர்களின் அறியாமையும் மேற்சொன்னவர்களின் சன்மார்க்க ஒழுக்கங்களைக் கெடுத்துவிட்டது.

அதுவுமல்லாமல், பெருங்கோவில்களையுடைய ஊர்களில்தான் விபசார விடுதியும், விபசாரமும், விபசார சௌகரியமும், கள்ளு சாராயக்கஞ்சாக்கடைகளின் குத்தகை உயர்வும் அதிகமாகவிருக்கின்றன. கோவிலைச் சேர்ந்த ஊர்களிலுள்ள ஜனங்கள், தெரிசனைக்கு வரும் பக்தகோடிகள், அர்ச்சர்கள், குருக்கள், இவர்கள்பந்துக்கள்இவர்களுக்கு சாமக்கிரிகைசேகரம்செய்துகொடுக்கும் வியாபாரிகள் ஆகியஇவர்களே அநேகமாகவிருப்பார்கள்.இவர்களால்தானே அங்குவிபசாரமும் குடியும் பெருத்திருக்கவேண்டும். இவர்களெல்லாம் கோவில் தெரிசனையில்லாதவர்களா? சுவாமிக்கு அம்மனேடு கூடியிருக்கும் பள்ளியறை ஏற்படுத்தி அதற்கு வேண்டிய பட்சண பழவர்க்கம் வைத்துப் பூசைசெய்து பள்ளியறையில் சுவாமியை அம்மன் பக்கம் படுக்கவும்வைத்து அப்பொழுதே அதிலுள்ள அத்தனையும் குருக்களுடைய பள்ளியறையான தாசி வீட்டுக்கு அனுப்பும் குருக்கள் தினமும் சுவாமியைத் தொட்டுப்பூசித்து சுவாமி தெரிசனம் செய்கிறவரல்லவோ? குருக்களுக்குத் திருட்டும் தேவடியாள் வீடுந்தான் கோவிலால் வந்த சன்மார்க்கமா? குருக்களுக்குக் கோவிலால் திருட்டும் விபசாரமுந்தான் வருமோ? அது ரிஷியின் சாபத்தீடு என்று சொல்லி, ஆனலும் அவனுக்கு மோக்ஷம்தான் என்று சொன்னலும் சொல்லுவீர்கள் போலும். பெரியபெரிய மேளக்கச்சேரிகள், சின்ன மேளக்கச்சேரிகள், பூப்பல்லாக்குகள் வாசனைகள், அலகாரங்கள், அதிகாரங்கள், அழைப்புகள், வைரங்கள், ஆடம்பரங்கள் முதலியவைகளால் கோவில் உற்சவங்களை நடத்தும் மடாதிபதிகள், பணக்காரர்கள் ஆகிய இவர்களுக்கும், கோவில் சாமியைப் போல பெண்சாதியைப்பின்னே விட்டு வைப்பாட்டியுடன் முன்னேபோய் அதுவும்பத்தாமல் தேவடியாள் வீடுபோகும் சுவாமியின் வசந்த உற்சவத்தை நினைக்கும் சன்மார்க்கம்தானே கோவிலிலிருந்து கிடைக்கும்; கோவிலில்இருப்பது தானே வரும். பெரிய கோவில்களிருக்கும்ஊர்களிலுள்ள பிராந்திபுட்டிகளெல்லாம் நிமோனியாவென்னும் கப்வாத சுரத்தின் மருந்துக்குத் தானே போய்ச்சேருகிறது.

நமது கோவில்களில் பெரிய கோவில்ராமேஸ்வரம். தீர்த்தயாத்திரைக்கு முக்கியமான முதலிடம் அர்ச்சகர்கள், குருக்கள், புரோகிதன், தானம் வாங்கும் பிராமணன், பிராமணபோஜனத்தை உண்ணும் பார்ப்பான், பாவத்தை பரிகரிக்கும் சாஸ்திரி, பாவத்தை ஏற்றுக்கொள்ளும் பிராமண உத்தமன், சண்டாளத் தன்மையை வாங்கிக்கொள்ளும் சௌண்டிகன், இவர்களுடைய தாசர்கள், பந்துக்கள், விருந்தாளி. பாவம் தொலைக்கவந்த பாவி, புண்ணியம்தேடவந்த பொருளுடையவன், பிள்ளைவரம் தேடவந்தவன், பெறேர் ஆஸ்திவிடவந்தவன், பிதிர் கடன் தீர்க்கவந்தவன், கங்கைத்தீர்த்தம் கொண்டுவிட வந்தவன், இராமேஸ்வரத்தீர்த்தம் கொண்டுபோகவந்தவன், தீர்த்தவாசி, யாத்திரைவாசி, பக்தர்கள், தேவஸ்தான சிப்பந்தி, கோவில் ஊழியர்கள், இவர்களுக்குவேண்டிய சாமான்கள் தயார் பண்ணிக்கொடுக்கும் வியாபாரி, இவர்களைக்காப்பாற்றிவர சில உத்தியோகஸ்தர்கள் இவர்களாலேயே ராமேஸ்வரம் நிறையப்பெற்றிருக்கின்றது. இராமேஸ்வரத்தின் ஆகாசவெளியிலோ இராமேஸ்வரநாதன், அவர் பெண்ஜாதி, கர்மதேவதைகள் யாகதேவதைகள், நரகர்கள், சப்த கன்னிகைகள், சப்தரிஷிகள், நவக்கிரகதேவதைகள், சமுத்திரராஜன், பிதிர் தேவதைகள், அநேகம் பணக்காரர்களுடைய பிதிர், இவர்களுடைய கொடுக்கல் வாங்கல் கணக்கைத்தீர்த்துக்கணக்குப்போட்டு ஒத்துப்பார்க்கும் கணக்குப்பிள்ளையான சித்திரபுத்திரனென்னும் தேவ கணக்குப்பிள்ளை ஆகிய இவர்களெல்லாம்ஆகாசவெளியிலும் மேற் சொன்னவர்களெல்லாம்பூமிவெளியிலும்நிறைந்திருப்பார்கள். அந்த இராமேஸ்வரக்கள்ளு சாராயக்கடைகள் ஆயிரரூபாய்க்கு மேற்பட்ட குத்தகைக்குப் போயிருக்கின்றன. அங்கே ஆலையில்லை தொழிலாளி மில்லுமில்லை, தாழ்த்தப்பட்ட கூட்டமுமில்லை, அவர்களுக்கு அங்கு பிழைப்புமில்லை, கோவிலை எட்டிப் பார்க்க பாத்திதையுமில்லை. அப்படியிருக்கையில் அத்தனை கள் சாராயத்தைக் குடிப்பவர்கள் யார் என்பதை ஆலோசித்துப் பாருங்கள். அதோடு கோவிலாலும் தீர்த்த மகிமையாலும் வந்த சன்மார்க்க ஒழுக்கங்கள் எவ்வளவென்பதை கவனித்துப் பாருங்கள்.

பக்திக்காக இராமேஸ்வரம் போகிறவர்கள், பிள்ளை வரத்திற்குப் போகிறவர்கள், தீர்த்தம் கொண்டு போகிறவர்கள் ஆகியஇவர்கள்குடிக்கமாட்டார்கள். தீர்த்தவாசி யாத்திரை வாசியான ஏழைகளுக்குக் கஞ்சாவிற்குக் காசு கிடைத்தாலும் கள்ளு சாராயத்திற்குப் பணம் கிடைக்காது. யாத்திரை போகும் பணக்காரர்களுக்கு இராமேஸ்வரச் சமுத்திரத் தண்ணீர் ஒத்துவரா தென்று பிராந்தி குடித்தாலும் குடிப்பார்களே யொழிய கள்ளு சாராயம் குடிக்க மாட்டார்கள். அநேகமாக அங்கிருக்கும் வியாபாரிகள் குடிக்க மாட்டார்கள் தாய் தகப்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

கோலார் தங்கவயல் சுயமரியாதை மகாநாடு.

குருசாமி குஞ்சிதத்திற்கு தடையுத்திரவு.

எதிரிகளுக்கு ஆணித்தரமான பதில்கள்.

எஸ். குருசாமியின் தலைமைப்பிரசங்கம்.

மே மாதம் 22-தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு கோலார் தங்கவயலில் கூடிய முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் தலைமை வகித்து தோழர் எஸ். குருசாமிஅவர்கள்சுமார் 3 மணிநேரம் வரையில் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் பின் வருமாறு:—

தோழர்களே!

இன்று இம்மகாநாடு நடைபெறாமல் போவதற்கு என்னென்ன சூழ்ச்சிகள் நடைபெற வேண்டுமோ அத்தனை சூழ்ச்சிகளையும் நமது எதிரிகள் செய்து பார்த்து விட்டார்கள். ரோமன் கத்தோலிக்கர்கள் ஒரு புறம் நான் அவர்களுக்கு விரோதமாக எழுதி வருகிறவன் என்றும், "புதுவை முரசில்" சம்மந்தப்பட்டு கத்தோலிக்கப் பாதிரிகளின் விரோதத்திற்கு ஆளானவன் என்றும், இன்னும் "குடி அரசில்" அடிக்கடி கிறிஸ்துமதத்தைத் தாக்கி எழுதுகிறவன் என்றும்—ஆகையால் நான் பேசினால் கட்டாயம் கலகம் நடக்குமென்றும், சர்க்காருக்கு விண்ணப்பம் செய்தார்கள். மற்றொருபுறம் பார்ப்பனர்களில் சிலர் நான் பார்ப்பனத்துவேஷி யென்றும், நேற்று புத்தர்கள் மகாநாட்டில் நானும் திருமதி குஞ்சிதமும் பேசிய பேச்சுக்கள் பிராமணத்துவேஷம் நிரம்பியிருந்ததென்றும், ஆகையால் நாங்களிருவரும் இன்று பேசக்கூடாதென்றும் விண்ணப்பம் செய்தார்கள். மற்றொருபுறம் ராமக்காரர் என்ற வைஷ்ணவ ஆதிதிராவிடர்கள் எங்களைப் பேசவிடக்கூடாது என்று விண்ணப்பித்துக்கொண்டார்கள். இதையெல்லாம் சரி யென்று நம்பி மைசூர்அரசாங்கத்தாரும், எனக்கும் திருமதி குஞ்சிதத்தம்மாளுக்கும் 144 ஆகிய தடையுத்திரவு பிறப்பித்தார்கள். பிறகு தோழர் அப்பாதுரையார் முயற்சியால் இன்று கூட்டம் நடைபெற உத்திரவும் கிடைத்திருக்கிறது. நீங்களும் எங்களது பேச்சைக்கேட்கப்பெருவாரியாக வந்து கூடிவிட்டீர்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயம். இது வரையில் எங்கள் பேரில் சுமத்தப்பட்ட பழியெல்லாம் நாங்கள் சர்க்கார் தாசர்கள் என்பதேயாகும். ஆனால் இப்போதுதான் முதன் முதல் நாங்கள் சர்க்காரால், அதுவும் ஒரு சுயராஜ்ய (சுதேசி) சர்க்காரால் தடையுத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறோம்.

சென்ற வருஷத்தில் சென்னையில் "ரிவோல்ட்" பத்திரிகை நடந்து கொண்டிருந்த காலத்தில் (Bosotto) ஹோட்டலில் ஒரு விருந்து நடைபெற்றது. அப்போது உங்களுக்கு இப்போதுதிவானாகயிருக்கும் மிஸ்டர் மிர்ஸா இஸ்மெயில் அவர்கள் நமது இயக்கத்தலைவரான ஈ. வெ. ராமசாமியோடு பேசிக் கொண்டிருக்கும் போது "ரிவோல்ட்"டினுடைய கொள்கையைப் பற்றி மிக மெச்சிக் கொண்டு ஒரு கிழவர் இவ்வளவு முற்போக்கான கொள்கைகளோடு இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுவதாகவும், அவர் ஒரு முறை மைசூர் சமஸ்தானத்தில் பிரசாரம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். அதே திவான் ஆட்சிக்குட்பட்ட இவ்விடத்தில் அதுவும் அவரது தோழரான ஈ. வெ. ராமசாமி மேல் நாடு போயிருக்கும் இத்தருவாயில் அவருடைய தோழர்கள் பேசக்கூடாது என்று தடையுத்திரவு பிறப்பிப்பதாயிருந்தால், இது குட்டித் தேவதைகளினுடைய சூழ்ச்சிகளே தவிர வேறில்லையென்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் திவான் அவர்களுக்கு இவ்விஷயம் தெரிந்தால் நிச்சயம் வருத்தப்படுவார்களென்றே நினைக்கிறேன்.

நமது இயக்கம்.

இனி, சுயமரியாதை இயக்கம் ஏன் ஆரம்பிக்கப்பட்டதென்றால், நமது வாழ்க்கையில் சுயமரியாதை உணர்ச்சி தோன்றாத நேரம் இல்லை என்றே சொல்லலாம். ஒரு பார்ப்பன நண்பன் வீட்டில் நாம் தண்ணீர் வாங்கிக்குடிக்கும் போது குடித்த பாத்திரத்தைக் கவிழ்த்து வைக்கச் சொல்லி அதில் பார்ப்பனத்தி கொஞ்சம் தண்ணீரை யூற்றி எடுத்துப் போகும்போது, நமது மனது துடிக்கிறது; அந்த உணர்ச்சிதான் சுயமரியாதை உணர்ச்சியாகும். இதே மாதிரி ஒரு முகம்மதிய நண்பனை அழைத்துக்கொண்டு நமது காப்பிக் கிளப்புகளில் புகுந்ததும், ஒரு பார்ப்பனச் சிறுவன் பக்கத்திலுள்ள பல கையைக் காண்பித்து, அங்கேதான் முகம்மதியர்கள் சாப்பிடுமிடம் என்று சொல்லும் போது, நமது நண்பனுடைய மனமும் நம்முடைய மனமும் கொதிக்கிறது. இதுதான் சுயமரியாதையுணர்ச்சி. பெற்றோருக்குப் பிறந்த இரு குழந்தைகளில் ஆணை மாத்திரம் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிட்டு, பெண்ணை மாத்திரம் ருதுவானவள் வெளியே போகக்கூடாது என்று அடக்கி அடுப்பங்கரைக்குள் அமுக்குகிறார்களே! அந்தச்சமயத்தில் அப்பெண்ணானது, "ஐயோ அவன் மாத்திரம் பக்குவமடைந்தும் பள்ளிக்குப் போகலாம்; நான் மாத்திரம் பக்குவமடைந்தால் போகக்கூடாதா? அட அநியாயமே! ஏன் பெண்ணாகப் பிறந்தோம்?" என்று நினைத்து மனம் புழுங்குகிறது பாருங்கள். அது தான் சுயமரியாதை உணர்ச்சி. எனவே, இவ்வித உணர்ச்சியானது நமது வாழ்க்கையில் விடாமல் தோன்றி மறைந்து கொண்டேயிருக்கிறது. இதை மக்களுக்கு உணர்த்தி மனித சமூகத்திலிருக்கும் வேற்றுமையை ஒழிக்க வந்ததுதான் சுயமரியாதை இயக்கம்.

நமது இயக்கமானது இந்த நாட்டிற்குப் புதிதல்ல. நமது இயக்கக் கொள்கைகளெல்லாம் வெகுநாட்களாகவே இந்நாட்டிலும் சரி, வேறு நாடுகளிலும் சரி, சொல்லப்பட்டு வந்தவைகள் தான். ஆனால் காலத்திற்கேற்றவாறு சில கொள்கைகள் புதிதாகவும், சற்று தீவிரமாகவும் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றன. இதைத்தவிர வேறு ஒன்றும் சுயமரியாதை இயக்கத்தால் நஷ்டம் ஏற்பட்டு விடாது. இதில் கலந்திருப்பவர்களெல்லாம் வேறு தொழில் இல்லாதவர்களல்ல; அப்படி எவரேனும் இருந்தாலும் அதில் குற்றமுமில்லை. பல இயக்கங்களில் ஏற்கனவே கலந்திருந்தவர்கள் தான் இன்று நமது இயக்கத்தில் ஈடுபட்டு வேலை செய்து வருகின்றனர். இந்த இயக்கத்தால் எங்களால் எவ்வித பிரதி பிரயோஜனமும் இல்லை. அப்படி ஏதாவது இருக்கிறதென்றால் நீங்கள் கண் முன்பு பார்க்கின்ற தடையுத்திரவுகளும், நாஸ்திகர், தேசத்துரோகி, மதத்துரோகி என்ற பட்டங்களும் தான் நாங்கள் பெரும் வெகுமதிகள். இனி கடைசியாக ஒரு வார்த்தை. ரோமன் கத்தோலிக்கர்களும், ராமக்காரர்களும், இன்னும் சிலர்களும் என்னைப்பேச விடக்கூடாது என்றும், பேசினால் கேள்விகள் கேட்டு கலகம் ஏற்படும் என்றும் விண்ணப்பம் போட்டவர்களுக்கு ஒரு வார்த்தை. எந்த மாதிரியான கேள்விகளுக்கும்—யோக்கியமாக, சந்தேக நிவர்த்திக்காக, பிறருக்குப் பலனையளிக்கக் கூடியதாக இருக்குமானால்—அவைகளுக்குநான் பதில் சொல்லக்காத்திருக்கிறேன். அதைவிட்டு கூட்டம் முடிந்ததும் பின்னாடி போய், "கேள்வி கேட்டிருப்பேன்; வாயையடைத்திருப்பேன்; கலகம் பண்ணக்கூடாது என்று இருந்துவிட்டேன்" என்றெல்லாம் வீண் பெருமை பேசிக்கொள்ளவேண்டாமென்று எச்சரிக்கிறேன்.

பார்ப்பனத்துவேஷம்.

நானும், திருமதிகுஞ்சிதமும் பார்ப்பனத்துவேஷத்தையுண்டு பண்ணுகிறோமென்றும், எங்களது இயக்கமும் அந்த வேலையையே செய்கிறதென்றும், ஆதலால் நாங்கள் பேசக்கூடாது என்றும் விண்ணப்பம்போட்டார்கள். இன்னும் நாங்கள் பார்ப்பனரைத்திட்டுகிறோம் என்றுபேசிக் கொண்டார்கள். அதற்குநான்சொல்லுகிறேன். பார்ப்பானைத்திட்டுவதற்காக ஒரு இயக்கமும், அதற்கு இத்தனைஆட்களும், இவ்வளவு பெரிய பந்தலும், 4000 பேர்கூட்டமும் வேண்டியதில்லை, இதோ உட்கார்ந்திருக்கிற நமது சகோதரியிடம் சொல்லிவிட்டால் கைநிறையமண்ணைவாரி இறைத்துவிட்டு, தினசரி தினுசாக 1000 திட்டு வேண்டுமானாலும்திட்டி விடுவார்கள். இன்னும் 100 க்கு 3 பேர் ஜனத்தொகையாகயுள்ள ஒருகூட்டத்தை 100 க்கு 97 பேர் கூடியவர்கள் திட்டுவதென்று நினைத்தால் அதுஒரு பெரிய காரியமல்ல. ஆகையால் நமதுஇயக்கத்து வேலைபார்ப்பனர்களைத் திட்டுவதல்ல. ஆனால் சிலர் கேட்கலாம். நேராகத் திட்டுவது போல் தோன்றாவிட்டாலும் பார்ப்பனர்களைத்துவேஷிப்பது மாதிரியான தொனியிருக்கிறதே யென்று கேட்கலாம். நாங்கள் ஜன சமூகத்தின் டாக்டர்களாகும். யானைக்காலுள்ளவர்கள் டாக்டரிடம் சென்றால், யானைக்கால் ஏற்படும் காரணத்தைச்சொல்லாமல் இருக்கமாட்டார்கள். காலில் செருப்புப்போட்டுக்கொண்டு நடக்கவெண்டும். இல்லாவிடில் கெட்டபுழுக்கள் ரத்தத்தில் கலந்துவிடும் என்பார்கள். சாக்கடைப்பக்கத்தில் குடியிருக்கக்கூடாது; இருந்தால் கொசுக்கடிக்கும்; என்பார்கள் இவ்வளவிற்கும் படம்போட்டும்,கொசுக்களை பூதக்கண்ணாடி வழியாகக் காண்பித்தும் யானைக்கால் வந்தவிதத்தையும், அதை இனித்தடுக்கவேண்டிய உபாயத்தையும் சொல்வார்கள் அதற்காக "யானைக்காலர்கள் மகாநாடு" என்று கூட்டி, "நாங்கள் யானைக்காலோடு தானிருப்போம்- புழுக்களையும், கொசுக்களையும் டாக்டர்களாகிய நீங்கள் துவேஷிக்கிறீர்கள்" என்று சொன்னால், அதற்காக டாக்டர்கள் சும்மா இருந்து விடுவார்களா? அப்படி இருக்கின்றவர்கள் உண்மையான டாக்டர்கள் ஆவார்களா? இதைப் போலத்தான் எங்கள் வேலையும். பார்ப்பனர் நமதுநாட்டில்செய்த கொடுமைகளை பகுத்தறிவாகிய பூதக்கண்ணாடியால் யானைக்காலர்களாகிய

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க,

காதலும், கலியாணமும்.

[தோழர் டி. கே. எம். சாமி]

காதல் காதல், இன்றேல் சாதல் சாதல் என்றார் ஒரு பெரியார். மனித வாழ்க்கையில் காதல் வாழ்வு என்ற ஒரு பகுதியின்றேல் அம்மனிதன் இருப்பதினும் இறப்பதே சாலச் சிறந்தது என்பது அதன் கருத்தாகும். காதல் என்ற மொழிவாயினின்று வெளிவரும் போதே ஒரு வித இன்ப வுணர்ச்சி யுண்டாவதை காதலின்பம் உணர்ந்தோரே யறிவர்.

உலகத்தில் எரும்பு முதல் யானை வரையிலுள்ள சகல ஜீவராசிகளும் ஆண் பெண் என்ற இரு பிரிவையுடையதாயிருக்கிறது. அதில் ஒவ்வொரு ஆண் இனமும் ஒவ்வொரு பெண் இணத்தையும், ஒவ்வொரு பெண்ணினமும் ஒவ்வொரு ஆண் இனத்தையும்விரும்புவது இயற்கை. இவ்விருப்பமே உலகத்தை இயக்குகிறது. ஆறறிவு படைத்த மக்களில் ஒத்த நலனும், ஒத்த வயதும் ஒத்த குணமும் உள்ள ஒரு காளையும் ஒரு மங்கையும் தங்கள் வாழ்விற்கு ஒருவருக் கொருவர் துணையேற்படுத்திக்கொள்ள வேண்டியதவசியம். இத்தம்பதிகள் ஒருவருக்கொருவர் மாறு அன்பினராய் நீங்காக்காதலராய் ஒன்றுபட்ட உள்ளத்துடன் வாழ்வு நடத்தின் அவ்வாழ்வில் அன்னோர் அடையும் இன்பவாழ்வின் உயர்வை காதலின்பத்தின் நுட்பம் உணர்ந்தார்க்கின்றி ஏனையோருக்குப் புலனாகாது. ஆனால் நம் நாட்டில் வைதீகமும் தெய்வீகத் தன்மையும் செழித்தோங்கி யிருக்கும் இன்னாளில் சோதிட சாஸ்த்திரங்களின் பொருத்தங்களினாலும், புரோகிதர்களின் மந்திர சக்தியாலும் பெரியோர்களின் அநுபவ முதிர்ச்சியாலும் சேர்த்து வைக்கப்படும் (மணம் செய்விக்கப்படும்) தம்பதிகளில் காதல் வாழ்வு நடாத்தி உண்மையின்பமடைவோர் எத்தனை பேர் என்று ஆராயின் நமது முடிவு என்ற இடத்திற்கே வந்து சேரும். ஐந்து வயது முதல் நம் நாட்டுப் பெண் மக்கள் அடுப்பெரித்தல், ஜலமெடுத்தல், சாந்தரைத்தல் அரிசி முதலியவை குத்தல் முதலிய இன்றியமையாத வேலைகளில் பழக்கப்படுகிறார்கள். அதில் அவர்கள் நன்றாய்த் தேர்ச்சி பெறுவதே அவர்களது பிற்கால வாழ்விற்கு அவசியம் என்று நினைத்த பெற்றோர்கள் அதில் கண்ணும் கருத்துமாயிருந்து அதைப் போதிக்கின்றனர். அப்பெண்மணி தனது 12 வது வயதில் பிரவடையாகிறாள் அதைக் கண்ட பெற்றோர் அவர் ஒரு புருடனுடன் தனிப்பட வாழ்க்கை (இல்வாழ்க்கை) நடத்த தகுதியடைந்து விட்டாளென்று எண்ணி அவளுக்கு வரன் தேடும் முயற்சியி லிறங்கி விடுகின்றனர். அவள் அதன் பின் வெளியில் செல்வதோ ஒருவருடன் பேசுவதோ கூடாது என்று இந்து மத அவசரச் சட்டங்களைப் பிறப்பித்து அவளை வீட்டின் மூலையிலுள்ள ஓர் அறையில் சிறை வைத்து விடுகின்றனர். அப்பெண்மணி சிறிதளவு படிக்கத் தெரிந்தவளாயிருந்து ஏதேனும் புஸ்தகங்களைப் படிக்கவும், சிறிதளவு நாகரீகமாக இருக்கவும் விரும்பினால் வீட்டிலுள்ள பாட்டிமார்கள் நாமென்ன தேவடியாளா? நமக்குப் படிப்பெதற்கு? நாமே அடுப்பூதுவதற்கென்றே பிறந்து விட்டோம் பெரியோர்களும் நமக்கு அடுப்பே திருப்பதி, ஆம்படையானே குல தெய்வமென்று நமது வாழ்வை வரையறுத்திருக்க நாம் உயர உயர பறக்க விரும்பினால் அது முடியக் கூடிய காரியமா? படித்து நாமென்ன உத்தியோகமா ஆளப் போகிறோம்? நாங்களெல்லாம் எந்தப் படிப்பை படித்தோம்.

நாங்களெல்லாம் வாழவில்லையா? என்ற உபதேசங்களால் சிறிதளவுக்கு இருந்த அறிவையும் பறிமுதல் செய்து விடுகின்றனர். இத்தகைய நிலைமையில் வளர்க்கப்படும் பெண்மணி தன்னுடைய நிலைமையையோ? தான் வாழப்போகும் வாழ்வைப்பற்றியோ தனக்கு கணவனாக வரப்போகும் வாலிபனின் தன்மையையும் குணத்தையும் அறிந்து கொள்ளும் ஆற்றலோ, அவனுக்கும் தனக்கும் ஏற்படப் போகும் விலக்க முடியாத சம்பந்தத்தைப் பற்றியோ, இன்னும் இல்வாழ்வைப் பற்றியோ, அதன் பின் ஏற்படும் பிள்ளைப் பேற்றைப் பற்றியோ எதையும் அறியாள். கடைசியில் அவளை முன்பின்னறியாத ஒரு வாலிபனுடன் வாழ்க்கை நடத்துமாறு கலியாண மென்ற ஒரு கயிற்றால் ,பிணைத்து விடுகின்றனர் இத்தகைய நிலைமையில் வாழ்க்கை நடாத்தப்புகும் அப்பெண்மணியின் வாழ்வு எத்தன்மையதா யிருக்குமென்று வாசகர்களே யூகித்துணர்வார்களாக.

அவளது கணவன் தன் மனைவியிடத்தில் பூரண இன்பமடைய விரும்பி அவளிடம் காதல் விளையாட்டு விளையாட ஆரம்பிக்கிறான். அளவளாவிப் பேச விரும்புகிறான் அவளைத் தன் வாழ்விற்கு வேண்டிய உறுதுணையாக நினைத்து ஒவ்வொரு காரியங்களையும் அவளுடன் ஆலோசித்துச் செய்ய விரும்புகிறான். ஆனால் உலகானுபவமோ, வாழ்க்கையில் அனுசரிக்க வேண்டிய முறைகளைப் பற்றியோ ஒன்றும் அறியா அப்பேதையினிடமும் அவனது விருப்பம் எவ்வாறு நிறைவேறும். அவன் அவளிடம் எதைக் குறித்துப் பேசி மகிழமுடியும்? உலக நெருக்கடியைப் பற்றி பேச முடியுமா? சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி பேசமுடியுமா? பெண்கள் சுதந்திரத்தின் அவசியத்தைப் பற்றி பேச முடியுமா? மன மொத்த காதலர்களின் உயர்வைப் பற்றி பேச முடியுமா? அவள் எதைக் குறித்தும்ஒன்றுமறியாள். ஆனால் அடுத்த வீட்டு ஆதிலக்ஷிமி பிரவடையாகி இருப்பதும், மூன்றாம் வீட்டு முத்துலட்சுமி ஆண் குழந்தை ஈன்றிருப்பதும், கோடி வீட்டு குப்பம்மாள் குழந்தை வேலனுடன் சம்மந்தம் வைத்துக் கொண்டிருப்பதான வதந்தி பொய்யா? மெய்யா என்ற ஆராய்சசி செய்வதையும் தவிரவேறு அவளிடம் என்ன எதிர் பார்க்க முடியும்? தன் மனைவியுடன் அளவளாவிப் பேச விரும்பும் கணவன் பேச வேண்டிய விஷயங்கள் ஒன்றும் புரியாதவனாய் மௌனம் சாதிக்கிறான். இனி அவர்களது வாழ்வு ஆண் பெண்ணென்ற இரண்டு யந்திரங்கள் வாழ்க்கை நடத்துவது போன்றதென்பது மிகையாகாது. அவர்களுள் ஒருவருக் கொருவர் கொண்டுள்ள அன்பை அதன் விளைவை அநுபவிக்க முடியாதபடி அவர்களது அறியாமை, போதிய கல்வியில்லாமை இவர்களது காதலின்பத்தை பறிமுதல் செய்து அம்மன மொத்த காதலர்களின் வாழ்விலும் விபரீதமான மாறுதலையுண்டாக்கி விடுகிறது. இதுவே நமது நாட்டிலுள்ள நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது தம்பதிகளின் இன்ப வாழ்வாகும்.

காதல், என்றால் தென்னாப்பிரிக்கா காடுகளில் வசிக்கும் ஓர் பிராணி என்று நினைத்துக் கொண்டிருக்கும். நம்நாட்டு பெரியார்களும், புரோகிதர்களும் ஜோதிட சாஸ்திர வல்லுனர்களும் நிர்மாணிக்கும். தம்பதிகளையும். இன்னும் என்ன சொல்லமுடியும் இத்தகைய தம்பதிகளின் வழ்வு இன்பமற்று சுவையற்ற பாலைவனம் போன்ற தாகப்போவதிலும் அன்னோரால் தோற்றுவிக்கப்படும் எதிர்கால உலகமக்கள் கோழைகளாய், பகுத்தறிவற்றவர்களாய், வீரங்குன்றி அஞ்ஞானஇருளில் கிடந்து கடைத்தேறுமார்க்கமின்றி அடிமைவாழ்வுவாழ்வதில் ஆச்சரியமென்ன இருக்கிறது. ஆகையால் சகோதரர்களே; நம்நாட்டு மக்கள் வீரர்களாய் திடசரீரிகளாய்த்திகழ்ந்து சுயமரியாதையும் சமத்துவமும் பெற்று சமாதானத்துடன் வாழவேண்டுமாயின், நம் நாட்டு ஒவ்வொரு தம்பதிகளின் வாழ்வும் காதல் வாழ்வாகத்திகழல் வேண்டும். ஒவ்வொரு தம்பதிகளும் காதல்வாழ்வு வாழவேண்டுமாயின் இருவருடைய அறிவும் ஆராய்ச்சியும் சமநிலமையுடையதாக இருக்க வேண்டும். இதற்கு சமகல்வி இருதிறத்தாருக்கும் வேண்டும். இருபிரிவினர்களும்சம கல்வி ஞானம்- இல்லாத தம்பதிகள் தங்கள் வாழ்வில் காதலின்பம்அநுபவிப்பதென்பது எட்டாத பழத்துக்குக்கொட்டாவி விட்ட கதையையே ஒக்கும் தம்பதிகளினிடையே காதல் வாழ்வின்றேல் அவர்கள் வாழ்வும் அவர்கள் சந்ததிகளின் வாழ்வும் பரிதாபகரமானதே. முடிவாகக்கூற வேண்டுமாயின் நம் இந்தியநாடு உலகிலேயே மிகத்தாழ்ந்த நிலைமையுற்று அடிமைவாழ்வு வாழ்ந்து மக்கள்கோழைகளாய் பலஹீனர்களாய்த்திகழ்வதற்கு முதற்காரணம், காதல்வாழ்வு புறக்கணிக்கப்பட்டதே என்பது எமது கருத்தாகும்.

நம்நாட்டில் காதல் வாழ்வு தலைகாட்டாமல் விட்டோட முதற்காரணமாயிருப்பது ஆண் மக்களைப் போல் பெண்மக்களும் சமஞானம், சமஅறிவு, சமநிலமையடைய போதிய கல்வி பயில முடியாமல் தடைப்படுத்திக் கொண்டிருப்பவை மதச்சட்டங்களும் குருட்டுவைதீகக் கொடுமையுமே என்பதை எவரேமறுப்பர். ஆதலால் சகோதரர்களே நீங்கள் பெண்மக்கள் சமத்துவத்தைப்பற்றி பத்திபத்தியாக எழுதினாலும், மேடைமேடையாகப் பிரசங்கமாறி பொழிந்தாலும் பெண்சமூகத்தின் அடிமைக்குப்பெருங்காரணமா யிருப்பது போதியகல்வியில்லாத குறையேஎன அறிந்து அதை நிவர்த்திப்பதுடன் அவர்கள் உலக ஞானமடைய போதிய அறிவைப்போதித்தாலொழிய ஒரு பலனும் ஏற்படப்போவதில்லை. அப்படியேற்பட்டாலும் அதுமுடவன் குதிரைசவாரிசெய்ய முயன்றகதையையே ஒக்கும். ஒவ்வொருபெண் மணிகளும் தங்கள் வாழ்க்கையை சீர்திருத்திக்கொள்ளும் வழியறிந்தாலொழிய அவர்கள் சமத்துவமடைவதென்பது வெறும் கூச்சலளவில் நின்றுவிடும் என்பதே நமது அபிப்பிராயமாகும்.

ஆகையால் காதல் வாழ்வு நடத்த விரும்பும் ஒவ்வொரு பெண்ணும் ஆணும் சமஅறிவும் சமஞானமும் ஒத்த குணமும், போதிய படிப்பும் உடைய துணையைத் தேடிக்கொண்டாலொழிய அவர்கள் இன்பவாழ்வு வாழ்வது எட்டுச்சுரக்காய் தான். ஒவ்வொரு தம்பதிகளும் மனமொத்த காதலர்களாய நீங்கா அன்பினராய்த்திகழ்ந்தாலொழிய அவர்கள் வீரமும், ஞானமும், அறிவும், திடகாத்திரமுமுடைய மக்களைப்பெறுதல் அரிது

நம்நாட்டில் திடகாத்திரமும், அறிவும் தைரியமும் வீரமுமுடையமக்கள் பிறந்தாலொழிய நாம் சுயராஜ்யமடைந்து சுயமரியாதையுடனும், சமத்துவத்துடனும் பகுத்தறிவின் வழிநின்று இன்பமடைவோமென்பது. முயல் கொம்புதான். ஆதலால் தேசிய வாதிகளே? நம்நாடு இருக்கும் இவ்வடிமை நிலமைமாறி நாமும் மற்றநாட்டாரைப்போல் சமாதானத்துடனும், சந்தோஷமாகவும் வாழ வேண்டுமாயின், நம்நாட்டு தம்பதிகளில் நூற்றுக்கு எழுபத்திஐந்துகுடும்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

நினைத்துப்பார்க்க நேரமில்லையா?

(ஆப்கால்)

இவ்விந்திய நாட்டின் சீரையும், சிறப்பையும், செல்வ நிலைமையும், பல பெரியார்கள் பலவிதத்தில் புகழ்ந்து, கூறுகின்றார்களென்றாலும், ஆழ்ந்து நோக்கின் மிக்க விசனிக்கத்தக்கதாகவே காண்கின்றது. இவ்வித பேரும் புகழும் பெற்றுத்திகழும் நம்மிந்திய நாட்டைவிட மடமையிலும், மூடமதியிலும், முயற்சியற்ற தன்மையிலும், ஒற்றுமையின்மையிலும், உயர்வு தாழ்விலும், ஜாதிமத வேற்றுமையிலும், கல்லு, மண்ணு, கட்டைகளாலாகிய கடவுள்களின், நம்பிக்கையிலும், அவைகளின் தரகர்களது சூழ்ச்சியிலும், ஈடுபட்டு பகுத்தறிவற்று வாழும் தன்மையிலும் மற்றைய எந்நாடுகளை ஒப்பிடினும் இந்நாட்டிற்கு ஈடாகாதென்பதே எமது துணிபு. இவ்வாறு இந்நாட்டு மக்கள் பல துறைகளில் பின்னடைந்திருப்பதின் முக்கிய காரணங்கள் கடவுள்களும், அவைகளின் தரகர்களின் சூழ்ச்சிகளும், சூழ்ச்சிகளாலாகிய வேதம், புராணம், முதலிய சாஸ்திரங்களும், அவைகளாலாகிய மதங்களும், மதங்களாலான ஜாதி வித்தியாசங்களுமேயாகும். கடவுள் ஒருவர் உண்டு. அவர் பராபரவஸ்து, கண்ணுக்கும் மனதிற்கும் கிட்டாதவர், எங்கும் நிறைந்தவர், தூணிலுமிருப்பவர், துரும்பிலுமிருப்பவர், ஆதியும், அந்தமும் இல்லாதவர், ஈ, எறும்பு முதற்கொண்டு யானைவரை சகல ஜீவராசிகளுக்கும் அன்றாடு படி அளப்பவர், நன்மை தீமைகளை நாடி தக்கபடி தண்டிப்பவர், இம்மைக்கும் மறுமைக்கும் முக்தியளிப்பவர், அவரை நம்பினவரை கைவிடாதவர் சகல பாக்கியம் கொடுப்பவர் என்று சொல்லமுடியாத ஸ்தோத்திரமொழிகளை மக்களுக்கூட்டி, மோக்ஷம் என்றும் நரகமென்றும் எடுத்துக்காட்டி மக்களை ஏமாற்றி எண்ணிறந்த கடவுள்களை இந்நாட்டில் உண்டாக்கி அவைகளுக்கு சிவன், விஷ்ணு, காளி, சூலி, கந்தன், ஆறுமுகன், மூன்றுமுகன், பன்றிமுகன், சிங்கமுகன், யானைமுகன் எனப்பெயர்கள் வைத்து அவைகளுக்கு வெயிலின் கொடுமைக்கும், பனியின் உபத்திரவத்திற்கும், மழையின் தொந்திரவுக்கும், உள்ளாகி அவதிப்படாமலிருக்க கோடி கோடியாக ஏழைமக்களின் செல்வங்களைக்கொண்டு ஆலயங்கள் நிர்மித்து அவைகளுக்குக் கும்பாபிஷேகம் செய்து பின் அவ்வாலயங்களில் குடி புகுத்துகின்றனர். அதுமட்டுமா? அந்த சாமிகளுக்குப் பெண்டாட்டி பிள்ளை, உற்றார், உறவினர் கொள்வன, கொடுப்பன, உண்டி உடுத்தல், அழகு, ஆபரணம், தேர் திருநாள், தாசி, வேசி, வருஷாவருஷம் கலியாணம், சோபனம் புழுகு, ஜவ்வாது, புஷ்பங்கள், ஹாரங்கள் என்று சொல்லவியலாத வைபவங்களியற்றி, காளை, மயில், கருடன், கிளி, அன்னம், காக்கை, பெருச்சாளி என்ற வாகனங்களை ஏற்படுத்தி இவைகளை எல்லாம் மக்களை நம்பி அவைகளுக்காக வீணாக நெற்றி வியர்வை நிலத்தில் விழ கஷ்டப்பட்டுத் தேடிய பணத்தைச் செலவழிக்கும்படி செய்யும் பார்ப்பன தரகர்களின் படுமோசத்தை இவ்விருபதாம் நூற்றாண்டிலும் உணராதிருப்பதென்றால், பெரிதும் விசனிக்கத் தக்க விஷயமே. "கடவுளை நம்பினோர் கை விடப்படார்" என்று உபதேசித்து, இக்கடவுள்களை நம்பிக் கொண்டு எவ்வகையிலும் எவ்வித முயற்சியும் செய்யவிடாமல், மக்களை முட்டாள்களாக்க முயலும் இத்தரகர்களின் வஞ்சனை மொழிகளுக்குச் செவிசாய்த்து மெய்மறந்து மோக்ஷம் அடைவோம் என்று நம்பி இருக்கலாமா? இந்த சுயகாரியப்புலிகள் இவ்விதமாக கடவுள்களையும், சாஸ்திரபுராண இதிகாசங்களையும் கற்பித்து மக்களை இவைகளுக்குட்படுத்தி பலவகைகளில் பணம்பறித்து சுக ஜீவியர்களாக இந்திரபோக பாக்கியங்களை அனுபவிக்க ஏற்படுத்திக்கொண்ட ஓர் சூழ்ச்சியேயன்றி வேறென்ன இருக்கிறது. பகுத்தறிவுள்ள மக்கள் சிறிது ஆழ்ந்து யோசிப்பார்களேயானால் ('உள்ளங்கை நெல்லிக் கனி' போல்) தெரியாமல் போகாது. இவ்விஷயங்களைச் சிறிதும் யோசிக்க நேரமற்று வீணே இவ்வனியாயமான, ஆபாச, பொருத்தமற்ற, நம்பமுடியாத புகழ்களுக்குள்ளாகி தங்கள் முயற்சியை இழந்து, சுயமரியாதையைவிட்டு இந்தக்கடவுள்களையும், பிர்மாவின் முகத்தில் ஜனித்தவரென்போர்களையும் நம்பிக்கொண்டிருக்கலாமா? என்று உங்கள் சொந்த புத்தியைக்கொண்டே நன்றாய் யோசித்துப்பாருங்கள். எந்தக்கடவுளை நம்பியோ எந்தசாஸ்திர புராணம் இதிகாசம் என்றவர்களை பின்பற்றியோ, உலகில்யார் எவ்வித மோக்ஷத்தையோ, முக்தியையோ அடைந்தார்களென்று தக்க ஆதாரங்களுடன் சொல்லுவார்களா? என்று கேட்கிறேன்.

கைலயங்கிரியிலிருந்து கன்னியாகுமரிவரையிலுள்ள கடவுள்கள் பல கோடி எனலாம். இத்தனைகடவுள்களுக்கும் சக்கரவர்த்திக்கடவுள்களாக நம்மிந்திய நாட்டில் பல கடவுள்கள் இருக்கின்றன. இந்தப் பெரியகடவுள்களுக்குப் பல கோடி பணம் கையிருப்பிலும் இருக்கின்றது. சில பெரிய கடவுள்களுக்கு இருக்கும் கோடிக்கணக்கான பணம் செலவுக்குப் போதாக்குறையால் பிரைஸ் சீட்டுப்போட்டு லாபம்தேடி நிலம் பலம் வாங்குகின்றது. இந்த கல்லாலாகிய கடவுள்களுக்கு இவ்வளவு பணத்தாசைப்பிடித்து ஏழை மக்களது பணத்தைக்கொள்ளை கொண்டால் இந்த வெட்கக்கேட்டை யாரிடம்போய் சொல்லுவதென்று விளங்கவில்லை. ஆனால் அவைகளின் பிரதிநிதிகளாகிய தரகர்களோ மாடமாளிகையில் இந்திரபோகங்களை அனுபவித்துக்கொண்டுவர அந்தக் கடவுள்கள் அனுக்கிரகித்துள்ளன போலும். ஆனால் அந்தக்கடவுள்களுக்கும், தரகர்களுக்கும் ஏற்பட்டுள்ள திரண்ட செல்வங்கள் அனைத்தும் யாருடையதென்றுதான் கேட்கிறேன். எந்த அறிவுடைய மக்களாவது இவைகளை சிந்தித்துப்பார்க்கின்றார்களா? இல்லை ஐயோ! மக்களைப்பிறப்பித்த இக்கடவுள்களுக்கு மக்களே நிதிசேர்த்து வைப்பதென்றால் அப்படி மக்களிடம் பொருள் பறிக்கும் கடவுள்கள் இருந்ததென்ன? இறந்தென்ன? மக்களை சிருஷ்டித்தக்கடவுள்கள் மக்களிடம் பொருள்பறிப்பதும், மோசம் செய்வதும், நாசம் செய்வதும் கூடுமா? என்று யோசித்துப்பாருங்கள். கடவுள் எங்கு முள்ளவர் அவரில்லாத இடமேயில்லை. என்று முற்கூறியபடி தெரிந்திருக்க வீணாக 1000, 500 என்று தங்கள் தங்கள் சக்திக்குத்தக்கவாறு பிரபுக்கள் முதல் ஏழைகளீறாக மக்கள் பணத்தைச் செலவு செய்துகொண்டு காசி, கயா, பண்டரி, பத்ராசலம், திருப்பதி, திருவண்ணாமலை, திருச்சி, திருச்செங்கோடு, பழனி, பாபநாசம், சிதம்பரம், சீர்காழி, மதுரை, இராமேஸ்வரம், என்ற க்ஷேத்திரங்களுக்கு யாத்திரைகள் செய்து, அத்தெய்வங்களை தெரிசித்து அடைந்த பலாபலன்கள் என்னென்ன என்று தீர யோசித்துப்பாருங்கள். மக்கள் வீட்டைவிட்டு புறப்பட்டு பின்னும் வீடுவந்து சேருவதற்குள் அவர்கள் படும் கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல என்பது உங்களுக்கே தெரியவரும். மோட்டார் ஆபத்து, ரயில்கஷ்டம், ஸ்வாமிதெரிசனத்தில் பிரசவவேதனை, காலரா, பிளேக், கொடுமை, பட்டினிப்பிணி, பனிப்பிணி மக்களை இழத்தல், மனைவியை பறிகொடுத்தல் முதலான அல்லல்களுக்குள்ளாகி, வாடிவதங்கி பொருள் இழந்து கடைசியாக உள்ளூர் கார் வாடகை, வீட்டிற்கு வந்து தரும்படியான நிலைமையில் வீடு திரும்புகிறார்களேயன்றி வேறு என்ன நன்மையை உண்மையாக அடைகின்றார்கள் என்று நிதானபுத்தியோடு யோசிக்கவேண்டிக்கேட்டுக்கொள்ளுகிறேன். பாமர மக்களேயன்றி வேறெந்த பார்ப்பன மக்கள் எவரேனும் மூன்று பைசா செலவு செய்து எந்தக் கடவுளைத் தெரிசிக்க எந்தக்ஷேத்திரத்திற்காவது யாத்திரை செய்கின்றார்களா? என்று யோசித்துப்பாருங்கள்.

அவர்களும் நம்மைப்போன்ற மானிடரேயன்றி வேறல்லவே! ஏன்? அவர்கள் மட்டும் அக்கடவுளுக்காகவென்று எவ்விதமுயற்சியும் பணச்செலவும், யாத்திரையும் செய்யக்கூடாது? என்று யோசித்தால் அந்த உண்மையை உணர்ந்திருப்பதினாலேதான் அவர்கள் அவ்வித அலக்ஷிய புத்தியோடு இருக்கிறார்களென்பது பளிங்குபோல் விளங்குகிறது. இவ்வளவு கடவுள்களையும் அவைகளின் பெருமைகளையும் புராண இதிகாசங்களையும் உண்டாக்கி மக்களை மயக்கி மாயவலையிற் சிக்கவைத்து குரங்காட்டுவது போல் மக்களை ஆட்டிவைக்கிறார்கள் என்பதை எந்த அறிவாளிகளாயினும் எந்தப் படிப்பாளிகளாயினும், எந்த பட்டதாரிகளாயினும், அல்லது பெரிய, பெரிய படே, படே ஆசாமிகளாயினும் தங்கள் சொந்த அறிவைக்கொண்டு கொஞ்சமாவது யோசித்துப்பார்க்கின்றார்களா? என்று கேட்கிறேன் அந்நிய நாட்டினர்கள் தங்கள் ஆராய்ச்சியால் ஒப்புயர்வு பெற்ற அரிய விஷயங்களை கண்டுபிடித்து, அதினால் மக்களுக்குப்பலவகையில் மிக்க பயன்படுமாறு செய்திருக்கின்றார்கள். செய்துகொண்டுமிருக்கிறார்கள். நம்மக்களோ மூடமதியை திடமாகக்கொண்டு யோசிக்கும் வகையற்று கல்லுக்கும், மண்ணுக்கும், கட்டைக்கும், தேருக்கும், திருநாளுக்கும், மலைக்கும், மகமேருவுக்கும், தங்கள் பணத்தை வீணாக செலவழித்து மோக்ஷமடைய முயல்கின்றார்கள் என்றால் இவர்களின் பகுத்தறிவின் பயனை என்னென்றியம்புவது? இப்படிப்பட்ட மக்களை சோணகிரிகளென்று நினைத்துக்கொண்டிருக்கும் பார்ப்பனர்கள், "தட்டிப்பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பது போல்" திரு. காந்தியவர்களை இந்தியாவில் தசருவகவது அவதார புருஷரென்றும், கண்கண்ட தெய்வமென்றும், மகாத்மா, என்றும், நம்நாடு பொன்னாடாக மாறுதல் அடையப்போவது, அம்மகானாலேயே என்றும், அவரை நம்பினால் நலம் பெறலாம் என்றும், நயவஞ்சக வார்த்தைகளைப்பரப்பி அவைகளையும் பின்பற்றி நடக்கவும், தூண்டிவிட்டு திரு. காந்தி ஜெயந்தி, திரு. காந்தி ஆயுள் ஓமம், திரு. காந்தி திருநாள் என்று இருக்கிற சாமிகளும் போதாதென்று இவைகளையும் உண்டாக்கி இதற்கும் மக்களை உட்படுத்தி அடக்கி ஆளும் சூழ்ச்சியை எந்த நுண்ணறிவுள்ள, எந்த பகுத்தறிவுள்ள மக்கள் எவரேனும் யோ

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

பம்பாய் பார்ப்பன்ரல்லா தார் மகா நாடு.

தலைவர் திரு. யாதவ் அவர்கள் பேச்சு.

ஜாதிகள் அழியவேண்டும். விக்கிரக ஆராதனங்கள் ஒழிய வேண்டும்.

பம்பாய் மாகாணப் பேசின் ஜில்லாவின் பார்ப்பனரல்லாதார் மகாநாடு, தானாவில், 5—6—32ல் கூடிய போது அதில் தலைமை வகித்த திரு. யாதவ அவர்கள் செய்த பிரசங்கத்தில் உள்ள முக்கிய பகுதிகள் வருமாறு:—

இந்துக்கள் தங்கள் மதத்தைப் பற்றி தப்பான கருத்துக்கள் கொண்டிருப்பதால் பிளவுபட்டுக் கிடக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் ஒருகடவுள், ஒருவருணம், ஒரு வேதம் என்னும் தங்களின் பண்டைக்கொள்கையை மறந்து விட்டார்கள் அவர்கள் திரும்பவும் ஒன்றுபட அவர்கள் இந்தப்பண்டைக்கால கொள்கையை பின்பற்ற வேண்டும். அதாவது இந்துக்கள் விக்கிர ஆராதனையைவிட்டுவிடவேண்டும். ஜாதிவித்தியாசத்தை விடவேண்டும் பல ஸ்மிருதிகள் புராணங்களின்படி நடக்க மறுத்துவிடவேண்டும்.

ஃ ஃ

மதத்தின் பேராலும், சமுதாயத்தின் பேராலும்நசுக்கிக்கொள்ளையடிக்கும்கொள்கையோடும், செல்வம்அரசியல்துறையில் கொள்ளை யடிக்கும் கொள்கையாகும். ஒவ்வொருவரும் எதிர்த்துப்போராட உதவி செய்து ஒவ்வொருவருக்கும் நியாயம் கிடைக்கும்படிச்செய்ய கட்சிபிரதிக்ஞை செய்திருக்கிறது. இந்துசமூகம் தற்பொழுது அமைந்திருக்கும் முறை, ஒருசிறிய கூட்டத்தார் பெரும்பான்மையான ஜனங்களை கொள்ளையிட ஆதரவளிக்கிறது. அந்தச்சிறிய கூட்டத்தாரில் சிலர் தங்கள்கட்சியினரின் மூடநம்பிக்கையினாலும் அறியாமையினாலும் அநுகூலம் எடுத்துக்கொள்ளுகிறார்கள். சிலர் ஜாதித்தலைவர்கள் என்று கூறிக்கொண்டு அவ்விதம் செய்கிறார்கள். முதலாளிகளோ குறைந்த கூலிகொடுத்து அதிகவேலை வாங்க ஆவலுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். லேவாதேவிக்காரன் கடன்வாங்குபவனைப்பல வழியிலும் கொள்ளையடித்து அவனை அடிமைக்கு ஒப்பான நிலையில் கொண்டுவந்து வைத்து விடுகிறான். பார்ப்பனரல்லாதார் கட்சி ஏழைகள், நசுக்கப்பட்டவர்கள் முதலியோர் முன்னேற பாடுபட வேண்டும் தங்களை நசுக்குபவர்களுடன் போராட அவர்களுக்குப் பார்ப்பனரல்லாதார் கட்சி பயிற்ற வேண்டும்.

ஒருசமூகம், ஆதியில் எவ்வளவு அநீதமான முறையில் சுகபோகங்களும் சுதந்திரங்களும், பெற்றிருந்தாலும், அல்லது அவைகளை அவர்கள்மட்டும் அனுபவிப்பது எவ்வளவு அநியாயமாக இருந்தாலும் அந்த சுகங்களை அது தானாகவிட்டுக்கொடுக்காது பாமரமக்கள் போராடியே தங்களின் சுதந்திரத்தையும், உரிமையும் மீண்டும் பெறவேண்டும்எனவே இந்தப்பாமரமக்களை தட்டிஎழுப்பி அவர்களின் கதிமோட்சத்துக்குபோராடபயிற்றுவது அவசிய மாகும்.

ஆரம்பத்தில் அவர்களின் தலைவர்களில் ஒருசிலரை அவசியம்பயிற்ற வேண்டும். அவர்கள் ஓயாது கிளர்ச்சி செய்யவேண்டும்.

ஃ ஃ

சத்திய சோதக சமாஜம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றிற்று. அந்தசமாஜத்தை 1870-ல் காலஞ்சென்ற திரு. ஜோதிராவ் புலே ஸ்தாபித்தார் அந்த சமாஜம் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையில் தரகர்வேண்டாம் என்று கூறிற்று. அது பார்ப்பன புரோகிதர்களைக்கொண்டு கிரிகைகள் செய்வதை நிறுத்தும்படி ஜனங்களுக்குப் போதித்தது. ஆதியில்அவருக்கு பிற்போக்கான நிலைமையுள்ள எல்லா சமூகத்தினரும் சீடர்களாய் இருந்திருக்கிறார்கள்.

முன்னேற்றமடைந்த சமூகங்களை சேர்ந்த மேடைப்பிரசங்கிகளும் வியாசம் எழுதுபவர்களும் சத்திய சோதகஇயக்கம் பார்ப்பனர்களை வெறுக்கும்படி பாமரமக்களுக்குப் போதித்துவந்ததற்காக அதைக்கண்டிக்கும் பழக்கத்தை கைகொண்டிருந்தார்கள், இது அநீதியாகும். சத்திய சோதக இயக்கமோ அல்லது பார்ப்பனரல்லாதாரியக்கமோ ஒரு போதுப்வெறுப்பை உண்டுபண்ண எண்ணியதுகிடையாது. ஜனங்களின் அறியாமையை அநுகூலமாக உபயோகித்துக்கொள்ளும்புரோகிதர்கள், மற்றும்பலரின் சூழ்ச்சியையே அவர்கள் வெளிப்படுத்தினார்கள். மராட்டா தேசத்தில் மதம், சமுதாயம், செல்வம், அரசியல் முதலிய எல்லாத் துறையிலும் எல்லா அதிகாரமும் பார்ப்பனர்கள் கையிலே இருந்தன அவர்களேலேவாதேவிக்காரர்களாயும் இருந்தார்கள். சர்க்கார் உத்தியோகங்களிலும் அவர்களே இருந்தார்கள். அவர்கள் வகுப்புவாதத்துக்கும் கோஷ்டிக்கும் பேர்போனவர்களாய் இருந்தார்கள். தங்கள் சமூகத்தைச்சேர்ந்த ஒருவரின் குட்டுகள் வெளிப்பட இருந்தால் அப்பொழுது அவர்கள் ஒருவரை ஒருவர் ஆதரித்துவந்தார்கள்.

சத்திய சோதக சமாஜவாதிகளும் பார்ப்பனரல்லா இயக்கத் தொண்டர்களும் இந்த சூழ்ச்சிகளை எல்லாம் வெளிப்படுத்தினர். அதனால் பார்ப்பனர்கள் இவ்விரண்டு இயக்கங்களும் தங்கள் ஜாதிக்கு கடும் விரோதிகள் என்று கருதினர்.

ஃ ஃ

சத்திய சோதக சமாஜம் ஏற்பட்டுப்பன்னீராண்டுகள் கழிந்த பின்பே இந்திய தேசிய காங்கிரஸ் ஏற்பட்டது. மராட்டிய பார்ப்பனர்கள் உடனே அவ்வியக்கத்தில் சேர்ந்து அதில் முதன்மையாய நின்று பாடுபட்டார்கள். பார்ப்பனரல்லாதாருக்கோ பார்ப்பனர்களிடம் நம்பிக்கை கிடையாது. எனவே அவர்கள் அதில் கலந்து கொள்ளவில்லை. இதுபார்ப்பனர்களுக்கு சௌகரியமாய் போய் விட்டது. அவர்கள் மராட்டாதேசத்துக்குத் தாங்களேதலைவர்கள் என்று நடிக்க இடுக்கண் எதுவும் இல்லாமற் போய்விட்டது. ஆனால் சத்தியசோதக இயக்கம் இந்த வேஷத்தைவெளியாக்கப்பாடுபட்டது. அந்தஇயக்கத்தைச்சேர்ந்த ஒருவர் 1895-ல் பூனா காங்கிரஸ் பந்தலுக்கு முன்விவசாயின்மரச்சிலையொன்றை நாட்டி அதன் அடியில் "காங்கிரஸில் நூற்றுக்கு 8(பேர்களாக இருக்கும் விவசாயிகள் எங்கிருக்கிறார்கள்" என்றுபெரியஎழுத்துக்களில் எழுதிவைத்தார். சத்திய சோதக சமாஜத்தின் தலைவர்கள் பிரசாரத்தின் அவசியத்தை உணர்ந்தார்கள். 1911-ம் ஆண்டுமுதல் தாங்கள் மகாநாடுகள் கூடஆரம்பித்தனர்.

ஃ ஃ

1917.ல் திரு. எட்வின் மாண்டேகுப்படிப்படியாக இந்தியாவுக்கு பொறுப்பாட்சி கொடுப்பதாய் பார்லிமெண்டில் அறிக்கைசெய்தார். உடனே சென்னை பார்ப்பனரல்லாதார் டாக்டர் நாயர் சர். பி. தியாகராயர் முதலியோர் தலைமையில் தங்கள் இயக்கத்தை ஸ்தாபித்தனர். பம்பாயிலும் அந்த இயக்கம் பலப்பட்டது பலஇடங்களில் மகாநாடுகள் நடந்தன. விசேஷபிரதிநிதித்துவம் வேண்டும் என்றுகேட்டு திருமாண்டேகுவினிடமும் வைஸ்ராயிடமும் தூது செல்லப்பட்டது.

ஃ ஃ

மாண்டேகு செம்ஸ் போர்டுஅறிக்கை சென்னை பார்ப்பனரல்லாதார்களின் பாதுகாப்புகளுக்கு ஸ்தானங்கள் ஒதுக்க வேண்டும்என்று சிபார்சு செய்தது. ஆனால் அவர்கள் பம்பாய் தக்ஷிணத்துக்கு அவ்விதமான ஏற்பாடு அவசியமில்லை என்றுகூறிவிட்டனர். அப்பொழுது காலஞ்சென்ற கோலாப்பூர் மகாராஜாவார்லிமெண்டு கூட்டு செலக்ட் கமிட்டிமுன் அதற்காக போராடும்படி என்னை அனுப்பினார். அக்கமிட்டியாரை மராட்டியர்களுக்கும் மற்றைய பிற்போக்கான சமூகத்தினருக்குமாக ஏழு ஸ்தாபனங்கள் ஒதுக்கும்படி செய்யப்பட்டது.

ஃ ஃ

நம்கட்சி பார்ப்பனரல்லாதார்கட்சி என்றே நன்கு தெரியப்பட்டுள்ளது இந்தஇயக்கம் மராட்டி கன்னடம் பேசும் ஜில்லாக்களிலேயே இருக்கும்வரை இதுபார்ப்பனர்களை எதிர்த்துக் கொண்டிருந்தது. ஏனென்றால் கொள்ளையடிப்பவர்களில் பெரும்பாலோர் அவர்களே, ஆனால் குஜராத்தில்கொள்ளை யடிப்பவர்கள் பார்ப்பனர்களல்ல. அங்கு கொள்ளையடிப்பவர்கள பொதுவாக மற்றைய சமூகங்களைசேர்ந்தவர்களே. எனவே நாம் குஜராத்விவசாயிகளுடனும், தொழிலாளருடனும்சேர்ந்து வேலைசெய்ய வேண்டி இருப்பதால் நமதுஇயக்கத்தின் பெயர் அதன்உண்மையான நோக்கங்களை காட்டுவதாக இருக்க வேண்டும். அதற்கு "ஜஸ்டிஸ்கட்சி" என்ற பெயர் பொருத்தமாயிருக்

திருமண அழைப்பு.

1932 வருடம் ஜ-ஊன் மாதம் 15-ம் தேதி புதன் கிழமை காலை 6 மணிக்கு மேல் 7-30 மணிக்குள்ளாக, திருச்சி வக்கீல் திருவாளர் K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L அவர்கட்கும், ராயவேலூர் ஜில்லா மெடிக்கல் ஆபீசர் Captain S. K. Pillai L. M. & S., L. R. C. P. & S., L. R. F. P. & S., (Edin) அவர்களின் புதல்வி திருநிறைச்செல்வி சௌந்தரவல்லிக்கும், பெங்களூர் காக்ஸ் டவுன், கோவர் ரோடு 26வது நம்பருள்ள பங்களாவில் நடைபெறவிருக்கும் சீர்திருத்தத் திருமணத்திற்கு அன்பர்கள் அனைவரும் ஆர்வத்துடன் அழைக்கப்படுகின்றார்கள்.

வைத்தியர்க்கோர் வார்த்தை.

(கிறுக்கன்)

எனது வாழ்த்துதலுக்குரிய வைத்தியர்களே! அல்லது டாக்டர்களே! முதலில் உங்களெல்லோருக்கும் என் வந்தனத்தை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

நெடுநாட்களாக உங்களுக்குச்சில வார்த்தைகள் சொல்லவேண்டும் என நான் எண்ணிக்கொண்டிருந்தேன். அதற்குச்சரியான காலமும் சந்தர்ப்பமும் ஏற்படாமல் போய் விட்டதால் எற்கனவேயே சொல்ல இயலாது போய்விட்டது. இருந்தாலும் நான் அதைப்பற்றி வருந்தவில்லை. ஏனென்றால் நாஸ்திகரும், வைத்தியரும் அண்ணன் தம்பிகளல்லவா? அதனால்தான் நான் நமது சகோதரர்களிடம் எப்பவும் பேசிக்கொள்ளலாம், நம்மீது கோபித்துக்கொள்ளவும் மாட்டார்கள் என்ற உரிமையால் சும்மாவிருந்தேன்! நீங்கள் என்னை உம் சகோதரனாக ஏற்றுக்கொள்வீர்களோ! மாட்டீர்களோ! ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். என்னை நீங்கள் சகோதரனாக ஒப்புக்கொள்ளமாட்டோம் என்று சொன்னாலும், சண்டை போட்டாலும் நான் உங்களை சகோதரர்கள் என்றே சொல்லுவேன்! நான் இவ்வாறு சொல்லுவதற்கு எனக்குப்பூரண உரிமையுண்டு.

ஃ ஃ

“ஏதப்பா! கிறுக்கன் அங்கிருந்து இங்கிருந்து கடைசியில் நம்முடையமடியிலும் கைவிட வந்துவிட்டான்’ என நீங்கள் சொல்லுவீர்களோ என்னவோ! ஆமாம்! ஆமாம்! ஆமாம்! என்றுதான் நான் கூறுகிறேனே! அப்புறம் என்ன சந்தேகம்?

ஃ ஃ

நீங்களும், நானும் நாஸ்திகர்களேயாதலால் நமிருவரும் சகோதரர்களே என நான் கூறுகிறேன். எப்படி? என்று நீங்கள் கேட்டாலும்—கேட்காவிட்டாலும் நான் சொல்லித்தான் தீரப்போகிறேன். எனவே உங்கள் திருக்காதுகளை நன்றாய்த் திறந்து கேளுங்கள்!

ஃ ஃ

நீங்கள் எல்லாரும் கடவுள் மீதும், கடவுள் ஆணைகள் என்பதுமீதும் சிறிதும் நம்பிக்கையில்லாதவர்கள் என்பதை என்னிடத்திலும் நீங்கள் மறைக்கமுடியாது! ஒரு கடவுளோ அல்லது பல கடவுளர்களோ இல்லை என நீங்கள் உறுதியாய் நம்பியிருப்பவர்கள் என்பதற்கு உங்கள் வைத்தியத்தொழிலே மலைமீதுள்ள விளக்குப்போல பளிச்சிட்டுக்கொண்டிருக்கிறது. இந்த இரகசியத்தை ஆஸ்திகர் என்பவர்கள் தெரிந்திருக்கிறார்களோ என்னமோ, ஆனால் நானும் எனது நாஸ்திகச்சோதர சகோதரிகளும், மிகமிக நன்றாய் அறிந்து கொண்டுதானிருக்கிறோம். வைத்தியர்களில் பெரும் பாலார் இதை அறிந்துகொண்டிருந்தாலும் அதை வெளிப்படையாகக்காட்டிக் கொள்வதில்லை. சிலவைத்தியர்கள் இந்த இரகசியத்தை நிச்சயமாக அறிந்து கொள்ளாமலிருக்கிறார்கள். என்னுடைய உத்தேசம் யாதென்றால் இந்த இரகசியத்தை எல்லாரும் அறியும்படி செய்து வைத்தியர்களும் நாஸ்திகர்கள்; அவர்களுக்கும சு. ம. இயக்கத்திற்கும், நெருங்கிய தொடர்புண்டு என்பதை டாம் டாம் மூலமாகத் தெரிவித்து உங்களை எங்களுடன் சேர்த்துக்கொள்வதற்காகவேயன்றி வேறல்ல.

ஃ ஃ

கடவுள் என்பவர் சர்வ வல்லமையுடையவர் என்றும், எல்லா ஜீவர்களும் இன்பமாகவிருக்க தொண்டாற்றி வருபவரென்றும், அவர் விருப்பம்போலவே எல்லாம் நடைபெற்று வருவதாகவும், அவர் இஷ்டத்திற்கு மாறாக எவரும் நடந்துகொள்ளக்கூடாதென்றும், இன்னும் பலவாறாகவும், ஆஸ்திக அண்ணல்களும், அநேக புராணங்களும், ஆயிரக்கணக்கான ரிஷிகளும் கூறிவந்திருப்பதை—கூறிவருவதை நீங்களும் நானும் எல்லாரும் தெரிவோமல்லவா? இவற்றை நீங்கள் கொஞ்சம் யோசித்துப்பார்த்து இவற்றில் ஏதேனும் உண்மையுண்டா? என்று சொல்லுங்கள்! உங்களால் யோசிக்க முடியாவிட்டால் நான் சொல்லுகிறேன்! கேட்கிறீர்களா?

கடவுள் இருந்தால்?—அதிலும் அவர் சர்வவல்லமையுடையவராயிருந்தால்? வைத்தியத்தொழிலை நீங்கள் நடத்தும்படி செய்வாரா என நான் “நைசாக” கேட்கிறேன்? மக்கள் முதல் சகல உயிர்ப்பிராணிகளும் இன்பமாக இருக்கும்படி பார்த்துக்கொள்வதே அந்தக்கடவுளாரின் எண்ணம் என வெகு விரைவாக வைதிகர்கள் சொல்லிவிடுகிறார்களே இதில் கொஞ்சமாவது பொருத்தமிருக்கிறதா? கடவுளுடைய எண்ணம் அதுவேயாயின் உலகில் இப்போது அப்படி நடந்துவருவதாக எவரேனும் கூறமுடியுமா? எங்கு நோக்கினும் மனிதர்கள் பிணியாலும், கஷ்டங்களாலும், அவதிப்பட்டுக்கொண்டிருப்பதைத் தானே நாம் கண்ணாறக்கண்டு வருகிறோம். பிரத்தியக்ஷ அனுபவம் இப்படியிருக்கும் போது கடவுள் எல்லா சீவர்களும், இன்பமாயிருக்கவே பாடுபட்டு வருகிறார் என்று சொல்வது விநோதங்களில் ஒன்றேயன்றி வேறென்ன? என்றே நான் கடாவுகிறேன்.

ஜீவர்கள் இன்பமாயிருக்கவே கடவுள் எண்ணிக்கொண்டிருக்கிறாரென்றால், அது எண்ணத்தளவில் அவர் வைத்துக்கொண்டிருக்கிறார்போலும் இது எத்தகைய வேடிக்கை பாருங்கள்! முதலாவதாக, கடவுள் இச்சாமாத்திரத்தில் அதையும் செய்ய ஆற்றலுடையவராயிருக்கிறாரென்றால் ஜீவர்கள் துன்புறுவதான நோய் நொடிகளை அவர் ஏன் உண்டாகும்படி பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்? கடவுளை அறியாமல் நோய்கள் எப்படி உண்டாகிவிட முடியும் ஜீவர்களை உண்டாக்கிய அதே கடவுள் தானே நோய்களையும் உண்டாக்கியிருக்க வேண்டும்? அப்படியிருந்தால் கடவுள் ஜீவத்தயாபகர் என்று நாம் எப்படி கூற இயலும்? மக்களின் நலத்திற்காகவே நோய்களையும் அவர் உண்டாக்கியிருக்கிறாரென்றால், நோய்களைக் கொல்லும் எதிரிகளாகிய வைத்தியர்களை அவர் ஏன் சும்மா விட்டுக் கொண்டிருக்க வேண்டும்? வைத்தியர்களை அடக்கக் கடவுளால் முடியவில்லையா? ஆம்! உண்மையிது தான்! கடவுளால் வைத்தியரை அடக்க முடியவில்லை!

ஃ ஃ

நன்றாய் யோசித்துப் பாருங்கள்! மனிதர் முதலிய உயர் பிராணிகள் பிணிவாய்ப்படவேண்டுமென்பது கடவுள் நோக்கமாயிருப்பின், அவர் நோக்கத்திற்கு எதிராக வைத்தியர்கள் நடந்து கொள்வதை அவர் விட்டுக் கொண்டிருக்கலாமா? ஒருவேளை சிலகடவுள்பக்தர்கள் சொல்லலாம் “வைத்தியத்தையும் கடவுள் தான் உண்டாக்கியிருக்கிறார்” என்று சமாதானம் கூறலாம். அப்படியே வைத்துக் கொளளுவோம். மனிதர் நோய்வாய்ப் பட வேண்டுமென்பதும் கடவுள் நோக்கம்! அற்பநோயை அகற்ற வைத்தியர் இருக்கவேண்டும் என்பதும் அவர் எண்ணம்!! அப்படியானால் இதைப் போன்ற எகனைக்கு மொகனையான செயல் வேறு என்னவிருக்கிறது என்று தான் கேட்கிறேன். இப்படியும் ஒரு கோமாளி கடவுள் இருப்பாரா? மனிதரால் கூட இந்த சமாதானத்தை ஒப்புக்கொள்ள முடியாததாகவிருக்க, இதை மனிதரைப்படைத்த கடவுள் ஒப்புக் கொள்வாரா? என்று நான் கேட்கிறேன். கடவுள் மேற்கூறப்பட்ட கதம்ப நோக்கமுடையவராயிருந்தால், அவர் நோக்கம் போலவே மனிதருக்கும் கதம்ப நோக்கமிருந்து வரும்படி அவர் செய்திருக்க வேண்டுமே. எல்லாரும் நான் சொல்லியிருப்பவற்றை நன்கு யோசித்துப் பார்க்க வேண்டும். “அவன் கிடக்கிறான் கிறுக்கன்” என எண்ணிக்கொண்டு எனது கருத்தை ஆராயாமலிருந்து விடக்கூடாது. காது கேட்கிறதா! ஆம்! எவர் என்ன கூறினாலும் கூறியவர் யார் என்பதைக் கவனிப்பதை விட்டு கூறியிருக்கும் கருத்தைநன்றாக அலசிப் பார்க்க வேண்டும். கூறியிருப்பது தம் அறிவுக்கு ஒத்து வந்தால் ஏற்றுக்கொள்ள வேண்டும். சந்தேகம் ஏற்பட்டால் தமக்குண்டாகிய ஐயங்களை வெளியிட்டுக் கேட்டு அறிய முயலவேண்டும். இரண்டுமின்றிப் பேசாமலிருப் போர் நிச்சயமாக மோசம் போய் விடுவார்கள்!

ஃ ஃ

கடவுளையும், நோய்களையும், வைத்தியத்தையும் சேர்த்துக் கவனித்தால் அதில் ஒரு பெரிய உண்மை வெளியாகக் காணலாம். அதாவது சர்வ வல்லமையுள்ள கடவுள் என்பதாக எவரும் எங்குமில்லை என்பதுதான். ஏனென்றால், கடவுளிருந்தால் உலகம் இப்போதிருப்பது போல இருக்காது. எல்லா சீவர்களும் எவ்விதம் பிணி மூப்பு, சாக்காடின்றி சிரஞ்சீவிகளாகவே இருந்து வருவார்கள்,எங்கும் இன்பமே நிறைவாகவே யிருக்கும், வைத்தியர்களே இருக்கமாட்டார்கள். அரசர்கள் அரசாங்கங்கள் இரா. எல்லா மக்களும் ஒரே குணஞ் செயல்களையுடையவர்களாக இருந்து வருவார்கள். ஆயிரக்கணக்கான மதங்களோ, கோவில்களோ இரா. கடவுள் இல்லை என நான் கூறும்படியோ எனது நாத்திகத் தோழர்கள் கூறும்படியோ எங்

கும். சென்னையிலுள்ள நமதுசகோதரர்கள் இப்பெயரை வைத்திருக்கிறார்கள். நமது இயக்கத்தை நாம் தேசியமாக்க வேண்டுமானல் “ஜஸ்டிஸ் கட்சி” என்ற பெயரையே நாமும் இடவேண்டும்.

ஃ ஃ

ஐக்கியதிட்டம் பூர்ணநிலை அடைவதற்குப் பல வருடங்களாகும் என்பது தற்கால அரசியல் போக்கினால் விளங்குகின்றது. புதிய மசோதா ஐக்கியத்தை எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியமே யில்லை. ஆனால்பூர்ணமகாண சுயயாட்சியுடன் மத்தியபொறுப்பாட்சியையும், பம்பாய் கவர்ன்மெண்டாரின் யாதாஸ்துப்பிரகாரம் கொடுக்க வேண்டுமென்றும், மத்திய பொறுப்பாட்சியின்றி மகாண சுயாட்சி கொடுத்தால் அதை பிராமணரல்லாதார் ஒப்புக்கொள்வதற்கு இஷ்டமில்லை என்றும் கூறினர்.

ஃ ஃ

ஆரம்பக்கல்வி நமது கட்சியில் முக்கிய பிரச்னையாயிருக்கிற தாகையினால் சர்க்காரை இதுசம்பந்தமாக மேலும் மேலும் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தவேண்டும். தற்கால பணக்கஷ்டத்தை உத்தேசித்து ஆரம்பக்கல்வியைப் பற்றிக் கவனிக்காமல் இருக்கமுடியாது. ஆகையால் படித்தநம் இளைஞர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது 5-பேர்களுக்காவது எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுக்க பிரமாணம் செய்துகொள்ள வேண்டும்.

(திராவிடனிலிருந்து எடுக்கப்பட்ட)

இந்து மதத்தால் விளைந்ததென்ன?

மதத்திற்கு மக்களா? மக்களுக்கு மதமா?

[தோழர். கோ. சௌரிராஜன்]

மக்களின் இவ்வுலக வாழ்க்கை நலத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் இயற்றப்பட்ட சட்ட திட்டங்கள் கொள்கைகள் தான் இப்பொழுது மதம் எனச் சொல்லப்படுகிறது. இந்நோக்கத்தோடு தோற்றுவிக்கப்பட்ட மதமானது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டது, காலதேச வர்த்தமானங்களை யுத்தேசித்து மனிதர்களாலேயே மாற்றம் செய்வதற்கும் திருத்துவதற்கும் உரியது என்ற நம்பிக்கை தற்பொழுது பெரும்பாலோர்க்கு இல்லாது போனது பெரிதும் விசனிக்கத்தக்கதே. இதற்குக் காரணம் "மதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது" "அறிவிற்கு மேம்பட்டது" என்ற எத்தகைய சான்றுமில்லாத நம்பிக்கை மக்கள் மனதில் புகுத்தப்பட்டு விட்டதேயாகும். உண்மையிலேயே மதங்கள் கடவுள் சிருஷ்டியானால் ஒரு மதத்தின் கொள்கைகளுக்கும் மற்றொரு மதக்கொள்கைகளுக்கும் மாறுபட்ட அபிப்பிராய பேதங்களும், சண்டைகளும் ஏற்பட வேண்டிய அவசியமில்லை. மதம் கடவுளால் ஆக்கப்பட்டதென்றால் மக்கள் அநாகரீகமாக, காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து வந்த காலத்திலும் மதம் இருந்திருக்கவேண்டும். அப்படியொன்றும் இருந்ததாக எந்த சரித்திரத்திலும் காணப்படவில்லை. எந்த ஆராய்ச்சியாளரும் கூறவுமில்லை. ஆகவே மதம் கடவுள் சிருஷ்டியல்ல என்பது திண்ணம்.

மதம், அக்காலத்திருந்த மக்களின் வாழ்க்கை நிலை, அறிவு, சீதோஷ்ண நிலை, காலதேச நிலைமை முதலியவைகளுக்கு ஏற்றவழியிலேயே ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண்டும். இன்னும் மதத்தின் சட்டதிட்டங்கள் செய்கைகளுக்கு ஒத்ததாய் இல்லாவிட்டாலும், உண்மையையும் நியாயத்தையும் நிலைநிறுத்துவதற்காகச்சொல்லி பொய்யும், நியாயமற்றவைகளையும் ஒப்புக்கொள்ளும் மனிதர்களாலேயே இப்பொழுதிருக்கும் மதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனக்கருதவேண்டியிருக்கிறது. இஃதொருபுறமிருக்க, மதக்கொள்கைகள், பழக்கங்கள் எல்லாம் எங்கும் ஓரேவிதமாக ஏற்பட்டிருக்குமாயின் சீதோஷ்ண நிலை பேதத்தால் உஷ்ணப்பிரதேசமாகிய இந்தியாவில் துறவிகள் என்போர் கோவணத்தோடு திரியவேண்டும் என்றிருக்கும் மதப்பழக்கத்தை, மிக்க குளிருள்ள பிரிட்டனில் உள்ளவர்கள் கையாளுவார்களானல் அவர்கள் உயிர் உடலில் நிற்குமா? இதனாலேயும் மதம், கடவுள், சிருஷ்டியல்லவென்பது நன்கு விளங்குகின்றதல்லவா?

ஆகவே அக்காலத்திலுள்ள ஒரு வகுப்பாரால்-சூட்சிக்காரர்களால் தங்களுடைய சுயநலத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் ஏற்படுத்தப்பட்ட வாழ்க்கைக்கு ஒவ்வாத ஒரு தலைப்பட்சமான கொள்கைகளே இப்பொழுது மதச்சட்டங்களாக நம்முன் காண்கின்றன. தற்பொழுது உலகிலுள்ள எந்த மதத்தை எடுததுக்கொண்டாலும் குருட்டு நம்பிக்கை என்ற ஒரே அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டது என்பதும், பகுத்தறிவைக் கொண்டு அவைகளை அலசிப்பார்த்தால் அவைகள் நிலையற்றது என்பதும் நன்கு புலனாகும் ஏனெனில் உலகில் இயற்கையாகத்தோன்றும்— ஏற்படும் காட்சி, சக்தி ஓட்டம்ஆகிய எல்லாம் மக்களின் நன்மைக்கும், சுகத்திற்குமாகும் என்பது ஓர் ஆராய்ந்தறிந்த உண்மை. அதே போல மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட எதுவும், மக்களின் நன்மையைக் கருதியே இருக்கவேண்டும். ஒரு காலத்தில் நன்மையாய்த் தோற்றுவது பிறிதொரு காலத்தில் தீமையாகவும், ஒரு காலத்தில் தீமையாய் உள்ளவை மற்றொரு காலத்தில் நன்மையாகவும் மாற்றமடைவது உலகியற்கையும் அநுபவமுமாகும். ஆகவே எந்தந்த காலங்கட்கு எவைஎவை நன்மையும் இன்பமும் அளிக்கின்றனவோ அவைகளை ஏற்றுக்கொண்டு புறம்பாயுள்ளவைகளை நீக்குதலே கற்றோர்க்கழகும் கடமையுமாகும். மிக்கதோர் பெரிதாகவுள்ள இமய மலை மக்கட்கு தீமை பயக்குமாயின் அதே நிமிடத்தில் அதை சல்லிசல்லியாக உடைத்தெரிந்து நன்மை பயக்கத்தக்க எந்த பாலைவனமாகயிருந்தாலும் அதை அப்படியே வரவேற்று ஒப்புக்கொள்ளுதலே உண்மை நிலையும் முன்னேற்றமடையும் வழியுமாகும். இதே போல மக்களின் இவ்வுலக வாழ்க்கைக்கும், அநுபவத்திற்கும், நன்மைக்கும், உடல்நலத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் ஒத்தவாறுதோற்றுவிக்கப்பட்ட தன்று. கொள்ளப்படும் மதச்சட்டங்கள் மக்கட்குப் பயன் தராத—ஒவ்வாத காலங்களில் அவைகளை மாற்றவோ, புதுப்பிக்கவோ மனிதருக்குரிமையுண்டு. அதைவிட்டு அம்மதம் எக்கொள்கையோடிருந்தாலும் அதைப் பின்பற்றத்தான் வேண்டும் என்றிருந்தால் அம்மதம் மக்களுக்காக ஏற்பட்டதாக ஆகுமா? அம்மதம் மக்களுக்குத்தான் நன்மைபயக்குமா?

ஒரு மதத்தினுடையவோ அல்லது மதத்தலைவனுடையவோ கொள்கைகளும் ஒழுக்கங்களும் சிரியதாக இருப்பதால் மாத்திரம் அந்த மதத்தை உயர்வானது என்று கூறிவிடமுடியாது. ஆனால் அம்மதத்தைப்பின்பற்றுபவர்கள் நடவடிக்கைகளையும் சௌகரியத்தையும், முன்னேற்றத்தையும் பொருத்திருக்கின்றது. அம்மதத்தின் மேன்மை எந்த மதமாயினும்சரி, அதில் எந்த விஷயம் குறிப்பிட்டிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அது மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாததா? அன்று? அதனால் மக்கள் துன்பமின்றி இன்பம் பெறலாமா என்பதையே குறியாகக்கொள்ளவேண்டும். அவ்வாறு மக்களின் சுகத்தையும், முன்னேற்றத்தையும், பொருட்படுத்தாத ஒரு மதத்தை மக்கள் என் பொருட்படுத்தி அதற்கு அடிமைப்பட்டு அறிவிழக்கவேண்டுமென்பது தான் நமது கேள்வி. மதஅடிமைப் பாசத்தால் கட்டுண்ட எந்த நாட்டு மக்களாவது சுதந்தரத்துடனும், வீரத்துடனும், கல்விபெற்றும், செல்வம் பெருத்தும், ஆராய்ச்சித்திறன் எய்தியும் வாழ்ந்ததாகவாவது அல்லது மக்களுக்கான மதத்தையுடைய நாட்டுடன் போட்டிபோட்டு வெற்றி பெற்று முன்னேற்றமடைந்ததாகவோ நாம் இதுவரை கேள்விப்பட்டதுமில்லை படித்ததுமில்லை.

இஃதொருபுறமிருக்க, நம் நாடாகிய இந்தியாவில் தோன்றியதாகக் கூறப்படும் இந்துமதத்தைப்பற்றி பேசவதென்றாலோ நாவெழேன் என்கிறது; எழுதுவதென்றாலோ எழுதுகோல் நகரேன் என்கிறது. அந்தோ! என்? இக்கொடிய இந்து மதம் மக்களை அறியாமைப்பாசத்தால் கட்டி அடிமைப்படுகுழியில் ஆழ்த்தி வைத்திருக்கின்றது. சுருங்கக்கூறின் இம்மதத்தின்படி மக்கள் ஒழுகவேண்டுமேயல்லாது மக்களின் சௌகரியத்தையோ முன்னேற்றத்தையோ அறிவையோ இந்துமதம் கருதக்கூடியதன்று. இக்கொடிய மதம் மனித சமூகத்தின் அறிவை அறவே பாழ்படுத்தி அழித்துவிட்டது என்பதைக்கூறுதல் மிகையாகாது. பல்லாண்டுகளாக இம்பாழும் மதத்திற்கு மக்கள் அடிமைகளாகி அவர்கள் முன்னேற்றம் பெரிதும் தடைபட்டுப்போயிற்று என்பதை யாரேனும் மறுக்க முடியுமா? நம் நாட்டில் மக்கள் எல்லோரும் சமம் என்ற மனப்பான்மையைப்போக்கி, சமயப்பிரிவும், ஜாதிவித்தியாசமும், பிறப்பில் உயர்வு தாழ்வும், தீண்டாமையும், பிறவும் தோன்றியமைக்கு இந்த இந்துமதமே காரணம் என்பது நன்கு விளங்கவில்லையா! இதனால் இம்மதம் மக்களை ஒற்றுமையடையச்செய்வதைவிடுத்து அவர்களைப்பிரித்து வைத்துக்கொண்டிருக்கின்றது. எழுகோடி ஆதிதிராவிட மக்களுக்கு கல்வியளிக்க மறுத்து அவர்களைத்தெருவில் நடக்கக்கூடாது, தீண்டக்கூடாது, பார்க்கக்கூடாது என்று நாயினும் கடையோராய்-மிருகங்களுக்குரிய உரிமையில்லாதவராய் செய்திருக்கின்றது இம்மதம். இஃதை எப்படி மக்களுக்காகத் தோற்றிய மதம் எனக் கூறுவது; இன்னும் இம்மதம் ஆணுக்கொரு நீதியெனவும் பெண்ணுக்கொரு நீதியெனவும் கற்பித்துபெண்களை சாஸ்வத அடிமைகளாக்கி அவர்கள் கல்வி கற்கவும் மறுக்கின்றது. இம்மதத்தில் கல்விக்குத். தலைவி சரஸ்வதி என்று பெண் தெய்வமாகக் கொண்டாடி வந்தும்-பெண்களுக்குக் கல்வியில்லை என்ற கொள்கையையுடைய இம்மதம் நல்நோக்கமுடையதாகுமா? ஆகவே இம்மதம் எப்படி மக்களுக்கேற்றதாகும்.

இன்னும் இம்மதம் உலகத்திலுள்ள பலவிதமான கொடிய நோய்களுக்கும் அகால மரணத்திற்கும் ஆஸ்பதமான விபசாரத்தை வளர்க்கின்றது. எங்ஙனமெனில் விபசாரத்திற்கென ஒரு வகுப்புப் பெண்களை ஒதுக்கி அவர்களுக்குக் கடவுள் பேரால் பொட்டுக் கட்டி தேவதாசிகளாக்கி அவர்களை மானமற்று ஜீவிக்கச் செய்வது இந்திய இந்து மதமல்லவா? இஃதன்றி ஒரு ஆடவன் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம்; ஆனால் ஒரு ஆடவனை இழந்த பெண், அதாவது ஒரு விதவை மறுபடியும் மணம் செய்து கொள்ளக்கூடாது என்பது இம்மதச் சட்டமாம், இதை எப்படி ஏற்பது? இதனால் இதை மக்களுக்கொத்த மதம் எனக்கூற முடியுமா? இன்னும் நம் நாட்டில் மதக்கொள்கைகளின் காரணத்தால் நடை

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

களை உண்டாக்கி யிருக்கமாட்டார். நமது எதிரில் சதாகாலமும்தோன்றி நம்மை மகிழ்வித்து அவரும் மகிழ்ந்து கொண்டிருப்பார் இத்தியாதி இத்தியாதி......"

ஃ ஃ

வைத்தியத் தோழர்களே! நான் கூறியிருப்பது மெய்யா? பொய்யா? என்பதை யோசித்துப் பதில் சொல்லுங்கள்! இப்போதாவது நான் முதலில் பாத்தியங் கொண்டாடியதற்கு இடமிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா? நாத்திகரின் ஒரு பிரிவினர் தாம் நீங்கள். எனவே எனது சகோதரர்களாகிய நீங்களும், உங்கள் தொழிலும் பல்லூழி காலம் வரை நிலைத்திருக்க நான் வாழ்த்துகிறேன். நாத்திகத்துக்கும் வைத்தியத்துக்கும் ஜே! கடவுளுக்கு ஜா!! ஹா! ஹா!! ஹா!!!

குடி அரசு.

ஈரோடு 1932 ஜூன்மீ 12-உ

சிறுபிள்ளைத்தனம்

:0:

சிறுபிள்ளைகள் விளையாட்டிலேயே கவனமுள்ளவர்கள்; தாம் செய்யும் வேலைக்குப் பிற்காலத்தில் இன்னது பலன் கிடைக்கும் என்பதுபற்றிச் சிறிதும் சிந்திக்கமாட்டார்கள். தற்கால சந்தோஷத்திற்காக எந்தக் காரியங்களையும் பொறுப்பின்றிச் செய்யத்துணிவார்கள். அவர்களுக்குக்கவலையோ பொறுப்போ ஒரு சிறிதும் தெரியாது. இதனால்தான் 'சிறுபிள்ளையிட்ட வெள்ளாமை வீடுவந்து சேராது' என்று சொல்லுவது வழக்கம்.

இத்தகைய விளையாட்டுப்பிள்ளைகளைப்போலத்தான் இப்பொழுது காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள் நடந்துவருகிறார்கள். உண்மையில் கொஞ்சங்கூட பொறுப்புள்ள காங்கிரஸ்காரர்கள் யாரும் இப்பொழுது இல்லை. பொறுப்பற்ற முறையில் காலித்தனமான காரியங்களைச்செய்து வீண் கலகத்தை உண்டுபண்ணும் சில சிறுபிள்ளைத்தனமுடையவர்களே இப்பொழுது 'காங்கிரஸ்' என்பதன் பெயரால் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தபால் பெட்டிகளுக்குத் தீயிடுவது, தபாலாபீசை மறியல் செய்வது, ரயிலை மறியல் செய்வது, காங்கிரஸ் கட்டளைகளுக்கு உட்படாத தனித்த வியாபாரிகளுக்கு நஷ்டத்தை விளைவிப்பது அவர்கள் கடைகளை ரகசிய முறையில் தீக்கிரையாக்குவது போன்ற காரியங்களை எந்தயோக்கியமுள்ள மனிதராவது செய்ய முடியுமா? இச்செயல்களெல்லாம் தேசத்தில் நடைபெறவில்லையா?

திரு. சரோஜினி அம்மாள் அவர்களும், திரு. மாளவியாபண்டிதர் அவர்களும் டில்லியில் காங்கிரஸ் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து நடத்தத்தொடங்கும்போது அரசாங்கத்தார் அக்காங்கிரசைத் தடைசெய்து விட்டதும், பிறகு காங்கிரஸ் நடவாமற்போனதும் யாவரும் அறிந்த விஷயம். ஆனால் காங்கிரஸ்காரர்கள் டில்லி மகாநாட்டை அரசாங்க உத்தரவை மீறி நடத்திவிட்டதாகவும், தீர்மானங்கள் நிறைவேற்றிவிட்டதாகவும் வீண்புரட்டாக விருப்புப் பேசிக்கொண்டனர். டில்லி காங்கிரஸ், அரசாங்கத்தார் செய்திருந்த தடைப்பந்தோஸ்பதுகளையெல்லாம் மீறி நடந்துவிட்டதாகவும், முக்கியமான தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்றி விட்டதாகவும் பத்திரிகைகளும், பிரசுரித்துக்கிளர்ச்சி பண்ணின. பொறுப்புள்ள 'காங்கிரஸ்' தலைவர்கள் என்பவர்கள் எவரும் வெளியில் இல்லாதிருக்கும்போது இவ்வாறு காங்கிரசைக் கூட்டியதாகவும், அவற்றைத்தேசமக்கள் பின்பற்றவேண்டும் என்பதாகவும் பேசியதும், புரளிபண்ணியதுமே சிறுபிள்ளைத்தனமான காரியமாகும். இதன்பிறகுதான் சிறுபிள்ளைத்தனமான செயல்களும் அதிகப்பட்டன என்பதில் ஐயமில்லை.

இதன்பின் இன்னுஞ் சில இடங்களில் மகாநாடு கூட்டுவதாக விளம்பரம் புரிந்ததும் அரசாங்கத்தார் அவைகளைத்தடுத்ததும் டில்லி காங்கிரஸ் மாதிரியே எங்கோ ஓரிடத்தில் மகாநாடு கூட்டியதாகவும், டில்லி காங்கிரஸ் தீர்மானங்களை ஆதரித்ததாகவும் 500 பிரதிநிதிகள் வந்திருந்ததாகவும், 1000 பிரதிநிதிகள் வந்திருந்ததாகவும் பத்திரிகைகளில் எழுதிப்புரளி பண்ணிக்கொண்டிருக்கின்றனர். இதற்கு உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லா 'காங்கிரஸ்' மகாநாட்டை எங்கோ ஓரிடத்தில் கூட்டியதாகவும், தமிழ் மாகாண மகாநாட்டை மதுரையில் எங்கோ ஒரு சந்திக்கடையில் கூட்டியதாகவும், பத்திரிகைகளில் வெளியான செய்திகளே போதுமானதாகும். இன்னும் கல்கத்தாவைச்சேர்ந்த ஹௌராவில் நடத்த முயற்சித்த காங்கிரஸ் மகாநாடு, குண்டூரில் நடத்த முயற்சித்த ஆந்திரமாகாண மகாநாடு, பகல் காட்டில் நடத்தமுயற்சித்தமகாநாடுகாகபுரியில்நடத்த முயற்சித்த மத்திய மாகாண மகாநாடு,அமிர்தசரசில்நடத்த முயற்சித்தபாஞ்சால மாகாண மகாநாடு முதலியவைகளும் போதிய உதாரணங்களாகும். இந்த மகாநாடுகளால் உண்டானபலன் என்ன? பத்திரிகைகளில் மகாநாடு கூட்டப்போவதாக விளமபரம் புரிவதும், உடனே அரசாங்கத்தார் மகாநாடு நடத்துவதாக விளம்பரம் பண்ணிய நிர்வாகிகளுக்கு 144 போடுவதும், அதை அவர்கள் மீறுவதும், மகாநாட்டிற்கே தடை உத்திரவு போடுவதும் பிறகு அந்தப்பொறுப்பற்றவர்கள் மகாநாடு நடத்திவிட்டதாகப் புரளிபண்ணுவதும் ஆகிய வீண் விளையாட்டுக்காரியங்களைவிட வேறுகடுகளவேனும் பலன் விளைந்தது என்று சொல்லமுடியுமா?

இவ்வாறே தான் "காங்கிரஸ்" காரர்களால் செய்யப்படும் மறியல் பொதுக்கூட்டம் முதலியவைகளும் நடைபெறுகின்றன. யாராவது தங்களுக்குப் பணம் கொடுக்காத வியாபாரிகள் இருந்தால் அவர்கள் கடைக்கு மறியல் செய்வதாக இரண்டு மூன்றுபேர் விளம்பரம் பண்ணிக்கொண்டு போவதும்,போலீசார்வந்தவுடன் ஓட்டமெடுப்பதும் வழக்கமாகிவிட்டது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் பொதுக்கூட்டம் நடைபெறப்போவதாக விளம்பரம் பண்ணுவதும், பிறகு அந்த இடத்தில் கூட்டத்தை நடத்தாமல் நாலு பேரைச்சேர்த்துக்கொண்டு எங்காவது ஒரு குப்பை மேட்டில் பேசிக்கொண்டிருந்து விட்டுவந்து போலீசாரை ஏமாற்றிக் கூட்டத்தை நடத்திவிட்டதாக விளம்பரம் பண்ணிக்கொள்வதும், ஜாலவித்தை காட்டப்போவதாகவும், கழைக்கூத்தாடப்போவதாகவும் கோழிச்சண்டை கிடாச்சண்டை நடக்கப்போவதாகவும் விளம்பரம் பண்ணிக் கூட்டத்தைச்சேர்த்து அதில் 'காங்கிரஸ்' பிரசாரம் பண்ணிவிட்டு போலீசார் வருவதற்கு முன் கூட்டத்தைக்கலைத்து விட்டு ஓடிவிடுவதாகவும் செய்திகள் வெளிவருகின்றன. இவைகளுக்கும், மாமரத்தைக் குத்தகை எடுத்திருக்கின்ற ஒருவன் கல்லெறிந்து மாங்காய் அடிக்கும் சிறுபிள்ளைகளைத் தடியைத்தூக்கிக்கொண்டு பயமுறுத்தி விரட்டவும், அவர்கள் ஓடவும், பிறகு குத்தகைக்காரன் மறைந்தபின் மீண்டும் அந்தப் பிள்ளைகள் கல்லெறிந்து மாங்காய் அடிக்கவும், மறுபடியும் குத்தகைக்காரன் முன்போலவே விரட்டவும் இவர்கள் ஓடவும் ஆக இப்படியே அடுத்தடுத்து நடைபெறுவதற்கும் என்னவித்தியாசம் என்றுதான் கேட்கிறோம்.

'காங்கிர'சானது அதைச்சேர்ந்தவர்கள் பிதற்றிக்கொள்வது போல இந்தியாவின் 35 கோடி மக்களுக்கும் பிரதிநிதியாக இருக்குமானால் ஏன் இந்து முஸ்லீம் சச்சரவு உண்டாகாமல் பார்த்துக் கொள்ளக்கூடாது? ஏன் தீண்டத்தகாதார் தீண்டுவோர் சண்டை உண்டாகாமல் பார்த்துக்கொள்ளக்கூடாது? சென்ற ஆண்டில் கான்பூரில்நிகழ்ந்தஇந்து முஸ்லீம் கலகம் இன்னும் இரத்தத்தில் எழுதப்பட்டு நம் மனதைவிட்டு அகலாத பயங்கரக்காட்சியாக இருக்கின்றது. சென்றசில தினங்களுக்கு முன் பம்பாயில் ஆரம்பித்த இந்து முஸ்லீம் கலகம் இன்னும் சரியாக ஓய்ந்தபாடில்லை. தாழ்த்தப்பட்ட தீண்டத்தகாத மக்களுக்குத் தீண்டத் தகுந்த உயர்த்திக்கொண்டிருக்கும் மக்கள் ஒவ்வொரு நாளும் செய்து வரும் கொடுமை சகிக்க முடியாததாக இருக்கின்றது. இவற்றையெல்லாம் சரிப்படுத்த முடியாத ஒரு ஸ்தாபனமோ, அதைச் சேர்ந்தவர்களோ, நாங்கள் தான் 35 கோடி மக்களுக்கும் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்வது வெட்கக் கேடல்லவா?

காங்கிரசின் யோக்கியதையும், அது செய்யும் காரியங்களால் தேசத்தில் நடைபெறும் காலித்தனங்களும், கலகங்களும் இந்த நிலையில் இருக்கும் போது, இந்தியாவின் அடிமையைப் பாதுகாப்பதற்கு வைசிராய் அவர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் அவசர சட்டத்தைக் கண்டிக்க முன்வந்து விட்டார்கள். இவ்வளவு கட்டுதிட்டங்களும், கவனிப்பும், அவசரச் சட்டமும் இருக்கும் பொழுதே போக்கற்ற காலிகள் பலர் "காங்கிரஸ்" பெயரைச் சொல்லிக் கொண்டு அடாத செயல்களைச் செய்து, தேசத்தின் அமைதிக்குப் பங்கம் விளைப்பார்களானால், இந்தக் கட்டு திட்டங்களும், கவனிப்பும்,அவசரச்சட்டங்களும்இல்லாமல்போனால்தேசத்தின் கதி என்னவது? பம்பாயில் நடப்பது போன்றகலகம் மூலைக்குமூலை தாராளமாக நடைபெறாமலிருக்கவும், நிரபராதிகளான பொதுஜனங்களின் சொத்துக்களுக்கும் சுதந்தரங்களுக்கும்உயிர்களுக்கும் அபாயம் ஏற்படாமலிருக்கவும் முடியுமா என்று கேட்கிறோம்.

"கேவலம், சிறுபிள்ளைகள் தண்ணீர்ப்பந்தல் வைக்கும் பொருட்டு யாசகங்கேட்பதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாமல் அவர்களைத் தொந்தரவு செய்த சில துவேஷபுத்தியுடைய இந்துக்களால்நேர்ந்தகலகந்தான் பம்பாய் இந்து முஸ்லீம் கலகத்திற்குக் காரணம்" என்று சொல்லப்படுவதை விட நமக்கு வேறு என்ன அவமானம் வேண்டும்?

இத்தகைய நிலைமையைப் போக்கி தேசத்தில் அமைதியை உண்டாக்க வேண்டுமென்னும் கவலை மிதவாதிகள் என்று சொல்லப்படுகின்ற, காங்கிரசில் சேராத அரசியல் வாதிகளில் அனேகருக்கு இருந்தாலும், அவர்கள்

வெளிப்படையாகக் காலிகளின் செயல்களைக் கண்டிக்கவோ, தேச மக்களுக்கு நன்மையான வழிகளை எடுத்துக் காட்டவோ தைரியமாக முன் வராமல் பதுங்குகிறார்கள். காங்கிரஸ் செயல்களைக் கண்டிப்பதனால் எங்கே தங்கள் செல்வாக்குக் குறைந்து போய் விடுமோ என்று பயப்படுகிறார்கள். ஆகையால் அவர்கள் பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டும் "விலாங்கு" மீன்களைப் போல் அரசாங்கத்தாருக்கு நல்ல பிள்ளைகளாகவும், காங்கிரஸ் காரர்களிடம் அநுதாபமுள்ளவர்கள் போலவும் நடந்து கொண்டு தங்கள்காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறார்கள். இச்சமயத்தில் மற்றொரு விஷயத்தையும் கவனிப்போம். வெளியில் பேசும் மிதவாதிகளெல்லாம், காங்கிரசுடன் ராஜிபண்ணிக் கொள்ளாமல், திரு காந்தியை விடுதலை செய்யாமல் தேசத்தில்சமாதானத்தை ஏற்படுத்தமுடியாதென்றும், அரசியல்சீர்திருத்தம் கொடுத்தாலும் அதைச் சரியாக நடத்தி வைக்க முடியாதென்றும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா என்று தான் நாம் கேட்கிறோம். லார்டு இர்வின் அவர்கள் வைசிராயாக இருந்த காலத்தில், திரு. காந்தியவர்களுக்கும், லார்டு. இர்வின் அவர்களுக்கும் ராஜி ஒப்பந்தம் ஏற்பட்டதே: சில நாள் அவ்வொப்பந்தமும் அமுலில் இருந்ததாகக் கருதப்பட்டதே: அப்பொழுது தான் தேசத்தில் அமைதியும் சமாதானமும் நிலவி இருந்ததென்று சொல்ல முடியுமா? ஆகையால் காங்கிரசோடு ராஜி செய்து கொள்ளுவதன் மூலம் தேசத்தில் அமைதி ஏற்பட்டு விடும் என்று கூறுவது வீண் பேச்சென்றே சொல்ல வேண்டும். அன்றியும் பூரண சுயேச்சை கேட்கும் காங்கிரசுக்கும், மாகாண சுயாட்சி கொடுக்கலாமா? என்று யோசனை செய்து கொண்டிருக்கும் அரசாங்கத்திற்கும் எப்படி ராஜி ஏற்படமுடியும்? ஏற்பட்டாலும் எத்தனை நாளைக்கு அந்த ராஜி நிலைத்து நிற்க முடியும்? என்று யோசித்துப் பாருங்கள்.

நமது நாட்டில் உள்ள வகுப்புப் பிரிவுகளும், துவேஷங்களும், ஒழிகின்ற வரையில் மக்களுக்குள் ஒற்றுமை ஏற்பட முடியாது என்ற அபிப்பிராயத்தை மறுக்கின்றவர்கள் யாருமில்லை. இருந்தும், இந்த சாதி, மதங்களை ஒழித்து ஒற்றுமையுண்டாக்க யாரும் முயல முன் வரவில்லை. இந்த நிலையில் பூரண சுயேச்சைப் பேச்சுப் பேச சிறிதேனும் யோக்கியதை உண்டா வென்று கேட்பதில் என்ன தவறு இருக்கின்றது?

திரு. காந்தியார், வட்டமேஜை மகாநாட்டுக்குப் போகு முன்னர் "வகுப்புப் பிரச்சினையில் ஒரு முடிவேற்பட்டால் தான் இங்கிலாந்து போவேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தாரே அதன்படி செய்தாரா? இங்கிலாந்தில் பேசும் போதெல்லாம், "இந்தியாவுக்குப் போனவுடன் முதலில் வகுப்புப் பிரச்சினையை முடிவு செய்த பிறகே மற்ற காரியங்களைப் பார்ப்பேன்" என்று சொல்லிக் கொண்டாரே! இந்தியாவிக்கு வந்த பின் என்ன செய்தார்? சட்ட மறுப்பில் கலந்து கொண்டு சிறை சென்று, நூல் நூற்றுக் கொண்டும், பகவத்கீதை படித்துக் கொண்டும் ஓய்வு பெற்றிருப்பதை விட வேறு என்ன செய்தார்? இதை ஆலோசித்துப் பார்க்கும் போது, திரு, காந்தியாராலோ, அல்லது காங்கிரசாலோ வகுப்புப் பிரச்சினையைத் தீர்த்துச் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பது விளங்குகிறதல்லவா? பூரண சுயேச்சைப் பேச்சுப் பேசிக்கொண்டு காலிகளைத் தூண்டி விட்டுக் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கத்தான்காங்கிரசால் முடியும் என்பது தெரியவில்லையா?

ஆகையால் இச்சமயத்தில், காங்கிரசோடு ராஜி பேச வேண்டுமென்றும், அவசரச் சட்டங்கள் கூடாதென்றும், உடனே காங்கிரசின் விருப்பப்படி பூரண சுயேச்சை கொடுத்தாக வேண்டும் என்றும் பல்லவி பாடிக்கொண்டிருப்பதில் பயனில்லை. பொறுப்பற்ற முறையில் சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொண்டு தேசத்தில் அமைதியைக் கெடுக்கின்றவர்கள் யாரா யிருந்தாலும் அவர்களை அடக்கவும், அவர்களுக்குப் புத்தி கற்பிக்கவும், அவர்களுக்குப் பொது ஜனங்களிடம் செல்வாக்கில்லாமற்செய்யவும், பொதுஜனங்கள் அவர்கள் செயல்களுக்கு ஆதரவுஅளிக்காமலிருக்கும்படிசெய்யவும் எச்சரிக்க வேண்டியதே இச்சமயத்தில் உண்மையானதேச ஊழியர்களின் கடமையாகும் என்று கூற விரும்புகிறோம்.

சத்தியாக்கிரகம் வீண்.

"சத்தியாக்கிரகம்" என்பது "சண்டித்தனம்" என்பதும், அதனால் வீண் சிரமமும், நஷ்டமும் எற்படும் என்பதும், அது மனிதருடையவீர உணர்ச்சியைக் குறைத்து அடிமைப்புத்தியை வளர்க்கக் கூடியதென்பதும் நமது இயக்கத் தோழர்களுக் கெல்லாம் தெரியும். ஆகையால் தான் நாம் சத்தியாக்கிரகத்தைக் கண்டித்து வருகிறோம்.

அரசியல் துறையில் சத்தியாக்கிரகம் சிறிதும் பயனளிக்காதென்பது வெளிப்படையாகத் தெரிந்த செய்தி. சமூக ஊழல்களைப் போக்கும் வகையில் சத்தியாக்கிரகம் பயன் தரக்கூடும் என்ற ஒரு நம்பிக்கை சிலரிடம் இருந்து வந்தது. அந்நம்பிக்கையும் பயனற்றதென்பதை விருதுநகர் மகாநாட்டிலும், அதன் பின் பல மகாநாடுகளிலும், நமது பத்திரிகை மூலமாகவும் விளக்கப்பட்டிருக்கிறது. இதை உண்மையென்று நிரூபிக்க, சமீபத்தில்,

தஞ்சை ஜில்லா இரண்டாவது

சுயமரியாதை மகாநாடு.

ஜூன் மாதம் 18, 19 தேதி சனி, ஞாயிறுகளில் மன்னார்குடியில் நடைபெறும்.

தோழர். முத்துசாமி வல்லத்தரசு அவர்கள் பி. ஏ. பி. எல்.

மகாநாட்டைத்திறந்து வைப்பார்.

தோழர். குஞ்சிதம் அவர்கள்

பி. ஏ. எல். டி. தலைமை வகிப்பார்.

தொண்டர் மகாநாடு.

—:0:—

தோழர். டி. வி. சுப்பிரமணியம்

அவர்கள் தலைமை வகிப்பார்.

தோழர். வி. பார்த்தசாரதி

அவர்கள் திறந்துவைப்பார்.

தோழர் ஈ. வெ. ரா. படத்தை

,, டி. வி. சுப்பிரமணியம்

அவர்கள் திறந்து வைப்பார்.

மகாநாட்டிற்கு இந்த ஜில்லாவிலிருந்தும் வெளி ஜில்லாக்களிலிருந்தும் ஏராளமான சுயமரியாதைத்தோழர்கள் விஜயம் செய்வார்கள்.

அன்பர்கள் அனைவரும் விஜயம் செய்யவேண்டுகிறோம்.

P. சோங்கண்ணு, சர்வாதிகாரி.

A. ஆறுமுகம், M. கோபால்சாமி காரியதரிசிகள்.

நாசிக்கில், தீண்டாதவர்கள் செய்த சத்தியாக்கிரகம் சம்பந்தமாக அவர்களுக்கும், சனாதன தர்மிகளுக்கும் உண்டான சச்சரவை, நாசிக் ஜில்லா மாஜிஸ்திரேட் திரு. எல். என். பிரௌன் அவர்கள் விசாரணை செய்து தீர்ப்பளித்து உத்தர விட்டிருப்பதே போதுமானதாகும்.

நாசிக்கில், ராமகுண்டம், லட்சுமண குண்டம், தனுர்குண்டம், சீதாகுண்டம் என்று நான்கு தீர்த்தக் குளங்கள் இருக்கின்றன. இந்தக் குளங்களைச் சுற்றி வருவதற்கு "சாந்தவா" என்று சொல்லப்படும் வழி ஒன்றிருக்கிறது, இந்தக் குளங்களில் குளிக்கவும் "சாந்தவா"வில் நடக்கவுமே தீண்டாதவர்கள் சத்தியாக்கிரகம் பண்ணினார்கள். இதை எதிர்த்தே சனாதன தருமிகளும் போர் புரிந்தார்கள். கடைசியாக "மாஜிஸ்திரேட்" தீண்டாதவர்களுக்கு அந்தக் குளங்களில் குளிக்கவும், அந்த வழியில் நடக்கவும் உரிமை யில்லையென்று தாம் நம்புவதாகவும், ஆகையால் "சிவில் கோர்ட்" மூலம் இவ்வுரிமைகளுக்கு உத்திரவு பெறும் வரையிலும், அந்தக் குளங்களை நெருங்கவும், அவைகளில் குளிக்கவும் கூடாதென்று கிரிமினல் புரொஸிஜர் கோட் 147-3-வது பிரிவின்படி உத்திரவு செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறிய தீர்ப்பின் உத்தரவு வருமாறு:—

பொதுவாகத் தீண்டாத வகுப்பினருக்கு நான்கு குண்டங்களின் அருகே செல்லவும் அவைகளில் இறங்கிக்குளிக்கவும் உரிமையில்லை யென்று நான் நம்புகிறேன். ஆதலால் லட்சுமணகுண்டம், தனுர்குண்டம், ராமகுண்டம், சீதாகுண்டம், என்னும் இந்த நான்கு குண்டங்களின் அருகே செல்லவாவது அவைகளில் இறங்கிக்குளிக்கவாவது கூடாதென்று மகர்களுக்கும், மங்கர்களுக்கும், தோடர்களுக்கும், பங்கிகளுக்கும், மற்றுமுள்ள தீண்டாத வகுப்பினர்களுக்கும் கிரிமினல் புரொஸீஜர் கோட் 147-3 வது பிரிவின்படி நான் தடை உத்தரவு செய்கிறேன். தீண்டாதவர்கள் இவைகளில் குளிப்பதற்கு சிவில்கோர்ட் மூலம் உத்தரவு பெறும்வரையிலும்இவைகளின் பக்கத்தில் நெருங்கவோ அல்லது இவைகளின் இறங்கிக்குளிக்கவோ அவர்களுக்கு உரிமை இல்லை.

குண்டங்களைச்சுற்றி வரும் பிரயாணிகள் சாந்தவாவை உபயோகப்படுத்துகின்றார்கள். ஆதலால் அதைப்பொதுப் பாதையாக உபயோகிக்கலாமா என்பது இரண்டாவது விஷயம். நாகரிகமாக உடைதரித்திருக்கும் கிறிஸ்துவர்களும், முஸ்லிம்களும், அவ்வழியாக நடக்க விடப்படுகிறார்கள் என்று சாட்சிகளின் மூலம் தெரிகிறது. ஆனால் அந்த சாட்சிகள் இந்த வழக்கிற்குப் பொருத்தமாக இல்லை. ஆகையால் தீண்டாத வகுப்பைச் சேர்ந்த இந்துக்கள் சம்பந்தமான இவ்வழக்கில் தீண்டாத வகுப்பு இந்துக்களுக்கு சாந்தவாவை உபயோகிக்க உரிமையுண்டு என்பது வெளியாக வில்லை'

இது தான் மாஜிஸ்திரேட் திரு. பிரௌன் அவர்களின் தீர்ப்பின் உத்தரவாகும்.

இவ்வுத்தரவில், மகமதியர் கிறிஸ்தவர் முதலான அன்னிய மதஸ்தினர் நடக்கும் ஒரு வழியில், இந்து மதத்தைச் சேர்ந்த தீண்டாதவர்களுக்கு மாத்திரம் நடக்க உரிமையில்லை என்று மாஜிஸ்திரேட்டால் குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்க வேண்டுகிறோம். இவ்வாறு தீர்புக் கூறுவதற்கு, இந்துக்களின் பிடிவாதமும் குருட்டு மாமூல் பழக்கமும் காரணமல்லவா? இப்பழக்க வழக்கங்களை ஆதாரமாகக் கொண்டு தானே மாஜிஸ்திரேட் உத்தரவளித்திருக்கிறார்? இதற்கு விட்டுக் கொடுக்காத இந்துக்களும், இப்பழக்க வழக்கங்களுக்கு ஆதரவளிக்கும் சட்டமும், நியாயமும் இருக்கும் வரையிலும் தீண்டாதார்களுக்கு சத்தியாக்கிரகத்தினால் என்ன நியாயம் கிடைக்க முடியும்?

ஆகவே உண்மையில் எளிதாகச்சமூக மத உரிமை பெற விரும்புகின்றவர்கள் செய்யவேண்டிய வேலை சட்டஞ் செய்வதற்குக் கிளர்ச்சி செய்ய வேண்டியதேயாகும். "எந்தப் பொது இடங்களிலும் எல்லார்க்கும் செல்ல அனுபவிக்க உரிமையுண்டு" என்கின்ற சட்டம் ஏற்பட்டு விடுமானால், அப்பொழுது இச்சட்டத்திற்குக் கட்டுப் படாமல் தடை செய்கின்றவர்களிடம் சத்தியாக்கிரகம் போன்ற காரியங்களைச் செய்வது ஒரு சமயம் பயன் தரக்கூடியதாக இருக்கலாம் ஏனென்றால் சட்ட பலமும், உரிமையும் அப்பொழுது ஏற்பட்டு விடுகிறது. அதிகாரிகளும் இம்மாதிரி தடையுத்தரவு பிறப்பிக்கவும், தீர்ப்பளிக்கவும், முடியாது என்பது உண்மையல்லவா?

ஆகையால் ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டுத் தீண்டப்படாதவர்களாக வைத்துக்கொடுமைப்படுத்தப்பட்டிருக்கும் கூட்டத்தார் அமைதியான முறையில் அரசியல் உரிமைகளைக் கைப்பற்றி தங்கள் உரிமைகளுக்குச் சட்டங்கள் செய்வதன் மூலம் சுதந்தரம்பெற முயல்வதே சிறந்தவழி யென்பதை எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். ஆனால் தற்சமயம் சுதந்தரமடைவதில் தங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்த சத்தியாக்கிரகம் போன்ற பிரசாரம் தீண்டாத வகுப்பினரைப் பொறுத்தவரையில் ஒருவகையில் சிறிது சாதகமளிக்கக்கூடிய தென்பதை ஒப்புக்கொள்ளுகிறோம்.

இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு.

வரவேற்புக்கழக அமைப்புக்கூட்டம்.

காரைக்குடி முத்துப்பட்டணம் தோழர் ராம. சுப. இல்லத்தில் சென்ற 5—6—32 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு தோழர் ராம. சுப்பையா அவர்கள் தலைமையில் வரவேற்புக்கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. நமது இயக்கத்தோழர்கள் பலர் விஜயம் செய்திருந்தார்கள்.

அதுபோது நிறைவெய்திய தீர்மானங்கள் வருமாறு:—

(1) காரைக்குடியில் சென்ற ஆண்டு நடைபெற்ற "செட்டிமார் நாட்டு முதலாவது சுயமரியாதை மகாநாட்டை" இரண்டாவது மகாநாடு முதல் "இராமநாதபுரம் ஜில்லா சுயமரியாதை மகாநாடு" என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

(2) சென்ற முதலாவது சுயமரியாதை மகாநாட்டின் வரவு, செலவு கணக்குகளை இதுவரை வெளியிடாததுபற்றி பல தோழர்கள் ஆவலீதி கூறிவருவதால் இனியேனும் தாமதியாது மகாநாட்டு வரவு செலவுகளைக்காரியதரிசிகள் அவசியம் வெளியிட்டு விடவேண்டுமாறு இக்கூட்டம் காரியதரிசிகளைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(3) இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டை நாளது 2, 3-7-32உ சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காரைக்குடியில் கூட்டுவதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(4) இம்மகாநாட்டுடன் "மாதர் மகாநாடும்" "இளைஞர் மகாநாடும்" சேர்த்து நடத்த வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

(5) மகாநாட்டுத் திறப்பாளராக சென்னை தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களைக் கேட்டுக்கொள்வதென்று முடிவு செய்யப்பெற்றது.

(6) சுயமரியாதை மகாநாட்டுத் தலைவராக புதுவை பிரஞ்சிந்திய மந்திரி கனம் ஏ. வி. முத்தையா பி. ஏ. பி. எல். அவர்களையும், மாதர் மகாநாட்டுத்தலைவராக சென்னை திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்களையும், இளைஞர்மகாநாட்டுத் தலைவராக சென்னை தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்களையும் கேட்டு முடிவுசெய்வதென்று இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

(7) நமது இயக்கத்தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் உருவப்படத் திறப்புவிழாவை சென்னை "திராவிட " ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்களை நடத்துமாறு கேட்டுக்கொள்வதென்று முடிவுசெய்யப்பெற்றது.

(8) மகாநாட்டிற்கு நமது இயக்கத்தோழர்களான ராம சுப்பிரமணியம்—நீலாவதி, எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி., சிவகாமி—சிதம்பரனார், எஸ். வி. லிங்கம் டி. வி. சோமசுந்திரம் பி. ஏ. பி. எல், கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்., ஈ. வெ. ரா. நாகம்மாள், கே. வி. அழகர்சாமி, சி. நடராஜன், எஸ். லட்சுமிரதன்பாரதி எம். ஏ. பி. எல்., எஸ். இராமச்சந்திரன் பி. ஏ. பி. எல்., வை. சு. ஷண்முகம், பிச்சப்பா சுப்பிரமணியம் முதலியவர்களையும் அழைப்பதென்று முடிவு செய்யப்பெற்றது.

(9) மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவராக தோழர் அ. சாமிநாதன் அவர்களையும், பொக்கிஷதாரராக தோழர் சித. இராமநாதன் அவர்களையும், காரியதரிசிகளாக தோழர்கள் ராம. சின்னையா, ராம. சுப்பையா, அ. பொன்னம்பலம், கரு. மெ. இராமசாமி ஆகியவர்களையும், விளம்பர அதிகாரிகளாக தோழர்கள் கரு. சுப. வேடப்பா, ராம, சுப்பையா ஆகியவர்களையும், தொண்டர்

படைத்தலைவர்களாக தோழர்கள் மு. அரு. அண்ணாமலை, நா. நமசிவாயம் ஆகியவர்களையும் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

மகாநாட்டின் சுகாதார வசதிகளைக் கவனிக்க டாக்டர் கோவிந்தராஜலு அவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகின்றது.

தலைவர் முடிவுரைக்குப் பின் காரியதரிசி அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பெற்று இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது முடிவு பெற்றது எனக்காரியதரிசி அறிவிக்கிறார்.

தோழர் ம. சிங்காரவேலு.

தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் சிறிது காலமாக உடல் நலம் சரியில்லாதிருப்பதால் அவரை கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு விடையும், தொடர்ச்சியாக எழுதி வந்த கட்டுரையும் அடுத்தவாரம் முதல் வெளிவரும்.

நீதிபதி ராமேசம் அவர்களின் பால்ய விவாக கண்டனம்.

விசாகப்பட்டணத்தில் வெங்கிடநரசிம்மம் என்ற 12 வயது சிறுவனுக்கும், 7 வயதுள்ள சிறுமிக்கும், விவாகம் நடைபெற சிறுவனின் பாட்டியும், சிறுமியின் தகப்பனும் ஏற்பாடு செய்திருப்பதை தடுத்து அம்மைனர் பையனை தன் வசம் ஒப்புவிக்க வேண்டுமென மைனரின் சிறிய தகப்பனர் ஹைகோர்ட்டில் ஓர் இஞ்சங்ஷன் மனு கொடுத்திருந்தார். ஜஸ்டிஸ் ராமேசம் முன்பாக வழக்கு விசாரணைக்கு வந்தது. மைனர்சிறுவன் கோர்ட்டில் ஆஜராகி மேமீ 15ந் தேதியே தனக்கும், அச்சிறுமிக்கும் விவாகம் நடந்து விட்டதாகவும் தான் 5வது வகுப்பில் படிப்பதாகவும் கூறினன். எதிர்மனுதார் தரப்பில் ஆஜரான வக்கீல் சொத்துசம்மந்தமாக மனுதாருக்கும், தம் கட்சிக்காரருக்கும் சச்சர விருந்து வருவதாகக் கூறினர். ஜஸ்டிஸ் ராமேசம், அளித்த தீர்ப்பில், கூறியதாவது:—

விவாகமோ நடந்துவிட்டதாகத்தெரிகிறது. மனுதாருக்கும், எதிர்மனுதாருக்கும் சொத்து சம்மந்தமாக ஏதோ சச்சரவுக ளிருப்பதால் சிறுவனை மனுதாரிடம் ஒப்புவிப்பதற்கில்லை, சிறுவனின் க்ஷேமத்தைக்கெடுக்கும் வேலை ஆரம்பமாகிவிட்டது. பூராவாக அவ்வேலையை முடித்துவிடுவார். இதைத்தான் ஹிந்துக்களாகிற நாம் செய்துவந்திருக்கிறோம். இதனாலேயே இந்தியா இக்கதிக்குவந்துள்ளது. எதிர் மனுதாரர்கள் மீது விசாகப்பட்டணம் கலெக்டர் உசிதமானபடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

ரஷியாவில் ஆஸ்திக அழிவு.

ரஷியாவில் பல விடங்களைச் சுற்றிப்பார்த்த ஸ்ரீ. டாக்டர். அப்பார்ட் சால்டர் எம். பி. "பர்மண்ஸி லேபர் மேகஸீனில்" பின்வருமாறு எழுதுகிறார்:—

"நான் விஜயம்செய்த இடங்களிலெல்லாம் ஜனத்திரள் அதிகமாகவேயிருந்தது. சில மாகாண கோயில்களில் பக்தர்கள் நிறைந்திருந்தார்கள். சிலகோயில்களில் 10 அல்லது 15 பேருக்குமேல் காணப்படவில்லை.

நான் சுற்றிவந்த பிராந்தியங்களிலுள்ள ஜனங்களில் 100-க்கு 80 பேர் கோயிலுக்குப் போவதில்லை. 100-க்கு 10 பேர் தவருமல் கோயிலுக்குப் போகிறார்கள். இன்னும் 15 வருடங்களுக்குள் பழய பழக்க வழக்கங்களாகிய கோயில், பக்தி, மதம்முதலிய நம்பிக்கைகள் ருஷியாவில் அடியோடு கைவிடப்படுமென சோவியக் கொள்கையாளர் ஸ்திரமாகக்கூறுகிறார்கள்.

மத விஷயமாகவும், பக்தி விஷயமாகவும், பள்ளிக்கூடங்களில் போதிப்பது தடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் ரஷ்யா முழுமையும் கடவுளில்லை யென நம்புகிறார்கள். நாஸ்திகமே ரஷ்யாவின் தற்கால மதமாகும். பாடசாலைகளிலும் நாஸ்திக மதமே போதிக்கப்படுகிறது. நான் மாஸ்கோவிலுள்ள நாஸ்திக மத கல்லூரியின் புரபொஸரொருவரைக் கண்டு பேசினேன். அவர், நாஸ்திக மத சித்தாந்தமே எல்லா கலாசாலைகளிலும் போதிக்கப்படுவதாகவும், நாஸ்திகமத உபாத்தியாயர்களே அவைகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்களென்றுங் கூறினர்.

அநேக கோயில்கள் மூடப்பட்டு விட்டன. சில கோயில்கள் வேறு வேலைகளுக்காக உபயோகப்படுத்தப் படுகின்றன. சில கோயில்கள் நாஸ்திகமத சித்தாந்த சங்கங்களாக மாற்றப் பட்டுவிட்டன. அச்சங்கங்களினுடைய வேலை நாஸ்திக மதத்தைப்பற்றி பிரசாரம் செய்வதும், மூடநம்பிக்கைகளைப் போக்குவதுமே யாகும். மாஸ்கோவிலிருந்தபிரபலகோயிலொன்று இடித்தெறியப்பட்டு அவ்விடத்தில் சோவியத் அரண்மனை கட்டப்படுகிறது.

ரஷ்யாவை ஆளுவது பொதுவுடமைக்கட்சியேயாகும். அதில் சுமார் 20-லட்சம் ஜனங்களிருக்கின்றார்கள். அக்கட்சியில் சேரப்பிரியப்படும் ஒவ்வொரு அங்கத்தினரும், நாஸ்திக மதத்தைச் சார்ந்தவராகவே யிருக்க வேண்டும். சில பொதுவுடமைக் கட்சியாளர்கள், இன்னும்கடவுள் பித்து கொண்டிருப்பதாகத் தெரிந்ததால் அவர்கள் அரசியல் அதிகாரத்தினின்றும் விலக்கப்பட்டனர்.

கடைசியாகக் கூறுமிடத்து, ருஷ்யாவில் மதநம்பிக்கையே இல்லா தொழிந்துவிட்டது. அப்பழய நம்பிக்கைகளை போதிக்க முன்வந்த சில பாதிரிமார்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகத்தெரிகிறது.

இன்னும் சிற்சிலருக்கிருக்கும் கடவுள் நம்பிக்கையும் சில வருடங்களுக்குள் ஒழிந்து விடுமெனத் தெரிகிறது. மனித தத்துவத்தின் உன்னத நிலையை ருஷ்யாவே அறிந்திருக்கிறதென நான் உறுதியாகக்கூறுவேன்.

(ஆ—போ)

ஈரோட்டில் பார்ப்பனீய மற்ற திருமணங்கள்.

சென்ற 8-6-32 புதன்கிழமை அன்று ஈரோட்டில் கன்னடியர்களின் குடும்பங்களில் 4 திருமணங்கள் பார்ப்பனரை யொழித்துச் சீர்திருத்தமுறையில் நடைபெற்றன. அத்திருமணங்களாவன:- மேட்டுப்பாளையம் திரு வெங்கட்ட நாயக்கர் குமாரர் திரு. திருமலைக்கும், ஊனூர் திரு. நாகப்ப நாயக்கர் குமாரி திருமதி காவேரி அம்மாளுக்கும்; ஈரோடு திரு. கிருஷ்ணப்பநாயக்கர் குமாரர் திரு. வேங்கடத்திற்கும், ஷெயூர் திரு. வெங்கடசாமி நாயக்கர் குமாரி திருமதி. முத்தம்மாளுக்கும்:

கோபிசெட்டிபாளையம், திரு. முத்துநாயக்கர்குமாரர் திரு. ராமசாமிக்கும், ஈரோடு திரு. வெங்கடநாயக்கர் குமாரி திருமதி. குப்பம்மாளுக்கும்.

கோபிசெட்டிபாளையம் திரு. கரிய நாயக்கர் குமாரர் திரு. கஞ்சப்பனுக்கும், கோபிசெட்டிபாளையம் திரு. ராமசாமி நாயக்கர் குமாரி திருமதி. அம்மாக்கண்ணுவுக்கும்; முறையே சீர்திருத்தத்திருமணங்கள் நடைபெற்றன. புரோகிதத்தை நீக்கி, மூடச்சடங்குகளை ஒழித்து ஒரே நாளில் சுருக்கமாக திருமணம் செய்த இவர்களைப்பாராட்டுகிறோம்.

(ஒரு நிருபர்)

மதிப்புரைகள்.

சுப்பிரமணிய பாரதியார் அல்லது தமிழ்நாட்டின் தேசியகவி.

இப்புத்தகம் திரு. சுத்தானந்த பாரதியார் அவர்களால் காலஞ்சென்ற செந்தமிழ்த்தேசிய கவியாகிய திரு. பாரதியார் அவர்களின் நூல்களைப்பற்றி எழுதிய ஒரு ஆராய்ச்சியாகும். பொதுவாக இந்நூலை பாரதியார் பாடல்களின் உரைநூல் என்றே கூறலாம். பாரதியார் அவர்களின் பாடல்களின் பொருளை, படிப்போர் மகிழ்ச்சியுறும்படியும், அப்பாடல்களின் சுவையை உணர்ந்து இன்பமடையும்படியும் அப்படியே சிறு சிறு வாக்கியங்களாக அழகாக அமைத்து எழுதப்பட்டிருக்கிறது. இடை இடையே பாரதியார் பாடல்களின் கருத்துக்கள், திருவள்ளுவர், கம்பர் முதலிய பண்டைப் புலவர்களின் கருத்தைத்தழுவி இருக்கும் பகுதிகளையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது. உண்மையில் பாரதியார் பாடல்களில் ஆவலுடைய ஒவ்வொருவரும் அவசியம் படித்துணரவேண்டிய ஒரு நூல் என்றே கூறலாம். இப்புத்தகம் "பாரதி" பத்திரிகையின் ஆசிரியர் திரு. ரா. நாராயணசாமி அவர்களால் வெளியிடப்பட்டது இதன் விலை ரூ. 1—0—0.

கிடைக்குமிடம்:-

"பாரதி," புத்தகாலயம்,
உத்தமபாளையம் மதுரைஜில்லா.

மங்களநாதன் அல்லது மாயமங்கை.

இது ஒரு சிறிய புதுக்கதை நல்ல அழகான தமிழ் நடையில் எழுதப்பட்டது. இது, திரு. பெ. பரிமணப்பல்லவராயர் அவர்களால் எழுதப்பட்டு, திருச்சி, பொன்மலை, ராஜரசம் கம்பெனியாரால் வெளியிடப் பட்டது இதன்விலை அணு 0—2—0.

கிடைக்குமிடம்.
ராஜரசம் கம்பெனி,
பொன்மலை திருச்சி.

Wanted.

Wanted a fully qualified Head Driver on Rs. 80—4—120 good experience in Water-works, on steam plant and pumps and mechanical filters, should be able to write and read English and maintain log books. Preference will be given to one who has a sound knowledge and experience of running electrical motors and pumps. State age, nationality, experience and last position held. Applications with copies of Certificates should reach the undersigned before 1—7—32.

K. A. Sheik Dawood,
Chairman,
Erode Municipal Council.

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

பெறும் இளதார மணங்களுக்கும் அவைகளால் விளையும் தீங்குகட்கும் அளவுண்டோ? சமீபத்தில் ஜன நன்மைக்காகச் சட்டாமக்கப்பட்டசாரதா சட்டம் அமுலுக்கு வரவியலாது அழியும் தருவாயிலிருப்பதற்கு இவ்விந்து மதமன்றோ காரணம். இன்னும் இம்மதம்மக்களிடையேயகங்காரத்தையும், ஆச்சத்தையும் உண்டாக்கி அவர்களைத் தீய காரியத்திற் பிரவேசிக்கச் செய்கிறது. இவைகள் போதாதென, கடவுளுக்கும் நமக்குமிடையே தரகர்களை உற்பத்தி செய்து அதன் மூலம் மக்களிடம் மூடநம்பிக்கை மூடப்பழகக வழக்கங்கள், அர்த்தமற்ற செய்கைகள் ஆகியவைகளை வளரச் செய்கின்றதே யன்றி வேறு ஏதேனும் நன்மையுண்டா? சுருக்கமாகக்கூறின் மக்களின் நலத்திற்காகத் தோற்றுவிக்கப் பட்டதெனச் சொல்லப்படும் மதம் மக்கள் வாழ்க்கையைப் பாதிப்பதோடு சுதந்திரத்திற்கும் தன்மதிப்பிற்கும் தடையாயிருப்பது கண்கூடு. இத்தகைய கொடும் கொள்கைகளையுடைய மதத்தை என் செய்வது? சீர்திருத்துவதா அல்லது அறவே விட்டு விடுவதா என்பது ஒரு முக்கியமான பிரச்சினை. எந்த மதச்சட்டங்களாயினும் கொள்கைளாயினும் அவைகளை அப்படியே ஒப்புக்கொள்வதென்பதும் தள்ளிவிடவேண்டுமென்பதும் அத்துணைச் சிறந்ததல்லவென்பதே எமது தாழ்ந்த அபிப்பிராயம். எந்த மதம் மக்களின் உரிமையைப் பாதித்து, அவர்களை முன்னேறவிடாமல் தடுத்து, அவர்களின் அறிவைப்பாழாக்கி, அடிமைத்தனத்தில் ஆழ்த்தி வைத்திருக்கின்றதோ அம்மதம் இருப்பதைக்காட்டிலும் இறந்தொழிவது மேலாகும். சீர்திருத்துவதென்றால் இம்மதத்தைப்பொறுத்த மட்டில் புத்தர், ராமானுஜர், சங்கரர் திருவள்ளுவர் முதலியோர்களின் சீர்திருத்தமாகிவிட்டது என்பதைக் கூறத்தேவையில்லை.

ஆகவே அன்பர்களே! மக்கள் உரிமையைப்பறிக்கும் மதத்தை—மக்களை அடிமைப்படுத்தும் மதத்தை—மக்களின் பகுத்தறிவைப்பங்கப்படுத்தும் மதத்தை ஒழிக்க முன்வாருங்கள். இப்பொழுதிருக்கும் மதங்களை ஒழித்துப் புதியதாக மக்களின் வாழ்க்கை நலங்கருதி சட்டங்கள்—கொள்கைகள் ஏற்படுத்துவதாயின் அவைகள் பஞ்ச இந்திரியங்களின் (ஐம்புலன்களின்) இயற்கை உணர்ச்சிக்கும், ஆசையின் சுபாவத்திற்கும், மனதிற்கும், அறிவிற்கும், அநுபவத்திற்கும் ஏற்றவைகளாயிருக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது நிற்க, நம் அறிவு என்ன சொல்லுகின்றது, இயற்கைக் கட்டளை இயற்கையின் போக்கு என்ன, நமதுவாழ்க்கையின்லக்ஷியம் என்ன என்பதைக் கவனித்து நடந்தோமானல் அதிவிரைவில் திருப்தியும் சாந்தியும் உண்டாக்கக்கூடிய ஓர் நல்வாழ்க்கை வாழ்ந்து இன்புறுவோமென்பது திண்ணம், முக்காலும் திண்ணம்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சித்துப்பாக்கின்கிருர்களா? "கூட்டத்தில் கோவிந்தா? போடுகிறவர்களாகவே இருக்கிருர்கள். அப்படி ஒரு உண்மையான மகாத்மா (ஆத்மாஇருப்பதற்கே ஆதாரமில்லை) வோ "லெவன்த்" அவதார புருஷராகவோ கண் கண்ட தெய்வமாகவோ இருப்பதாக இருந்தால் அப்படிப்பட்ட அவதார புருஷரான, அவர், அந்த மகாத்மா தாம் எடுத்துக் கொண்ட பிரயத்தினப்பட்ட ஆரம்பித்த காரியா காரியங்கள் ஏன் கைகூடாமல் போயிற்று என்று கேட்கிறேன். இவ்வளவு தெய்வத்தன்மை பெற்ற திரு. காந்தி அவர்கள் தாம் மேற்கொண்டிருக்கிற "சுயராஜ்யத்" தை இன்னும் பெருமல் இருப்பதற்குக் காரணம் என்ன? இவர், எண்ணப்பிரகாரம் எக்காரியமாயினும் முடிவு பெருவிட்டால் "கடவுள் செயல்" என்று கூறும், இவரை எப்படி கடவுள் அவதாரம்என்று கூற முடியும்? முதல் முதல் 1921ல் கள்ளுக்கடை மறியலிலும், சென்ற ஆண்டில் செய்த உப்பு சத்தியாக்கிரகத்திலும் ஏழை மக்களுக்கு செய்த நன்மை என்ன? என்னமோ காரணம் கொண்டு முதல் வட்ட மேஜை மகாநாட்டிற்குப் போக நழுவிக்கொண்டாலும், இந்தியாவிற்கே பிரதிநிதியாயுள்ள தாம் விஜயம் செய்யாததினால், அம்மகாநாட்டின் நடவடிக்கைகளை தாம் ஒப்புக்கொள்ள முடியாதென்று சொன்னவர், இரண்டாவது மகாநாட்டிற்குப் போய் சாதித்ததென்ன? 7 கோடி தீண்டப்படாதார்களுக்கு இதுவரைக்கும்செய்த நன்மை என்ன? அவர்களுக்கும் நானே பிரதிநிதி என்று கூறிக்கொண்ட இவர் (மகாத்மா) அவர்களுக்கு என் உயிர் உள்ள வரையில் தனித்தொகுதியளிக்க மறுப்பேன் என்று ஏழை மக்களிடம் வீரம் கூறிய மகாத்மா, அவர்களது வாக்குப் பலித்ததா? அல்லது மனிதப்பிறவிகளாகிய திரு. டாக்டர் அம்பட்கார், திரு. ஸ்ரீனிவாசன், திரு. ஏ. இராமசாமி முதலியார் இவர்கள் வாக்குப்பலித்ததா? என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். முதல் மந்திரியாகிய வெள்ளைக்காரப் பெரிய சீமைச்சாமியிடம், இந்தியச்சாமியாகிய 11-வது அவதார, மகாத்மாசாமியின் தந்திரம் ஒன்றும் பலிக்காமல் வெறுங் கையுடன் வீடுதிரும்பி வந்ததைத் தவிர வேறு கண்ட பலன் என்ன? என்றால் உடனே சிறை வாசம் கிட்டிய சிறப்பேயன்றி வேறொன்றுமில்லையே! ஏன்? இவரே கண் கண்ட தெய்வம், அவதார புருஷர், ஆயிற்றே! இவர், கைகொண்ட காரியங்கள் ஏன்? சித்திக்கக்கூடாது? காரியம்தான்கைகூடாவிட்டாலும்,காராக்கிரகமாவது சொல்லம விருந்தாரா? மற்றபடி கூலிக்கு மாரடிக்கும் தொண்டர்கள் தடியடிபட்டு ஜெயிலுக்குப் போவது போல், மகாத்மா அவர்களும் சிறைக்குத் தானே சென்றார்? அப்படியானல் தொண்டர்களுக்கும் இவருக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? ஆனல் தொண்டரைப் போல், அடிபடாததும், ஏ. வகுப்பில் இருப்பதும் ஒரு விதத்தில் உயர்வேதான், இவ்விஷயங்களை அறிவுள்ள மக்கள் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் திரு. காந்தியவர்களது தெய்வத்தன்மையின் பெருமை தெரியாமல் போகாது. ஆகையால் அந்தணர்களாலியற்றிய ஆயிரக்கணக்கான தெய்வங்களிடத்தும், அவைகளுக்கொத்திருக்கும், புராண இதிகாச சாஸ்திரங்களிடத்தும், நம்பிக்கை வைத்து மதியிழந்து முட்டாள்களாகியது போதாதென்று பின்னும், மகாத்மா, 12-வது அவதார புருஷர், ஞானி என்றும், அவருக்கு தேரும், திருநாளும் ஊர்கோலம், செய்து துதிக்கும்படி ஏற்படுத்தி அதுபோல் செய்து வந்ததால் திரு. காந்தி பக்தர்களுக்குத்தடியடியும், துப்பாக்கிப் பிரயோகமும், சிறை வாசமும் கிடைத்ததேயன்றி வேறு இந்த மகாத்மா கடவுளால் மக்கள் அடைந்த பிரயோஜனம் என்ன என்று இனியாகிலும் நன்ருய் யோசித்துப் பார்த்து, பண்டைக்காலத்துக் கல்லுக் கடவுள்களையும் அவற்றின் தரகர்களையும், மகாத்மா 11-வது அவதார புருஷ மனிதக் கடவுளையும் அவரது சிஷ்ய கோஷ்டியினரையும், அவர்களது வீண் பொருத்தமற்ற பிரசாரத்தையும் நம்பி உங்கள் அறிவை மழுக்கிக்கொளளாமலும், கஷ்டப்பட்டுத் தேடிய பணத்தை வீணுக்காமலும், தடியடியால் அவதிப்படாமலும் இருக்கவேண்டுமாய் மிகவும்வணங்கிகேட்டுக்கொள்ளுகிறேன். கல்லுக்கடவுளை நம்பிமோக்ஷம் அடைவோம்என்பதை விட்டு பகுத்தறிவைக்கொண்டு அரிய காரியங்களை அறியவும், அவைகளை அனுபவிக்கவும், மேனுட்டாரைப் போல் பாடுபடவேண்டும். எனது மாபெருந் தலைவர் உயர்திரு. ஈ. வெ. ராமசாமி தோற்றுவித்துள்ள "சுயமரியாதை" இயக்கத்தின் உண்மையை நன்குணர்ந்து, மூடப்பழக்கங்களை விட்டு, ஜாதிமத வித்தியாசத்தை நீக்கி, தீண்டப்படாதாரை மேல் தூக்கி "சுயராஜ்யம்" என்ற பதவியை அடைய முயற்சிக்கவேண்டும். ஒற்றுமை யுண்டாகாமல், உயர்வு தாழ்வு நீங்காமல், ஜாதி மதம் போக்காமல், தாழ்த்தப்பட்ட மக்களிடம் சமத்துவம் பாராட்டாமல், இந்தியர் யாவரும் ஒரே சமூகத்தினர் என்று திகழும்படி மக்கள் ஒற்றுமையடையாமல் "சுயராஜ்யம்" பெற முடியுமா என்ற விஷயங்களை கொஞ்சமேனும் "நினைத்துப்பார்க்க நேரமில்லையா"

மைசூரில் பால்ய விவாகத்தடைச் சட்டம்.

மைசூரில் ஜனப் பிரதிநிதி சபையில் மைசூர் பால்யவிவாகத்தடை மசோதா 8-6-32ல் நிறைவேறியது அதற்கு சாதகமாக 98 ஓட்டுகளும் பாதகமாக 87 ஓட்டுகளும் கிடைத்தன.

மசோதாவின் நோக்கம்.

14 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு விவாகம் நடைபெறுவது தடை செய்வது; சிறிய வயதில் கலியாணமாகி விடுவதால் சிறு வயதிலேயே விதவைகளாகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படாதவாறு செய்வது.

பால்யத்தில் விவாகம் செய்வதால் ஆண்பாலரும், பெண்பாலரும் தேகபலத்திலும், மனோபலத்திலும் க்ஷீணதசையடைந்துவிடாதபடி குறிப்பிட்ட தகுந்த வயதில் பையன்களுக்கும் சிறுமிகளுக்கும் நடைபெறும் விவாக வயதை நிர்ணயிப்பது.

இந்த மசோதா தனதுநோக்கத்திலும் தண்டனைகள் சம்பந்தமாகவும் ஒன்றிரண்டு மாறுதல்களைத் தவிர மற்றபடி பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள பால்ய விவாகத் தடைச்சட்டத்தைப் போன்றது.

பெண்ணின் பெற்றோர்கள் தாங்கள் மரணமாவதற்கு முன் தங்கள் குழந்தைக்குக் கலியாணம் செய்துவைக்க விரும்பி ஜில்லா ஜட்ஜைக் கேட்டுக் கொண்டால் ஜில்லா ஜட்ஜ் அந்த மசோதாப்படி 12வயதுள்ள பெண்களைக் கலியாணம் செய்துகொள்ள அனுமதிக்கலாம். 12வயதுக்கு மேல் 14 வயதுக்குட்பட்ட பெண்களை மேற்படி காரணத்தால் ஜில்லாமாஜிஸ்திரேட்டின் உத்தரவு பெற்று விவாகம் செய்து கொடுக்கமுடியும். ஆனல் பெண்ணுக்கு 14 வயது ஆவதற்குள் சாந்திமுகூர்த்தம் செய்யக்கூடாதென்ற நிபந்தனை மீது தான் மாஜிஸ்திரேட் அவ்வித விவாகத்திற்கு அனுமதி அளிப்பார். சாரதா சட்டத்தில் அச்சட்ட சம்பந்தமான பிராது குற்றம் நடைபெற்ற ஒருவருஷத்திற்குள் தாக்கல் செய்ய காலவரையிருக்கிறது ஆனல்மைசூர்சட்டப்படி 6 மாதத்திற்குள் பிராது தாக்கல் செய்யப்படவேண்டும்.

கலப்பு மணத்தால் தான் ஜாதிஒழியும்.

மூடபக்தியின் விளைவு

அன்றும், இன்றும்

(அருப்புப்பட்டி B. R. கிருஷ்ணசாமி)

நம் நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்து வந்த காலத்தில், ஏமாந்தவர்கட் கெஜமானர்களென்றிருக்கும் ஆரியப் பார்ப்பனர்கள், நமது மக்களை மயக்கி, அவர்கள் வம்ச பரம்பரையாய்ச் சோம்பேறி சுக வாழ்வு வாழ்வதற்கேற்ற கருவிகளாய கடவுள், வேதம் மதம், சாஸ்திரம், சடங்கு, மோக்ஷம் நரகம், உயர்வு, தாழ்வு, ஆகிய மக்களின் முன்னேற்றத்தையும், அறிவையும் அடக்கும்படியான பல பொய் மூட்டைகளை மக்களிடையே பரப்பி விட்டார்கள்.

பாமர மக்களை அடக்கி ஆள்வதற்கும், அவர்களின் உழைப்பைக் கொள்ளை கொள்வதற்கும் சுயநலக் காரர்களின் சூழ்ச்சிகளால் இந்தக் கடவுள், மதம், என்ற பொம்மலாட்டங்கள், உலகம் முழுவதுமே பரப்பப் பட்டிருந்த தென்றாலும், நம் நாட்டைப் போல் இவ்வளவு ஆபாசங்களும்; அநாசாரங்களும், பாழும் வர்ணாச்சிரமங்களும், சாதிப்பிரிவுகளும்; தீண்டாமைக் கொடுமையும் மற்ற நாடுகளில் அவர்களுக்குள் கிடையாது. ஆனால் நம் நாட்டில் குடியேறிய ஆரியப் பார்ப்பனர்கள் ஹிப்னாடிஸத்திலும், ஜால வித்தைகளிலும், பொய்யும் பொருந்தப் பேசுவதிலும், கொஞ்சம் தேர்ச்சி பெற்றிருந்தமையால், அரசர்களையெல்லாம் தங்களுக்கு அடிமைகளாக்கி, தங்கள் கொள்கைகளை எதிர்ப்பவர்களைத் தண்டித்தும், ஆதரிப்பவர்களுக்கு விசேஷ சலுகை காட்டியும் அவர் தம் பொய்க்கூற்றுக்களை அன்றும், இன்றும் அசைக்க முடியாதபடி மக்கள் உள்ளங்களில் பதித்து விட்டனர். நமது நாட்டை ஆட்சி செய்து வந்த அரசர்களில் பெரும்பாலோருக்குப் போதுமான கல்வியோ, சொந்த புத்தியோ இல்லாத குறையால் பார்ப்பனர்களுடைய சூழ்ச்சிகட்குட்பட்டு, மதம் என்னும் பித்தம்பிடித்தவர்களாய் (யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல்) உலகம், அநித்தியம், உடல் அநித்தியம் செல்வம் பொய், மனைவி மக்கள் பொய் இங்கு அனுபவிப்பது கொஞ்சம் இன்பம். (சிற்றின்பம்.)

செத்தபின் அனுபவிப்பது பெரிய இன்பம் (பேரின்பம்) என்றும், அப்பெரிய இன்பத்தை அனுபவித்தற்கு 'பூ' சுரர்களாகிய பிராமணர்களுக்குக்கடவுள், யாகம், புரோகிதம், சடங்கு. தானம், தருமம் என்பவைகளின் பேரால், ஏழை மக்களின் வரிப்பணத்தைக் கொண்டுசுகபோகிகளாக வாழச் செய்வதிலும், சோம்பேரி வேதாந்தம் பேசுவதிலும் ஈடுபட்டுக் கொண்டு தம் தேச நிலை, பொருளாதாரம், ராணுவம், அந்நிய அரசாங்கங்களின் போக்கு முதலியவைகளைக் கவனியாமல், பார்ப்பனர்களையும், அவர்கள் கற்பித்த கடவுளர்களையும் நம்பி நம்பி அந்நியர் படையெடுப்புகளினாலும் கொள்ளைகளினாலும் தங்கள் அரசாட்சிகளை பிழந்து அன்னக்காவடிகள் ஆனதுமன்றி தங்குடி மக்களையும். மீளா வறுமைக்கும், அடிமைக்கும் உட்படுத்தி விட்டனர்.

சோமநாதபுரம் சிவன் கோவிலில் மகமத் கோரி கொள்ளை அடிப்பதற்கு வந்து, நகரத்திற்கருகாமையில் இருந்து கொண்டு தான் படை எடுத்து வந்த சேதியை அவ்வூர் அரசனுக்கு அறிவித்தும், அவ்வரசன் ராணுவ பலத்தைக் கொண்டு பகைவனைப் போர் முகத்தில் வெற்றி கொள்ளாமல் பார்ப்பனர்கள் 'வேகின்ற வீட்டில் பிடுங்கினது லாபமென்றெண்ணி, வேத பிராமணர்களைக் கொண்டு ஒரு யாகத்தைச் செய்வித்தால் எதிரிகள் பலமிழந்து ஓடி விடுவார்களென்று சொன்னதை அரசனும் நம்பி, யாகத்தைச் செய்து யாகம் முடிப்பதற்குள் பார்ப்பனர்கள் யாகத்தின் பேரால் கணக்கற்ற பொருளைக் கொள்ளை கொண்டதோடு, மகமது கோரியும் கோவிலிலுள்ள சொத்துக்கள் யாவையும் கொள்ளையடித்து கோவிலையும்இடித்துத் தூளாக்கி, அந்நகரத்தையும் கொள்ளையடித்துச் சென்றானென்றால், அரசனின் மூட பக்தியையும், அறிவற்ற தன்மையையும், பார்ப்பனர்களின் இரக்க மற்றவஞ்சனைகளையும் நன்கு அறிந்து கொள்ளலாம்.

இன்னும், தஞ்சாவூரின் பேரில் வேற்றரசன் படையெடுத்து வந்தசமயம், ஆயுதங்கள் நவராத்திரி பூஜையில் வைத்திருந்தமையால், பூஜை முடிவதற்கு முன் ஆயுதங்களை எடுக்க முடியாது என்று பார்ப்பனர்கள் சொல்லி விட்டதால் அவ்வூர் அரசன் பகைவனுடன் எதிர்த்துப் போராடாமல், கடவுள் அருளையும், பார்ப்பனர் வார்த்தைகளையும் நம்பி வாளாவிருந்தமையால் அப்பகையரசன் மிகவிம் சுலபமாக தஞ்சாவூர் ராஜியத்தைப் பிடித்து விட்டதாகவும் கேள்விப்படுகிறோம். இன்னும் பல அரசர்கள் இம்மூட பக்தியின் காரணமாய் அரசிழந்திருக்கின்றனர். ஒரு தேசத்தை ஆள்க்கூடிய அரசர்களே மூட பக்தி யென்னும் பேய்க்கு இரையாகித் தங்கள் வாழ்க்கை நலன்களைக் கெடுத்துக் கொண்டவரெனின் "கோன் எவ்வழி அவ்வழி குடிகள்" என்ற கொள்கை பரவியிருந்த அக்காலத்தில் சாதாரணகுடி மக்களின் வாழ்க்கை இம்மதப் பித்தாலும், மூட பக்தியாலும் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதை நடு நிலைமையில் நின்று சிந்திப்பார்க்கு நன்கு விளங்கும். உருக்குமாங்கதன் என்ற ஓர் அரசன் தன் ஆட்சிக்குட்பட்ட நாட்டில் வாழும் சிறுவர் முதல், கிழவர் வரை ஆண் பெண் அனைவரும் ஏகாதசி விரதத்தை கண்டிப்பாய் அனுஷ்டிக்கவேண்டுமென்று உத்தரவிட்டதாக பாகவத புராணம் கூறுகிறது. புராணக் கூற்றுகளை உண்மையென்று நம்ப முடியாதென்றாலும், அக்காலத்தில் ஆதிக்கத்தைக் கைக் கொண்டிருந்தோரின் மனப்போக்கு அவ்விதம் இருந்ததென்பதை நன்கு வெளிப்படுத்துகின்றதன்றோ? கடவுள் என்றால் என்ன ? மதம் என்றால்என்ன? இவைகளுக்கும், நமக்கும் என்ன? இவைகளை சம்பந்தம் செய்து கொள்வதினால் நாம் அடையும் பயன் என்ன ? என்னும் ஞானம் கிஞ்சிற்றும் இல்லாதவர்களும், கடவுள்விஷயத்திலும், மத விஷயத்திலும் கண் மூடித்தனமாய் விடாப் பிடியாய் இன்னும் பிடித்துக் கொண்டு, இது விஷயமாய் யார் என்ன சொன்னாலும் அதை யோசித்துப் பார்ப்பதற்கே பகுத்தறிவில்லா திருப்பதற்குக் காரணம், முன்னாளில் ஏற்படுத்திய நிர்ப்பந்தங்களும், பின்னாளில் (புதிதாக ஒன்றை ஆராய்ச்சி செய்யும் சக்தியில்லாததினால்) முன்னோர்கள் நடந்து காட்டிய வழியையே பின் பற்ற வேண்டுமென்னும் போலி பழக்க வழக்கங்களுமேயாம்.

அன்றியும் பாமர ஜனங்களிடை செல்வாக்குப்பெற்று புகழையும், பொருளையும் சம்பாதிக்கலாம் என்றெண்ணங்கொண்டு இன்றும் காங்கிரஸ் போர்வையைப்போர்த்திக் கொள்ளும் பல தியாக மூர்த்திகளைப் போல் அன்றும் பாமர மக்களிடை செல்வாக்குப்பெற பல பேர் மதத் தலைவர்களாய் வந்தார்கள். இன்று காங்கிரஸ் தலைவர்கள் தொண்டர்களை மறியல் செய்யத்தூண்டி அதனால் அவர்கள் மண்டைகள் உடைந்தும், சிறையில் சி, வகுப்புக்கைதிகளாய்ச் செக்குமாடுகள் போல் உழைத்துவர தலைவர்கள் என்போர் உல்லாசமாய்க்கார் சவாரி செய்துகொண்டே அரஸ்டாகி ஏ. பி. வகுப்புகளில் ராஜபோகம் அனுபவிப்பது போல் அன்றும் மதத்தலைவர்கள், மக்களை ஒன்று பட்டு வாழமுடியாமல் பல ஜாதிகளாகப்பிரித்து இன்னின்ன ஜாதியார் இன்னின் வேலைகள்தான் செய்யவேண்டும் என்றும், கடவுள், சாஸ்திரம், சடங்கு, இவைகளின் பேரால் அவர்களுடைய உழைப்பை நேர்முகமாகவும், மறைமுகமாகவும் கொள்ளைகொண்டு ஏக போக உரிமைகளுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள், வருகிறார்கள். இன்று காங்கிரஸ் தலைவர்கள் ஏழை மக்களுக்குச் சுயராஜ்யம் வந்தால் உங்கள் கஷ்டங்கள் எல்லாம் நீங்கிச்சுகம் பெறலாம். உங்களுக்காகவே நாங்கள் எங்களுடைய உடல், பொருள், ஆவி, எல்லாம் தியாகம் செய்து இவ்வளவு (முதல்வகுப்புப்பிரயாணம், உயர்ந்த சீமைச்சாராயம், இச்செலவுகளுக்கு பணமுடிப்பு) கஷ்டப்படுகிறோம். என்று சாதுர்யமாகப்பேசி அவர்களைத்தங்கள் கருவிகளாக உபயோகித்துக்கொள்ளுகிறார்களோ? பாமர மக்களும் அத்தலைவர்களுடைய பசப்புவார்த்தைகளை நம்பி சுயராஜ்யம் வந்தால் நமது கஷ்டங்களெல்லாம் நீங்கிச்சும்மா இருந்துகொண்டே சாப்பிடலாம் என்றெண்ணியோ? அல்லது சோம்பேறிமறியல் செய்தால் இப்போதாவது சோற்றுக்குப்பஞ்சமில்லையென்றோ? எழுத்துவாசனையறியாத சுயராஜ்யம் என்றால் என்ன என்பதேயறியாத, அறியும் சக்தியில்லாத ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சென்ற சட்டமறுப்புப் போராட்டத்தில் ஆர்ப்பாட்டம் செய்தது போலவே அன்றும் மதத்தலைவர்கள் சுவர்க்கலோகம் என்ற ஒரு கற்பனை உலகத்தைச் சிருஷ்டித்து இங்கு மக்களுக்கு எவ்வெப்பொருள்கள்மீது அதிக ஆசையும், அதை அடைவதற்குப் பெருமுயற்சிகளும் வேண்டியிருக்கிறதோ, அப்பொருள்களை அங்கு காமதேனு, கற்பகத்தரு, தேவமாதர், தேவாமிருதம் ஆகிய இவைகளின் மூலம் யாதொருமுயற்சியுமில்லாமல் (சோம்பேறிகளாய்) அருவகை ருசியுடன் கூடிய உணவு, மற்ற பொருள்கள், பெண் போகம், இளமை, முதலியவற்றையடையலாம் என்றும், அப்பதவியை அடைவதற்கு இவ்வுலகத்தில் தான தருமங்கள் (பார்ப்பனர்களுக்கு) செய்து மதக் கட்டளைகட்குட்பட்டு நடக்கவேண்டுமென்றும் அதற்குத்தாரணமாக புராணங்களை மேற்கோள்காட்டி மயக்கி விட்டதால் அவர்கள் சொல்லும் விஷயங்களைப்பகுத்தறியும் சக்தியில்லாத பாமரமக்கள் அவற்றை உண்மையென நம்பி தங்கள் பின் சந்ததியாருக்கும் அம்மதத்தலைவர்கள் தங்களுக்குச்சொன்னதைகடவுள்வாக்கு முனிவர் வாக்கு என்றும், அவற்றைத்திருத்தவோ, ஆராய்ச்சி செய்யவோ யாருக்கும் அதிகாரம் கிடையாது என்றும் இவற்றைப்புறக்கணித்தால் நரகத்தில் அழுந்தவேண்டுமென்றும் குலம் அழிந்துவிடுமென்றும் இன்னும் இதுபோன்ற பல பூச்சாண்டிகளைக்காட்டி அவர்களையும் தங்கள் வழியையே பின் பற்றும்படி செய்து விட்டார்கள்.

இராமன் ஒருவனாக கரதூஷணர்களுடன் சண்டைக்குப்போனால் என்ற பாகத்தை இராமர் காலத்திற்குப் பலவருஷங்களுக்கு. ஏன் புராணப்படி பலயுகங்களுக்குப்பின் புல்தகத்தில் படிக்கக்கேட்ட ஒரு அர

"பஞ்சமா பாதகம்" செய்யத் தூண்டுவது ஆஸ்திகமா? நாஸ்திகமா? எது?

(திருமங்கலம்—மணிமாறன்)

'கொலை, களவு, பொய், கள், காமம் இவ்வைந்தும் பஞ்சமா பாதகங்கள் எனக் கருதப்படுகின்றன. இவ்வைந்துகோரமான, ஒழுக்கமற்ற, நீதியற்ற, துன்மார்க்கச்செயல்களை மானிடர் புரிதல் மானிடசமூகத்திற்கே பெருங்கேடு செய்வனவாகும். இப்பாதகச் செயலை மானிடசமூகத்தினின்றும் ஒழித்து, நல்வழி கடைப்பிடித்து, சமதர்ம இன்பவாழ்வு காணவேண்டும் என்பதே சுயமரியாதைக்காரர்களாகிய நாஸ்திகர்களாம் எங்கள் நோக்கமாகும். ஆஸ்திகர்களும்கூட பஞ்சமா பாதகம் ஒழியவேண்டும் என்றே சொல்லுகின்றனர். ஆனால் நடைமுறையில் துன்மார்க்கமாகிய பஞ்சமாபாதகங்களுக்கு ஆக்கம்கொடுத்து அதை அழியவிடாமல் காப்பாற்றுகிறார்கள் என்பதே உண்மை. அவ்வுண்மையை நாம்விளக்கியே தீரவேண்டும். அப்பொழுது பஞ்சமாபாதகம் செய்யத்தூண்டுவது ஆஸ்திகமா? அல்லது எங்கள் நாஸ்திகமா? என்பதுதெரியும்.

நாஸ்திகர்கள் என அழைக்கப்படும் சுயமரியாதைக்காரர்கள் யாரையும் துன்மார்க்கத்திலிரங்கும்படி தூண்டவில்லை. கொலை செய்யவோ, களவு செய்யவோ, பொய்பேசவோ, கள் குடிக்கவோ, காமியாய்த்திரியவோ, சுயமரியாதை இயக்கம் பிரசாரம் செய்யவில்லை. யாவரும் நல்லொழுக்கமுள்ளவர்களாய், யாவரும் சரிநிகர் சமான உரிமையுடையவர்களாய் எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டுமென்பதே சுயமரியாதைக்காரர்களின் கொள்கையாகும். ஆனால் ஆஸ்திகர்கள் என்ன சொல்லுகிறார்கள்? என்ன செய்கிறார்கள்?

ஐந்துபெரிய பாதகச்செயல்களானகொலைபுரிதல், களவுசெய்தல், பொய்பேசுதல் கள்குடித்தல், காமம் (விபசாரம்) புரிதல், இன்னும் மற்றய துன்மார்க்கச் செயல்களில் மனிதசமூகம் வீழ்ந்து கெடாமல், சன்மார்க்கநெறிபிடித்தொழுகுவதற்கு "கடவுள்நம்பிக்கை" அவசியம் வேண்டுமென்பது ஆஸ்திகர்கள்கூற்று. துன்மார்க்கத்தில் சென்றால் 'கடவுள் தண்டனை' கிடைக்குமென்றும் நரகவேதனை, இழிபிறப்புக்கிட்டுமென்று பயந்து நல்லமார்க்கத்தில் செல்லுவார்களென்றும், எனவே கடவுள் நம்பிக்கை, கடவுள்பக்தி, கடவுள் பயம் இருந்தால்தான் மனிதசமூகம் சன்மார்க்கத்தில் நிற்குமென்றும், கடவுள் பயம் நீங்கிவிட்டால், நாஸ்திகம்பெருகி விட்டால், யாவரும் துன்மார்க்கத்தில் ஈடுபட்டு உலகமே கெட்டுவிடும் என்றும் ஆஸ்திகர்கள் சொல்லுகின்றனர். ஆனால் உண்மையை, உலகநடை முறையைக்கவனித்தால், கடவுள் நம்பிக்கையுடைய ஆஸ்திகர்கள் தான் பஞ்சமாபாதகம் செய்யும் பாபிகளாயும், துன்மார்க்கப்பிரசாரகர்களாயும் இருப்பதுகண்கூடு.

கடவுளுக்குப்பயந்தவர்கள் சன்மார்க்கர்களாக விருப்பவர் என்பது வெறும் பொய்யே! கடவுளுக்குப் பயந்த ஆஸ்திகர்களின் இருப்பிடமும், கூடுமிடமான கோவிலை எடுத்துக் கொள்ளுவோம். அக்கோவில்களில் நடக்கும் செயல்களை உற்றுநோக்குங்கள்! அங்கு பஞ்சமாபாதகங்களே தலைசிறந்து விளங்குகிறது. பஞ்சமாபாதகம் செய்யத்தூண்டுவது ஆஸ்திகமே என்பதற்கு ஆதாரம் காண்போம். முதலில்,

கொலை.

ஐயோ! எத்தனைகோடி உயிர்கள் சாமியின்பேரால், கோவிலின் முன்பு, ஆஸ்திகர்களால் கொலைசெய்யப்படுகிறது.! சாமியின் தண்டனைக்குப் பயந்து கொலை முதலிய துன்மார்க்கம்புரியான் என்பது ஆஸ்திகர் கூற்று, ஆனால் சாமியின் பேரால் பஞ்சமாபாதகத்திலொன்றான கொலைத்தொழில் புரிவதும் ஆஸ்திகரே யாவார். சாமிக்குக் கொலைகளால் உள்ளம் பூரிக்குமாம். என்னே அறியாமை! நரபலியும் சிலசாமிகள் கேட்கிறதாம்! சோமவாரப்பட்டி என்னும் ஊரில் ஒருபூசாரி சாமியின் வேண்டுகோளுக்கிணங்கி தன்மகனைக்கோவில் முன்புகொலை செய்தகொடுஞ்செய்கையை யாரும்மறந்திருக்க முடியாது. ஆடு, மாடு, கோழி, பன்றி இத்தகைய மிருகங்கள் கோடி கோடியாகக் கோவில் முன்புகொலை செய்யப்படுகிறது. முதன்முதலில் கன்னி மேயோவுக்குக்கல்கத்தாவில் கண்ணில்பட்டது இக்கொலை பாதகக் கொடுஞ்செயலே! எனவே ஆஸ்திகம் தான் பஞ்சமாபாதகத்தில் தலையானகொலை புரியத்தூண்டுகிறது.

களவு.

களவுக்குப்பேர் பெற்ற இடம்திருவிழாக்கூட்டமே! அனேகமாகக்கோவில்தான், திருட்டுகள்பலநடைபெறுகிறது. சாமிகளும் கூட தங்கள் நகை உடை முதலியவற்றைப்பறிகொடுத்து விடுகிறது! தினசரிதவராமல் சமாசாரப்பத்திரிக்கைகளில் "கோவிலில் திருட்டு" என்னும்செய்திகளே காணப்படுகிறது! களவுக்கு எற்ற இடம், கள்வர்குகை ஆஸ்திகர்களின் கோவிலாகவே யிருக்கிறது. கடவுளுக்குப்பயந்து மானிடர்பஞ்சமாபாதகம் செய்ய மாட்டார்கள்! என்று சொல்லும் ஆஸ்திகர்கள், கடவுளின்முன்பே பல திருட்டுகள்நடப்பதைக்கண்டும், இன்னும் கடவுள்நம்பிக்கையால் துன்மார்க்கம் ஒழியும் என்று சொல்ல எப்படித்துணிகின்றனர்.

பொய்.

இதுவும் கோவிலில்தான் குடியிருக்கிறது. அங்குள்ள பூசாரிக்குஇது தான் கைமுதல். இந்தமுதலைக் கொண்டுதான் அவன் வியாபாரம் சரிவரநடைபெற்று வருகிறது. மந்திரம், பூஜை, பிராயச்சித்தம், முதலியனவும் மோக்ஷநரகக் கூற்றும் பொய்யல்லாது வேறுஎன்ன? கடவுள் அரூபிஎன்று சொல்லிவிட்டு, பிறகு கல்லைக்கடவுளெனக் கைகூப்பித் தெண்டனிடச்சொல்லுவது பித்தலாட்டமல்லாது வேறுஎன்ன? கடவுள் பசி, தாகம், ஆசையற்றவர் என்று சொல்லிவிட்டு, பிறகு சாமிக்குப் புளியோதரை, பொங்கல் படைப்பதும், ஆடு, கோழி கொடுப்பதும் பித்தலாட்டம்தானே? கடவுளைக் காணல்பிரயாசை என்றும், பலஆயிரமாண்டு தவங்கிடந்தால் தான் கடவுள் தெரிசனம் காணமுடியுமென்றும்சொல்லிவிட்டு, பிறகு "சாமிஎன் மேல்வந்திருக்கிறது" என்று பூசாரி ஆடிப்பாடி ஆவேசங்கொண்டுபிதற்றுவது பொய்யா? பித்தலாட்டமா? மனிதன் கர்மத்திற்குத்தகுந்த பலன் அனுபவிப்பான் என்று சொல்லிவிட்டு, பிறகு பாபத்தைத்தீர்த்துக் கொள்ள பிராயச்சித்தம் செய்வது வீண்பொய்யல்லவா? சாமிஎல்லாம் வல்லவர், நிற்குணர், சர்வவல்லபர் என்று சொல்லிவிட்டு, தாழ்த்தப்பட்டவர்கள் கிட்டவந்தால் சாமி உயிர் விட்டுவிடும் என்றால் முன்னால் சொன்னது பொய்யா? அல்லது தீண்டாமைக்கூற்றுபொய்யா? இப்படியாகப்பஞ்சமா பாதகத்திலொன்றான பொய்க்கு இருப்பிடமும் ஆஸ்திகர்களின் கோவிலாகவேயிருக்கிறது.

கள்.

இதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. சாமிக்குக்கள்ளும், சாராயமும், புட்டி புட்டியாக வைத்து பூசைசெய்கின்றனர். நாம்நேரில்ஒரு கோவிலில் பார்த்ததுண்டு. சாமிக்குச் சாராயம் காலன்கணக்கில் வாங்கிப் படைத்து, பூஜைசெய்து, அதை ஆணும், பெண்ணும், பாலர்களும் குடித்து மதிமருண்டு கூத்தாடுகின்றனர். அந்தோ! சாமியும் சாராயக் குடிகாரன்தான் போலும்! பூசாரி மேல் சாமிவந்து தனக்கு "சாராய பூஜை" செய்யும்படியும் கேட்கிறதாம்! வேறுஎன்ன சொல்வது? பஞ்சமாபாதகத்திலொன்றான கள் குடியைச்சாமி கூட விரும்பினால் அவரைநம்பும் பக்தர்கள் சும்மாவிருப்பார்களோ? எனவே குடியும் ஆஸ்திகர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதாக

சன், இராமருடைய தனிமைக்கு வருத்தமும், கரதூஷணர்களிடத்தில் சினதிக்கொண்டு இராமருக்கு உதவி செய்வதற்காக சில படைவீரர்களைக் கூட்டிக்கொண்டு தெற்கு நோக்கிப் போனதாகவும், அவ்வரசனுடைய மூடத்தனத்தைக்கண்ட மந்திரிகள் அரசனுக்கெதிரில் ஒரு புராணிகரை அழைத்துச்சென்று இராமர் கரதூஷணர்களைக்கொன்று வெற்றியுடன் சீதையிருக்குமிடம் வந்து சேர்ந்தார் என்ற பாகத்தைப் படிக்கச்செய்து அரசனைப்பட்டணத்திற்கு அழைத்துக்கொண்டு வந்ததாகவும் ஆழ்வார்கள் சரித்திரம் கூறுகிறது. இப்பேர்ப்பட்ட மூடபக்தசிகாமணிகளைத்தான் ஆழ்வார்கள் என்றும், நாயன்மார்களென்றும் போற்ற இவ்விருபதாம் நூற்றாண்டிலும் அவர்களுக்குத் திருவிழாக்கள் கொண்டாடும் மக்கள் நிறைந்த இத்தேசம் என்றைக்குத்தான் கதிமோக்ஷம் அடையப்போகிறதோ? இவ்வாபாச பழக்கவழக்கங்களை கற்ற அறிஞர் அவ்வப்போது முயற்சி செய்தாரெனினும் மதத்தலைவர்களுடைய கொடுந்தண்டனைகளினாலும், நாஸ்திக பட்டத்தைக் காட்டி பயமுறுத்துவதினாலும் அவ்வறிஞர்களுடைய முயற்சிகளை நசுக்கிவிட்டார்கள். ஆனால் இப்பிரிட்டிஷ் அரசாங்கத்தில் மத ஆபாசங்களைப் பேசுவதற்காவதுஉரிமையிருப்பதாலும், அறிவு இயக்கத்தார் நாஸ்திக பட்டத்தை விருப்புடன் ஏற்றுக்கொள்வதாலும் நம் தமிழ்நாட்டில் அறிவு இயக்கத்தை இவ்வளவு தூரம் பரப்புவதற்கு அனுகூலமாயிருக்கின்றன. மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும் பகற் கொள்ளையடிக்கும் கூட்டத்தார்களும், அவர்களுடைய வாலைப்பிடிக்கும் தோழர்களும் தங்கள் ஆதிக்கமும், ஆதிக்கத்திற்காதரவாயிருந்த கடவுள், வேதம், மதம், சாஸ்திரம், புராணம், சடங்கு, ஜாதி, பழக்க வழக்கம் முதலிய எல்லா ஆபாசக்குப்பைகளும், சுயமரியாதைச்சுழல்காற்றில் சிக்குண்டு அல்லோல கல்லோலமாய்ச் சிதறிப்போவதைக்கண்டு மோக்ஷலோகம், நரகலோகம் என்ற நாடகங்களை நடித்துக்கொண்டிருந்த மதவேஷகர்கள் ஆங்கில அரசாட்சியால் தங்கள் மதக் கருவிகளைக்காப்பாற்ற முடியாதென்றெண்ணி ஆங்கில அரசாட்சியைக் கவிழ்க்க தேசீய சுயராஜ்ய நாடகங்கள் ஆட காங்கிரஸ் வேஷம்போட்டுக்கொண்டு நடிக்கிறார்கள் அன்பர்களே! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!!

வேஇருக்கிறது!

காமம்.

இதற்கும்பேர் போனவிடம் கோவிலேயாம்! கோவிலில் 'தேவதாசிகள்' பொட்டுக்கட்டி விடப்பட்டிருப்பது யாவரும் அறிந்தவிஷயம். சாமிக்கே தாசிகள் வேண்டும்போது அங்குள்ள ஆசாமிகளுக்கு அதில் வெறுப்புண்டாகுமோ? தோழர், காந்தியார் அவர்களே கோவிலை "விபசாரவிடுதி" என்றழைத்தாரென்றால் கோவிலில் "காமம்" (விபசாரம்) தலைசிறந்தது விளங்குவதற்கு வேறு உதாரணமும் வேண்டுமா! ஆஸ்தீகர்களின் சாமியே காமியாக விருந்தால் அவரின் பக்த கோடிகளின் குணவிசேஷத்தை நாம் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆஸ்தீகர்களின் புராணத்தையோ, அவர்களின் கடவுள் செய்த திருவிளையாடல்களையோ பார்த்தாலும் அங்கும் காமலீலைகளும் மற்ற பஞ்சமாபாதகங்களே மலிந்து கிடப்பதுவும் கண்கூடு.

எனவே 'கடவுள் நம்பிக்கை' இருந்தால் தான் மக்கள் நல்வழியில் செல்வர் எனும் ஆஸ்தீகர் கூற்றுக்கு ஆதாரமில்லையல்லவா? கடவுள் பயமுள்ளவர்கள்தானே கடவுள் திருச்சன்னிதானத்திலேயே பஞ்சமா பாதகள் புரிகின்றனர், எனவே, பஞ்சமாபாதகத்திற்கு உற்றவிடமான கோவிலையும், அதற்கு ஆதாரமான ஆஸ்தீகத்தையும் அடியுடன் ஒழிக்க வேண்டுமென்றுதான் சுயமரியாதை "நாஸ்தீகக்கோஷ்டியார்" முயல்கின்றனர்.

எனவே தோழர்களே! நாஸ்தீகம் யாரையும் பஞ்சமாபாதகம் செய்யத் தூண்டவில்லை என்பதும், ஆஸ்தீகமே பஞ்சமாபாதகத்தை ஆதரித்து வளர்க்கிறது என்பதையும் அறிந்தோம். ஆகவே பஞ்சமாபாதகம் செய்யத்தூண்டுவது எது? ஆஸ்தீகமேயாகும்! கொலைப்பீடம் எது? களவுச்சாலை எது? பொய்பிரசார சபை எது? கள்குடிச்சங்கம் எது? காமலீலாவிடுதி எது?

கோவில்! கோவில்!! கோவிலே!!!

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

பங்களாவது மனமொத்தகாதலர்களாய் இன்பவாழ்வு வாழ்ந்து வீரமுள்ள மக்களை ஈன்றாலொழிய நீங்கள் கோறும் சுயராஜ்யம்கிட்டாது. சுயராஜ்யம்கிடைத்தாலும் அது வெகுசீக்கிரத்தில் நாட்டில் இன்னும் பயங்கரமானநிலமையை யுண்டாக்கிவிடும் என்பதை உணருங்கள்.

சுயமரியாதை வீரர்களே? நீங்கள் கோறுவது போல்நம் நாட்டுமக்களின் வாழ்வில் ஆண் பெண் என்றவித்தியாசமின்றி இருவகுப்பாரும் சமத்துவமுடைந்து சமாதானத்துடனும், சுயமரியாதையுடனும், வாழவேண்டுமாயின், நம்நாட்டு தம்பதிகள்மனமொத்தகாதலர்களாய் இன்பவாழ்வு வாழ்ந்தாலன்றி நாம்கோறும் சீர்திருத்தமடைய முடியாதென்பது திண்ணம்.

பெண்கள் உரிமையைப் பாதுகாத்து சுதந்தரமடைய வீரத்துடன் முன்னிற்கும் சகோதரிகளே? உங்கள்கணவன் மார்கள் உங்களுடன் மனமொத்தகாதலுடன் இன்பவாழ்வு வாழ்ந்து பெண்ணினத்தின் உயர்வையும், எதிர்கால உலகின் தன்மை, பெண்சமூகத்தின் முற்போக்கையும், சுதந்தரத்தையும் பொருத்திருக்கிறதென்ற உண்மையை உணர்ந்தாலொழிய பெண் என்பது மனிதஇனத்திலும் மிருகஇனத்திற்கும்மத்தியமான ஒரு தனியினம் என்றும், காம விகாரத்தைத் தணிப்பதற்கும், பிள்ளைப் பெறுவதற்கும், சமைத்துப் போடுவதற்கும் மட்டும் தோன்றின இனம் என்ற மனோபாவம் அவர்களைவிட்டு நீங்கப்போவதில்லை.

அத்தகைய மனோ பாவம் ஒழிந்தாலொழிய பெண்கள் சுதந்தரமென்பதும், சமத்துவம் என்பதும் வீண் முயற்சியேயாகும்.

ஆதலால் நம் நாட்டில் தோன்றியிருக்கும் ஒவ்வொரு இயக்கங்களும் தங்கள் தங்களுடைய லக்ஷியங்களையடைந்து நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் நம் நாட்டுத் தம்பதிகள் மனமொத்த காதலர்களாய் வாழ்ந்து உண்மையின்பம் அடைதல் அவசியம், அவசியம் என்று மீண்டும், மீண்டும் வலியுறுத்திக்கூறுகிறோம்.

தம்பதிகளின் வாழ்வு காதல் வாழ்வாகத் திகழவொண்ணாது தடைப் படுத்திக்கொண்டிருக்கும் மதமோ, சாஸ்திரமோ, ஜாதி பாகுபாடுகளோ, பழக்கவழக்கங்களோ (முட்டாள்தனத்தில்) பெரியோர்களின் அபிப்பிராயங்களோ, பாட்டிமார்களின் உபதேசங்களோ எதுவாயினும் அதைத் தகர்த்து மக்கள் வாழ்வை இன்ப வாழ்வாகத் திகழச்செய்வதே நமது கடமை யென்பதை வலியுறுத்திக்கூறுவதுடன் விரிவஞ்சி நமது கட்டுரையை முடித்துக்கொள்ளுகிறோம்.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

உங்களுக்கு எடுத்துக்காண்பிப்போம். நீங்கள் யானைக்காலோடுதான் இருப்போம் என்றாலும் நாங்கள் கேட்கமாட் டோம். 144 போட்டாலும் ரயிலடியில் நின்றுவது "யானைக் கால் (பார்ப்பான்) ஜாக்கிரதை" என்று ரயில்வண்டியில் "திருடர்கள் ஜாக்கிரதை" என்று எழுதியிருப்பது மாதிரி சத்தம்போட்டு விட்டுத்தான் போவோம். அதெல்லாம் போகட்டும் பார்ப்பனரை நாங்கள் தானு துவேஷிக்கிறோம்? சுமார் 2000 வருஷத்திற்கு முந்தி புத்தர் பார்ப்பனப்பூண்டையறுப்பதற்கு வேண்டியதெல்லாம் செய்யவில்லையா? கபிலர்என்பவர் பார்ப்பனரைத்திட்டி அகவல்எழுதினரே? இன்னும் நீங்கள் மகான் என்று சொல்லும் விவேகானந்தர் "The Brahmin must suck out his own poison" என்று சொன்னரே! அதற்கு எத்தனை பார்ப்பனர் தூக்குப்போட்டுக்கொண்டு செத்துப்போனர்கள்? எத்தனை பார்ப்பன பக்தர்கள் நாக்கைப்பிடுங்கிக் கொண்டார்கள் என்று கேட்கிறேன்.

இனி கோவில்களை அழிக்கவேண்டுமென்று நாங்கள் சொல்வதாகச் சொன்னீர்கள். நாங்கள் மாத்திரமாசொல்கிறோம். எத்தனையோ நூறு வருஷங்களுக்கு முன்பு சித்தர்கள் என்பவர்கள் "நட்டகல்லை தெய்வம் என்று சொல்லாதே" என்றும், "தீர்த்தமாவதேதடா" என்றும் "தேவாரம் ஏதுக்கடி" என்றும் பாடினர்கள்! அதற்கெல்லாம் உங்கள் பிராணன் போய்விடவில்லையே! கல்லுப்போலவேதானே இருக்கிறீர்கள். இது மாத்திரமா? நீங்களே "மகாத்மா" என்று சொல்லும் காந்தியார் "கோவில்களெல்லாம் விபசார விடுதிகள்" என்று சொல்கிறாரே! அதற்கு எத்தனை ஆஸ்திகர்கள் கல்லில் முட்டிக்கொண்டு உயிரை விட்டு விட்டார்கள் என்று கேட்கின்றேன்.

ஆகவே எங்களை மிரட்டிவிடலாம் என்றோ, ஏமாற்றிவிடலாமென்றோ மாத்திரம் நீங்கள் நினைத்துவிட வேண்டாம்.

இனி நாங்கள் "கடவுள்" இல்லையென்று சொல்வதாகச் சொல்கிறார்கள். நாங்கள் அப்படிச் சொல்லவேயில்லை. அர்த்தம் தெரியாத ஒன்றை, ஒருவராலும் பார்த்திராத ஒன்றை "இல்லை" யென்று சொல்வதற்கு, எங்களுக்கென்ன, கிறுக்கா பிடித்திருக்கிறதென்று கேட்கிறேன். ஒரு வேளை நாங்கள் இல்லையென்று சொல்வதால் அந்தக் கடவுள் மூச்சுத்திணறி செத்துப்போகும் என்றால், அந்த மாதிரிக் கடவுள் உங்களை எத்தனை நாளைக்குக் காப்பாற்றப் போகிறதென்று கேட்கிறேன். இல்லை; சாகமாட்டார் என்றால்; நாங்கள் தான் இல்லையென்று சொல்வோம் என்று முன்னமேயே அவருக்குத் தெரியுமே! பின்னை ஏன் எங்களை யெல்லாம் படைத்தார்? இல்லை! இனிமேல் தான் அழிப்பார் என்றால், கொக்கு தலையில் வெண்ணெ வைத்துப் பிடிப்பது மாதிரி, எங்களைப் படைத்து விட்டு பிறகு அழிப்பானேன் படைக்காமலே இருந்திருக்கக் கூடாது. இது அவருடைய முட்டாள் தனமா? உங்களுடைய பிசகா என்பதை நீங்களே சொல்லுங்கள்.........

இனி, கடைசியாக பெண்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். நமது பெண்களில் அநேகர் "பிசாசு" ஆடுகிறார்கள் என்பது எனக்குத்தெரியும். எந்த மாதிரிப் பெண்கள் ஆடுகிறார்கள் தெரியுமா? சென்னைமேரிகல்லூரி பெண்கள் பிசாசு ஆடுவதில்லை. டாக்டர் அன்னிபெசண்டம்மையாருக்குப் பேய்பிடிப்பதில்லை. எனக்கெதிரே இருக்கும் சகோதரி அன்னபூரணியவர்களுக்குப் பிசாசுவராது. பிசாசு வரவழைக்கும் பூசாரி எங்கே இங்கு வந்து எனக்காவது சகோதரிகள் அன்னபூரணி, குஞ்சிதத்திற்காவது பிசாசு வரவழைக்கட்டும் பார்க்கிறேன். அவனுடைய கன்னம் உப்பிப்போகும் என்பது அவனுக்கே தெரியும். ஆகவே படிப்பில்லாததால்தான் நீங்கள் இவ்வளவு கேவலமான செயலுக்கு உட்படுகிறீர்கள். ஆகையால் ஒழிந்த நேரங்களில் நீங்கள் கட்டாயம் படிப்பைக்கற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

இனி ஒப்பாரி சொல்வது மற்றொரு அநாகரீக பழக்கம். ஆண்கள் ஒப்பாரி சொல்லுகிறார்களா? மாரடித்துக்கொள்ளுகிறார்களா? துக்கம் மிகுந்திருக்கும்போது பாட்டு வருமா? அதற்கு ராகம் வருமா? இந்த ஆபாசமான பழக்கத்தையும் அடியோடு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக எனக்கு இந்த சந்தர்ப்பத்தையளித்து தாங்களும் பொறுமையோடு கடைசிவரையில் கேட்டுக் கொண்டிருந்ததற்காக தங்களுக்கு எனதுமனமார்ந்த வந்தனத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

பன் அஸ்தியை எடுத்துக் கொண்டு போகிறவர்கள் துக்க மேலீட்டால் குடித்து விடுவார்களோ வென்று சொல்லுவது நியாயமல்ல. குடிகாரர்களாக விருந்தாலும் இராமேஸ்வரத்தில் குடியை நிறுத்தி வைப்பார்கள். தேவஸ்தானமும் கோவில் சிப்பந்திகளும் குடிப்பார்களென்று சொல்லுவது பாவம். குத்தகை ஆயிரத்திற்கு மேல் மரத்தின் தீர்வையும், ஆயிரத்திற்கு மேல் கள் சாராய விலையும் அப்படியே கடைச்சிப்பந்திச் செலவு உத்தியோகஸ்தர்கள் மரியாதை வரப்போகவிருக்கும் பெரிய உத்தியோகஸ்தர்கள் விருந்துச் செலவு, லாபம் இத்தனையும் சேர்த்தால் ஆயிரக்கணக்கான பணமாகிறது. அத்தனை கள்ளு சாராயத்தையும் குடித்து இத்தனை பணத்தையும் கொடுப்பவர்கள் யார்? ஒன்றோ பரலோகத்தையும் கோவிலையும் காட்டி பாடறியாமல் பணம் சம்பாதிப்பவர்களாக விருக்க வேண்டும்; அல்லது அங்கு ஆகாய வீதியில் நிறைந்து கிடக்கும் பிதிர்க்களாக விருக்க வேண்டும். இராமேஸ்வரம் என்னும் கோவில் ஒன்று அங்கில்லாவிட்டால் கள்ளு சாராயக் கடைக்கு அங்கு வேலையில்லை ஊருமிருக்காது மோட்ச வாயில் சாவியை கள்ளு சாராயக்கடையில் ஒப்படைக்கும் தெய்வமும், கள்ளு சாராயத்தை கடாட்சித்து வருகிறவர்களிடம் நரக மோட்ச வாயிலின் சாவி இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் சனங்களும்இருக்கும் வரையிலும்சன சமூகம் சன்மார்க்க மடையுமா? என்பதையும் நினைத்துப் பாருங்கள்.

என்னருமை அண்ணா! கோவிலென்றால் கன்னத்தில்அடித்துக்கொள்ளுகிறீர்களே யல்லாமல் அதனால் வந்தசன்மார்க்கம் இன்னதென்றுஎடுத்துக் காட்ட முடியாதஉங்களுக்கு அதனால் உண்டாயிருக்கும் தீமைகளை இன்னும் விபரமாக எடுத்துக்

காட்டுகிறேன். கவனமாய்க் கேளுங்கள். கோவில்களுக்கு யாத்திரை போகிறவர்கள் முதலில் பொய், ஏமாற்று, கபடம் இவைகளையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டும் அல்லது கோவிலிலிருந்து கற்றுக் கொண்டவர்களை துணையாகக் கூட்டிச் செல்ல வேண்டும். ஒரு தரம் எந்தக் கோவிலுக்காவது போய் வந்தவர்கள் அதைக் கற்றுக் கொண்டேயிருப்பார்கள். கோவிலுக்குப்போகிறவர்கள் பொய்யும் கபடமும் இல்லாவிட்டால் குருக்கள் அர்ச்சகர்கள் முதலியவர்களிடம் பெருந்தொல்லைப்பட வேண்டியிருக்கிறது. அதனால் கோயிலுக்குப் போய் வந்தவர்கள் மறுதடவை கோவிலுக்கு வரும்போதுபொய்யும், ஏமாற்றும் தானாகவே கற்றுக்கொள்ளுகிறார்கள். சிலர் சண்டை போடுகிறார்கள். சிலர் கோவிலைத் திட்டுகிறார்கள். சிலர் சுவாமியை வெறுக்கிறார்கள். கோவில் குருக்கள் அர்ச்சகர்கள் இவர்களை விபரம் தெரிந்தவர்கள் கண்டால் மதிப்பதில்லை. ஏன்? பொய்யும் புரட்டும் நிறைந்த தொழிலாகச் செய்து கொண்டு விட்டமையாலே யாத்திரை வாசிகள் செய்ய நினைக்கும் பணத்தில் அபிஷேகம் அர்ச்சனை செய்யும்படியாக நிற்பந்தித்து அதற்கு வேண்டிய தந்திரங்களைச் செய்து தள்ள முடியாத பொய்க் காரணங்களைச் சொல்லி துன்புறுத்துவதால் பணக்கார பக்தர்கள் ஏழை வேஷம் போடவேண்டியிருக்கிறது. பொய் சொல்லித் தப்பிக்க மனதைக் கபட மாக்கிக் கொள்ளவும் வேண்டியிருக்கிறது. அபிஷேகம் அதிகப்பணத்தில் செய்தால் கடைக்காரனிடம் அதிகம் கமிஷன் கிடைக்கும். அதிகச் சாமான்களை மறைத்தும் வைக்கலாம். தெய்வ காரியமானதினாலும் 'புண்ணியச் செயலென்று நினைப்பதாலும் பாவம் வந்து விடுமோ என்று பயப்படுவதாலும் கோவிலில் நடக்கும் நியாய விரோதங்களைப் பொறுத்துக் கொள்ளுகிறோம். பொறுத்துப் பொறுத்து நியாய அனியாயங்களைப் பகுத்துப் பார்க்கும் புத்தியில்லாத கோழைகளாகவே போய் விட்டோம்.

கோவிலுக்குள் நுழைந்தால் குருக்களொரு பக்கம், அர்ச்சகர்கள் மறு பக்கம், தான தருமப் புடுங்கல் ஒருபக்கம், பிச்சைக்காரர்தொல்லையும், திட்டுதலும் ஒரு பக்கம், தேவஸ்தான கணக்கொரு பக்கம், கூட்டத்தில் நெருக்கப்படாமல் பெண்களை துஷ்டர்களிடமிருந்து காப்பாற்றும் தொல்லை ஒரு பக்கம், பெண்கள் மாரை அழுத்தும் பக்தர்களைக் கண்டு பிடித்து, தேவஸ்தான அதிகாரி, குருக்கள் ஆகியவர்களிடம்சொன்னாலும்அவர்கள் அலட்சியப்படுத்திவிடும் அதிககோபம் ஒருபக்கம், திருடர்கள் பேரில் கண் ஒரு பக்கம், இத்தனை பேர்களுக்கும்கூலி, இனாம், உபசாரணைகள் செய்து தேக மலுத்து மனம் சோர்ந்து காசிக்குப் போனவன் சுண்டைக்காய் தின்பதில்லை என்னும் வைராக்கிய மடைவது போல இனி மேல் பெண்களோடு கோவிலுக்குப் போவதில்லை என்கிறவைராக்கியசீலர்களாய் கோவிலிலுள்ளவர்களின்புரட்டுகளையும்சண்டித்தனங்களையும்கண்டு நடுங்குகிறார்களே யல்லாமல் அந்த நிலையில் என்ன சன்மார்க்க ஒழுக்கங்களைக் கற்றுக் கொண்டு வந்தார்கள். மனச் சாந்திக்கோ மார்க்கமில்லை. அடங்க வேண்டிய ஆணவ காமியங்கள் அங்கு கண்ட காட்சியால் அதிகரித்தன. திடம் பட வேண்டிய புத்தியோ திக்கு முக்காடிற்றே ஒழிய திடம் பெறவில்லை. விசாரித்தறியும் அறிவிற்கோ சாவகாசமுமில்லை; விஷயமுமில்லை.

அதுவுமல்லாமல்மற்றநாட்டார்கள் கோவிலைப் போல நம் கோவில் தங்கம், வெள்ளி ஆபரணம் முதலிய செல்வத்தை சேகரித்து வைக்காமலிருந்தால் மற்றவர்கள் கொள்ளையடிக்க நம் நாட்டிற்கு வர ஏதுவில்லை. நாட்டிலுள்ள படித்தவன், அறிவிற்கு அதிகாரி, சன்மார்க்கம் போதிப்பவன் இவர்களெல்லாம் கோவிலை நம்பி அதை அவர்கள் தொழிற்சாலையாக்கி சோம்பேரிகளாய்ப் போனதினால் கொள்ளை கொடுக்க ஏதுவுமாயிற்று. ராஜா சேனைக்குக் குதிரை வாங்கக் கொடுத்த பணத்திற்கு தமிழ் நாட்டு மந்திரி கோவில் கட்டினதினால் தமிழ் ராஜியம் பலமிழந்து தெலுங்கருக்குத் தோற்றது. கோவில் துளசியை நம்பித் தெலுங்கர் கொல்லைப்பக்கம் ஓடினார்கள். கோவிலுக்கு மானியம் விடுவதிலே இருந்த மகாரஷ்டிரர்கள் அதிகாரம் மாண்டது. கோவிலைப் பற்றின பந்தோபஸ்து ஏற்பட்டு அறிவு விரிந்து கிடக்கும் ஆங்கிலேயர் அரசாட்சியிலும் நமது கோவில்கள் சனங்களின் செல்லங்களை யெல்லாம் உறிஞ்சிக் கொள்ளுவதால் சனங்களின் அறிவின் விர்த்திக்குப் பணமில்லாமல் போகிறது என்கிற விஷயங்களை யெல்லாம் விரித்தெழுத இந்த எட்டிலிட மில்லை. ஐரோப்பாவில் கோவிற்கட்டுக்கு குருட்டுத்தனமாய் கீழ்ப்பட்டிருந்த தலையை வெட்டித் தன் மதிப்பை காக்க கற்ற ஜாதியாரே தலை தூக்குவதியல்பாயிற்று என்பதை ஐரோப்பா சரித்திரம் படித்த நீங்களறிவீர்களே.

மத ஆதிக்கம் தேய்ந்து வரும் மேனாடுகளில் மதப் பற்றுள்ளவர்களும் கோவில் நம்பிக்கை யுள்ளவர்களும் மிகவும் சொற்பமே யாகும். ஆனால் அவர்கள் சன்மார்க்க வரம்பிற்கு மாறுபட்டு நடக்காமல் தேச பக்தி, பொது ஜனசேவை, உண்மை தயாள சிந்தை, பெருமை, சமூக ஊழியம் முதலிய அருங்குணங்கள் செழித்து, சாகுந்தருவாயில் கூட பெண்ஜாதி பிள்ளைகளுக்கு மட்டும் ஆஸ்தி வைக்காமல் ஏழை எளியவர்கள் முன்னேற்றமடைய பலதுறைக்கும் பொருள் வைத்து விட்டுப் போகிறதைப் பார்க்கிறோம். கடவுள் வணக்கத்தாலோ, வழிபட்டாலோ கர்மக்கிரியைகளாலோ முன்னிற்கு வந்து விடலா மென்று நினைத்து தங்கள் நன் முயற்சிகளையும் கடமைகளையும் கைவிட்டு சோம்பலோடு கூடினவர்களைப் போல பகுத்தறிவாளனிருக்காமல் தன் முயற்சியாலும், எத்தனத்தாலும், ஆராச்சியாலும் உழைப்பினாலும் எத்தகைய முடிவிற்கும் வருகிறான். நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட பிரகிருதியின் இரகசியங்களும் அதன் உபயோகங்களும் மாதா கோவிலிலிருந்தும் சிவன் கோவிலிருந்தும் உண்டான சன்மார்க்கந்தானா? ஆயிரக்கணக்கான வருஷங்களாக சனசமூகம் அடைந்த அனுபோகங்களால் பரந்த நோக்கோடு பார்ப்பவர்கட்கு உண்மை, தயாளம், அன்பு முதலிய குணங்கள் பொது நன்மையே உண்டாக்கியிருக்கின்றன வென்பதையும் அதற்கு மாறான குணங்கள் பொது நன்மையை விரோதித்திருக்கின்றன வென்பதையும் கண்டு கொண்டிருக்கின்றன. தாங்கள் சொன்ன பாம்புக்காவடிகளைப் பற்றியும் பழனிக்கோவில் சன்னதிக்கு முன்னால் தெண்டாயுதபாணியிருக்க, வேலிருக்க, வள்ளி தெய்வானையிருக்க, இருப்பன் கடம்பன்என்னும் காவற்காரர்களிருக்க, போகரென்னும் சித்தனிருக்க, வந்த பக்தர்களிருக்க தேவஸ்தானமிருக்க, சட்டமிருக்க, இவர்களுக்கு முன்னால் தெரிசனைக்கு வரும் பெண்களைப்பலாத்காரத்தால் மானபங்கம் செய்யும் கோவிலின் அருளைப் பற்றியும் நாளைச் சொல்லுகிறேன்.

கிறிஸ்துவ பாதிரியார் ஒழிந்த சீர்திருத்தத் திருமணங்கள்.

வால்குடி தாலூகா ஆங்கரை கிராமத்தில் கிறிஸ்துவ பாதிரியாரின் சடங்கின்றி சிக்கன முறையில் ஓர் சீர்திருத்தத்திருமணம் ஆங்கரை திரு. பி. ஆரோக்கியம் அவர்களுக்கும், அளக நல்லூர் திருமதி மாதரசு அவர்களுக்கும் 8—6—32 தேதி காலை 7 மணிக்கு நடைபெற்றது.

இதே தேதியில் வா. தா. நெய்குப்பை கிராமத்தில் 2 கலியாணங்களும், லா. தா. தச்சன் குறிச்சியில் 2 கலியாணங்களும் இதே முறையில் நடைபெற்றிருக்கின்றன. 9-6-32 தேதி சுமார் 10 கலியாணங்கள் இம் முறைப்படியே நடைபெறும் என தெரியவருகிறது.

கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

திருடனைப்பேய் என்று நினைத்தபேடித்தனம்.

கல்கத்தாவில் கரவிசந்திற்கருகில் ஒருவர் உறங்கிக்கொண்டிருந்தார். அவர் ஒருபெருஞ்சத்தங்கேட்டுவிழித்தார். எதிரே ஒருபெரிய உருவத்தைக்கண்டார். அந்த உருவத்தின் நாசிகள் பெரிதாகவும், கண்கள்வெண்மையாகவும் அகன்றும் உடல் அடர்ந்த மேகநிறமாகவும் தோன்றியது. அந்தப் பாகத்தில் பேய் உலாவுவதாக கேள்வியுற்றிருந்த அவர் அதைப்பேயதானெனக் கருதி தன் படுக்கையில் குப்புறவிழுந்து கொண்டு கூச்சலிட்டார். அந்த உருவம் அப்பொழுதுஅந்த இடத்தை விட்டகன்று காம்பவுண்டு சுவரை எறிக்குதித்தது அச்சங்கொண்டவர் இட்டசத்தங் காரணமாக அருகிலிருந்தவர்கள் விழித்துக்கொண்டனர். பலர் கூடினர். திடங்கொண்டனர், அந்த உருவம் ஒருவீட்டின் பின்புறம்சென்று அங்கிருந்த மெத்தைபடி வழியாக மேலே சென்றது. இச்சத்தங்கேட்டு அந்தவீட்டிலிருந்த ஒருவர் அம்மெத்தை மேலே தோன்றினார். இது கண்டஉருவம் உடனேஒருதுப்பாக்கியைக்கையிலெடுத்துக் கொண்டு அங்கிருந்தவர்களைச்சுட்டு விடும்பாவனையாக இறங்கிவந்தது. இதுகண்ட கூட்டத்தினர்பயந்து விலகினர். ஆனால் ஒருகாவற்காரன் மட்டும்அந்த மெத்தைப்படியின் கீழிருந்தான். அவன் அங்கிருந்ததை அந்தஉருவம் காணவில்லை. உருவம் மெத்தையை விட்டுக் கீழிறங்கியவுடன் அந்தஉரியாமாகாண வாசியான காவற்காரன் அந்த உருவத்தைத் தன்கையிலிருந்த இரும்புத்தடியால் ஒரேஅடி அடித்துக் கீழே வீழ்த்தி விட்டான். பிறகு அந்த உருவம் நேபாள வாசியென்றும், அவன் பலகன்னத்திருட்டுகளில்சம்பந்தப்பட்டிருக்கின்றானென்றும், போலீஸார் நெடுநாட்களாகத் தேடித் திரிகிறது இவனைத்தானென்றும், இவன் கையிலிருந்த துப்பாக்கிகல்கத்தாவின் மற்றொரு பாகத்திலிருக்கும் ஒருஐரோப்பியர் வீட்டில்களவு போன துப்பாக்கி யென்றும்தெரிய வந்தது.

உடனே தேவை.

நமது பத்திரிகை விற்பனை செய்வதற்கு கீழ்க்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனேதேவை,

சேலம்.
கோயம்புத்தூர்.
திருப்பூர்.
பொள்ளாச்சி.
ஜோலார்பேட்டை.
தஞ்சாவூர்.
வாணியம்பாடி.
திண்டுகல்.
விபரங்களுக்கு எழுதவும்.

மேனேஜர்,

Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்படுகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ஆ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—8—0.

ஆசிரியர்: —
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "காமத்எண்ணேயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனும். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.

உங்கள் கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Increase RETAINTIVE POWER and insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 40 Pills Rs. 5 only. Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To:

SAILASRAM (K)
Chandanpur (Khulna)
E. B. R.

மதனகாமேஸ்வர லேகியம் (*Regd*)

பெயர்பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1க்கு ரூ. 8. தபாற்செலவு 8 அணா. காலண்டரும் கியாட்லாக் இனம். (ரிஜிஸ்டர்)

சித்தஔஷதசாலை
கம்பெனி K. A.
போஸ்டு முல்லச்சேரி,
தென்மலையாளம்.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும். பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதிவேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால், எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.